நவம்பர் - டிசம்பர் 2023

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# நாற்பதாம் வருடம்

- முப்பத்தொன்பது ஆண்டுகள்
- மிரியாமின் வாழ்க்கை மற்றும் மரணம்
- மேரிபாவில் நியாயத்தீர்ப்பு
- ஏதோம் மற்றும் ஆரோனின் மரணம் வழியாகச் செல்லுதல்
- கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள்
- எமோரியர்களுடனும் மோவாபியர்களுடனும் யுத்தங்கள்
- மோசேயின் மரணம்
- நாற்பதாம் வருடத்தின் முடிவு
- யோர்தானுக்கு அப்பால் குடியேறுதல்

# நாற்பதாம் வருடம்
# ஆதியிலே



இஸ்ரயேல் 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தது நன்கு அறியப்பட்ட காரியம், எகிப்திலிருந்து இஸ்ரயேலின் அற்புத விடுதலையைத் தொடர்ந்து இஸ்ரயேல் கிட்டத்தட்ட எல்லாவிதமான சூழ்நிலைகளையும் உணர்ச்சிகளையும் அனுபவித்தது, ஆபிரகாமிடம் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குப் பயணம் செய்து அதைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று அவர்கள் நம்பினார்கள், இருப்பினும் பெரும்பாலானவர்களுக்கு அது கிடைக்கவில்லை.

அந்த பயணத்தின் முதல் இரண்டு வருடங்களைப் பற்றி வேதம் அதிகம் கூறுகிறது. ஆனால் 40 ஆம் ஆண்டிற்கு முன் இருந்த இடைப்பட்ட ஆண்டுகளை பற்றி எந்த பதிவும் இல்லை, ஹெரால்டின் இந்த இதழ், இஸ்ரயேலின் அந்த 40வது வருட அனுபவங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த பன்னிரண்டு மாதங்கள் அவர்கள் அனுபவித்த கஷ்டங்கள் கானானுக்குள் அவர்கள் நுழைவதற்கு ஆயத்தமாக இருந்தது,

"முப்பத்தொன்பது ஆண்டுகள்" என்ற பாடம், இஸ்ரயேலின் 40 ஆம் ஆண்டு வரையிலான அனுபவங்களை மதிப்பாய்வு செய்கிறது, ஆரம்பகால அனுபவங்கள், இஸ்ரயேலின் தயாரிப்பு மற்றும் பயிற்சியின் தேவையை அறிந்த தேவனின் பொறுமையைக் காட்டியது. இந்த காலத்தில் பலர் ஆழமான அவிசுவாசத்தையும் பிரதிபலித்தனர். இதனால் அவர்கள் 40 ஆண்டுகளுக்கு தேசத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

"மிரியாமின் வாழ்வு மற்றும் மரணம்" என்ற பாடம், 40 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட முதல் நிகழ்வை விவரிக்கிறது, ஒரு அற்புதமான பெண்ணான மிரியாமின் மரணம், பலம் மற்றும் பலவீனங்கள் கொண்ட வாழ்க்கை வரலாற்றை கூறுகிறது. மோசேயின் இந்த மூத்த சகோதரி, வனாந்தரத்தில் இஸ்ரயேலர் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தினார்.

"மேரிபாவின் தீர்ப்பு" என்ற பாடம், மோசேயின் அபரிமிதமான விசுவாசத்தின் மீது விழுந்த ஒரு குறையை பற்றி பகிர்ந்து கொள்கிறது, அந்த வருந்தத்தக்க நிகழ்வு இரண்டாவது முறையாக ஒரு கன்மலையிலிருந்து தண்ணீரை வழங்குவதில் இணைக்கப்பட்டுள்ளது.

"ஏதோமை கடந்து செல்தல் மற்றும் ஆரோனின் மரணம்" என்ற பாடம், இஸ்ரயேலர்கள் வசிக்கும் பகுதிகள் வழியாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நெருங்கிச் சென்ற போது அவர்களின் அனுபவத்தை ஆராய்கிறது. ஏதோம் வழியாக ஒரு அமைதியின் பாதையை உருவாக்க மோசே எடுத்த முயற்சிகளை இது விவரிக்கிறது.

"கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள்" என்ற பாடம், இஸ்ரயேலின் கானான் வருகைக்கு சில மாதங்கள் மட்டுமே இருந்த நிலையின், அவிசுவாசம் மற்றும் தேவ ஊழியர்களைக் கேள்வி கேட்பது என்ற காரணங்களால் பல இஸ்ரயேலர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பதை விவரிக்கிறது. இருப்பினும் எதிர்கால மீட்பின் அற்புதமான தீர்க்கதரிசனங்கள் இதில் உள்ளது.

"எமோரியர்கள் மற்றும் மோவாபியர்களுடனான யுத்தம்" என்ற பாடம், இஸ்ரயேலின் வடக்கே நடந்த அணிவகுப்பில், எமோரியர்களுடன் இஸ்ரயேலின் மோதல் மற்றும் வெற்றியை விவரிக்கிறது. பேராசை பிடித்த தீர்க்கதரிசியான பிலேயாமை பற்றியும் பேசுகிறது.

"யோர்தானின் அக்கரையில் குடியேறுதல்" என்ற பாடம், யோர்தானுக்கு கிழக்கே குடியேறிய கோத்திரங்களைப் பற்றி விளக்குகிறது, மனுகுலம் தனது சுதந்திரத்தை பெற்றுக்கொள்ளும் முன்னரே, அதனை பெற போகும் சபை, திரள் கூட்டத்தினர் மற்றும் முற்பிதாக்கள் ஆகியோரை இது பிரதிநிதித்துவப்படுத்துகிறது (இந்த கட்டுரையை ஹெரால்ட் இணையதளத்தில் காணவும்.)

"மோசேயின் மரணம்" என்ற பாடம், அவர்களின் மதிப்பிற்குரிய தலைவர் தேசத்திற்கு தந்த இறுதி அறிவுரைகளைப் பகிர்ந்து கொள்கிறது, மோசே அவர்களுடன் தேசத்திற்குள் நுழைய போவதில்லை, அவரது பிரியாவிடை அறிவுரைகள் வெகுவாக நெகிழும் வகையில் இருந்தது. யோசுவாவாவின் புதிய தலைமையின் கீழ் இஸ்ரயேல், கானான் மீதான வரலாற்றுப் படையெடுப்புக்குத் தயாராகி வருவதால், "நாற்பதாம் வருஷத்தின் முடிவு" திருப்திகரமான முடிவை அளிக்கிறது.

"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி

## நவம்பர் / டிசம்பர் 2023, தொகுப்பு 105, எண் 6


**முப்பத்தொன்பது ஆண்டுகள்** 2
ஒரு சுருக்கமான கண்ணோட்டம்

**மிரியாமின் வாழ்க்கை மற்றும் மரணம்** 6
இறுதி அனுபவங்கள்

**மேரிபாவில் நியாயத்தீர்ப்பு** 12
தண்ணீருக்கான தேவை

**ஏதோம் மற்றும் ஆரோனின் மரணம் வழியகச் செல்லுதல்** 21
ஆசாரியத்துவத்தில் வாரிசு

**கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள்** 26
பாவத்திலிருந்து விடுதலை

**எமோரியர்களுடனும் மோவாபியர்களுடனும் யுத்தங்கள்** 35
குற்றச்செயலுக்குத் துணை நின்ற பிலேயாம்

**மோசேயின் மரணம்** 41
ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட வெகுமதி நிலுவையில் உள்ளது

**நாற்பதாம் வருடத்தின் முடிவு** 49
யோசுவா நியமிக்கப்பட்டார்

**யோர்தானுக்கு அப்பால் குடியேறுதல்** 53
ரூபன், காத் மற்றும் மனாசேன் ஒரு பகுதி



*Author to come*

### ஒரு சுருக்கமான கண்ணோட்டம்

# முப்பத்தொன்பது ஆண்டுகள்

"இஸ்ரயேல் வம்சத்தார் பண்ணும் எல்லாம் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருந்தது." (யாத்திராகமம் 40:38)

குறைவான விசுவாசம் பல விளைவுகளை ஏற்படுத்துகிறது. பழைய மாம்ச இஸ்ரயேலர்களுக்கு, அதன் விளைவுகள் மிக சோகமனவை. அதிசயமான முறையிலும் வரலாற்று ரீதியாக இது வரை நடைபெறாத வகையிலும் இஸ்ரயேலர்கள் விடுவிக்கப்பட்ட பிறகு, வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் விசுவாசத்துடன் நுழைவதற்கு எல்லா காரணங்களும் இருந்தது. பார்வோனிடமிருந்து தப்பிக்க பயம் மற்றும் நிச்சயமற்ற தன்மையைத் தொடர்ந்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் இஸ்ரயேலர் விசுவாசத்தில் இன்னும் பலவீனராக இருந்தார்கள். இதை அறிந்த யெகோவா தேவன் அவர்களுடைய விசுவாசத்தை கட்டி எழுப்புவதற்காக வடிவமைக்கப்பட்ட தொடர்ச்சியான அனுபவங்களை ஆயத்தம் செய்தார்.

இஸ்ரயேல் வனாந்தரத்தில் அலைந்த முதல் 39 வருடங்களைப் பற்றி யாத்திராகமம், லேவியாராகமம், மற்றும் எண்ணாகமம் புத்தகத்தில் பதிவுகள் காணப்படுகிறது. இஸ்ரயேல் எகிப்தை விட்டு வெளியேறிய முதல் வருடத்தில் ஆசரிப்புக் கூடாரத்தை அமைப்பதற்காக காரியங்களை யாத்திராகமம் வழங்குகிறது. லேவியராகமம் காலக் கெடுவைக் கொண்டிராவிட்டாலும், இரண்டாம் ஆண்டின் குறிப்பிடத்தக்க பல நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளது. எண்ணாகம புத்தகத்தில் முதல் 19 அதிகாரங்களில் இஸ்ரயேலின் இரண்டாம் ஆண்டு அனுபவங்கள் விவரிக்கப்படுகிறது. அதை தொடர்ந்து இஸ்ரயேல் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த முதல் 39 வருடங்களின் சுருக்கமான கண்ணோட்டம் காணப்படுகிறது.

## முதல் வருடம்

செங்கடலிலிருந்து வெளிவந்த இஸ்ரயேல் ஜனங்கள் உற்சாகமாக சூர் வனாந்தரத்திற்கு அணிவகுத்துச் சென்றனர், தேவனுடைய ஜனங்களாக இருப்பதிலும், விசுவாசமுள்ள ஆபிரகாமின் சந்ததியாராக யெகோவா தேவன் அவர்களுக்கு வைத்திருந்த திட்டங்களுக்காகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். "கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரயேலர் கண்டார்கள், அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்." (யாத்திராகமம் 14:31)

தேசத்தைப் பற்றி என்ன ஒரு நேர்மறையான விளக்கம். அவர்கள் யெகோவா தேவன் மீதும் அவருடைய ஊழியரான மோசே மீதும் "பயந்து" "விசுவாசம் "கொண்டார்கள். நீடித்த உறவை உருவாக்க இது ஒரு சிறந்த அடித்தளமாக இருந்தது.

தேசம் வனாந்தரத்தில் பயணம் செய்தபோது, அவர்களுக்கு முதல் சோதனை நேரிட்டது. யெகோவா தேவன் அவர்களை அக்கினி ஸ்தம்பத்தைக் கொண்டு வழிநடத்தினார், அவர்களுக்கு தண்ணீர் இல்லை என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆனால் அவர்கள் தேவன் பேரில் விசுவாசம் கொண்டிருக்கிறோம் என்று சொல்லும் அளவுக்கு தேவனை நம்பவில்லை. மூன்று நாட்களாக தண்ணீர் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டார்கள். தேவன் அவர்களை ஒரு அற்புதமான நீர் தடாகத்திற்கு அழைத்துச் சென்றார். ஆனால் அங்குள்ள தண்ணீர் கசப்பாக இருந்தது. அதற்கு "மாரா" என்பதாகும். அவர்களின் எதிர்வினை மிகவும் வருத்தமாக இருந்தது. "அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து-என்னத்தைக் குடிப்போம்? என்றார்கள்." (யாத்திராகமம் 15:24)

செங்கடல் வழியாக அனுப்பப்பட்ட பிறகு இதுவே முதல் சோதனை. அவர்கள் தோல்வியடைந்தனர். அவர்கள் யெகோவா



தேவனையோ மோசேயையோ நம்பவில்லை, அவருக்கு எதிராக முணுமுணுத்தார்கள். தேவன் பிரச்சனையை சரிசெய்து அவர்களுக்கு தித்திக்கும் தண்ணீரைக் கொடுத்தார். ஆனால் விசுவாசத்தின் இந்த முதல் சோதனை முன்னேற்றத்திற்கான தேவையை வெளிப்படுத்தியது.

யாத்திராகமத்தின் அடுத்த அதிகாரம் இரண்டாவது சோதனையை விவரிக்கிறது. இஸ்ரயேல் ஜனங்கள் சீன் வனாந்தரத்தில் பயணத்தைத் தொடர்ந்தார்கள். இந்த அனுபவம் அவர்களின் முதல் பஸ்காவிற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு, இரண்டாம் மாதம் 15ம் தேதி வரை நீடித்தது. குறைந்தபட்சம் ஜனங்களின் நிலைப்பாட்டில் இருந்து இஸ்ரயேலுக்கு விஷயங்கள் சரியாக நடக்கவில்லை. "அந்த வனாந்தரத்திலே இஸ்ரயேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து - நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையில் உட்கார்ந்து அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிளை, இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள்." (யாத்திராகமம் 16:2,3)

உணவுப் பொருட்கள் குறைந்தன மற்றும் பயணத்தின் சிரமங்கள் தேசத்தில் பலருக்கு பாரமாயிருந்தது. முழு அனுபவத்தைப் பற்றியும் அவர்களுக்கு இரண்டாவது எண்ணங்கள் தோன்றியது. அவர்களின் மனம் எகிப்தில் கிடைத்த நிறைவான உணவுக்கு திரும்பியது. ஆச்சரியப்படும் விதமாக அவர்கள் எகிப்திய அடிமைத்தனத்தின் கடுமையான கஷ்டங்களை மறந்துவிட்டார்கள்! ஆனால் அவர்கள் அடிமைகளாக இருந்ததையும், இப்போது புதிய சவால்களுடன் புதிய சூழ்நிலையில் வைக்கப்பட்டிருப்பதையும் யெகோவா தேவன் நினைவு கூர்ந்தார். அவர் இரக்கத்தினால், அவர் தேசத்திற்கு அப்பத்தை வழங்குவதாக மோசேயிடம் கூறினார்.

இவ்வாறு தேவனிடமிருந்து நேரடியாக வழங்கப்பட்ட உணவாகிய மன்னா வந்தது. அதிலும் காடை வடிவில் இறைச்சியை ஜனங்களுக்கு அளித்து, அவர் தான் அவர்களின் தேவன் என்பதை ஜனங்களுக்கு நினைப்பூட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனங்கள் ஆசீர்வாதமாக இருப்பதற்கு யெகோவா தேவன் ஒரு புதிய நியமனத்தை உருவாக்கினார். அது ஓய்வுநாள் பிரமாணம். "அவன் அவர்களை நோக்கி - கர்த்தர் சொன்னது இதுதான், நாளைக்குக் கர்த்தருக்குரிய



பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு, நீங்கள் சுடவேண்டியதைச் சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்கள் என்றான். மோசே கட்டளையிட்டபடியே, அதை மறுநாள்வரைக்கும் வைத்துவைத்தார்கள், அப்பொழுது அது நாறவும் இல்லை, அதிலே பூச்சிபிடிக்கவும் இல்லை. அப்போது மோசே - இதை இன்றைக்குப் புசியுங்கள் இன்று கர்த்தருக்குரிய ஓய்வுநாள் இன்று நீங்கள் அதை வெளியிலே காணமாட்டீர்கள். ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக, ஏழாம் நாள் ஓய்வுநாளாயிருக்கிறது, அதிலே அது உண்டாயிராது என்றான்." (யாத்திராகமம் 16:23-26)

அந்த முதல் ஆண்டில், இஸ்ரயேல் ரெவிதீமின் பகுதிக்கு பயணித்தார்கள். ஆனால் மீண்டும் தண்ணீர் இல்லாமல் தவித்தனர். அவர்கள் தேவனை நம்புவதற்குப் பதிலாக, அவர்கள் மீண்டும் முணுமுணுத்தனர். "அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடி - நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தரவேண்டும் என்றார்கள். அதற்கு மோசே - என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரிட்சை பார்க்கிறீர்கள் என்றான். ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர்த் தவனமாயிருந்தபடியால், அவர்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து - நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டுவந்தீர் என்றார்கள்." (யாத்திராகமம் 17:2,3)

நம்முடைய பார்வையில் இருந்து, அவர்களின் அழ்ந்த விசாவச குறைவை எண்ணி ஆச்சரியப் படுகிறோம். மோசே அவர்களுக்கு தண்ணீரை தரவேண்டும் என்று அவர்கள் கோரினர் ! அவர்கள் தேவனை எங்கே அங்கீகரித்தார்கள் ? ஒவ்வொரு

காலையிலும் தங்கள் தேவைகளை மோசே அல்ல, தேவனே அனைத்தையும் வழங்குகிறார் என்பதை பார்க்க முடிந்தது. எனவே அவர்களுடைய விசுவாசமற்ற கோரிக்கை மோசேக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவர்கள் யெகோவா தேவனை சோதிக்கிறார்கள் என்று மறுபடியும் சொல்லி, அவர்களைக் கடிந்துகொண்டார்.

ஆனால் ஜனங்களோ மோசேக்கு செவி கொடுக்கவில்லை. மோசே தன் உயிரைக் குறித்து அஞ்சும் அளவுக்கு அவர்கள் கொந்தளித்தனர். "மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு - இந்த ஜனங்களுக்கு நான் என்ன செய்வேன் இவர்கள் என்மேல் கல்லெறியப் பார்க்கிறார்களே என்றான்." (யாத்திராகமம் 17:4)

நிச்சயமாக, மோசேக்கு எதிரான கலகத்தில் அவர் கொல்லப்படுவதை கர்த்தர் அனுமதிக்க மாட்டார். அதே நேரம் ஜனங்களின் தண்ணீரின் தேவையை அவர் புரிந்து கொண்டார். ஓரேபின் இந்தப் பகுதியில் உள்ள ஒரு குறிப்பிட்ட பாறையை மோசேயிடம் கர்த்தர் காட்டி, அதைத் தன் தடியால் அடித்து, ஜனங்களுக்கு தண்ணீரை அளிக்கச் சொன்னார். முழு செயல்முறையும் மூப்பர்களை சாட்சிகளாகக் கொண்டு செய்யப்பட்டது. இது யெகோவா தேவனிடமிருந்து ஒரு அதிசயம் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவியது. யாத்திராகமம் 17:7 ல் இவ்வாறு முடிவடைந்தது."இஸ்ரயேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரிட்சை பார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாரா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்."

சங்கீதம் 95:8, 9 மற்றும் எபிரெயர் 3:8, 9 ஆகிய வசனங்களில் இந்தப் பத்தியுடன் தொடர்புடைய ஒரு சுவாரஸ்யமான ஆவிக்குரிய பாடம் உள்ளது. எபிரெயர் 3:8லிருந்து மேற்கோள் காட்டுகிறோம். "வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்." மாரா" மற்றும் "மேரிபா" என்பதன் நேரடியான அர்த்தத்தை நினைவுக்கூர்ந்து, இந்த வசனம் இரண்டு அர்த்தங்களைக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். மேரிபா - கோபமூட்டுவது. மாரா - சோதனை.

இவ்வாறாக, தேவன் இந்த சம்பவத்திற்கும், அலைந்து திரிந்த 40 ஆண்டுகள் முழுமைக்கும் கோபமூட்டல்களாலும், சோதனைகளாலும் நிரம்பியிருப்பதற்கும் நம் கவனத்தை ஈர்க்கிறார். இது உண்மையிலேயே வரலாற்றின் சோகமான பதிவு,



ஆனால் இந்த சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களுக்கு விசுவாசத்தின் முக்கியமான மற்றும் பயனுள்ள படிப்பினைகள் நிறைந்த ஒன்றாகும். உண்மையிலேயே கனிவான இருதயம் உள்ளவர்கள் தேவனுடைய வழிகாட்டுதலிலும் பாதுகாப்பிலும் நம்பிக்கை கொள்ளும். இது மாம்சத்தின் எண்ணங்களையும் நோக்கங்களையும் கவனமாகக் காத்து, தன்னடக்கத்தையும் தெய்வீக நம்பிக்கையையும் பயன்படுத்துகிறது. மற்றவர்களின் பலவீனங்கள் மூலம் விசுவாசத்தின் நடைமுறைப் படிப்பினைகளை தேவன் மீண்டும் ஒரு முறை பகிர்ந்துள்ளார்.

இஸ்ரயேலருக்கு, யெகோவா தேவன் அற்புதமாக தண்ணீர் கொடுத்தார். அவர்கள் அமலேக்கிற்கு எதிராக இராணுவ வெற்றியைப் பெற்றனர். சீனாய் மலைக்கு முன்பாக முகாமிட்டு தேவனுடைய குரலைக் கேட்டார்கள் !.இருப்பினும், இந்த வல்லமையுள்ள அனுபவங்கள் நடந்தபோதிலும் விசுவாசத்தின் பாடம் அவர்களின் இருதயங்களில் பொறிக்கப்படவில்லை.

அவர்கள் வெளியேறிய மூன்று மாதத்திற்குள் தேவன் அவர்களுக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையையும், ஆசரிப்புக் கூடாரம் கட்டுவதற்கான வழி முறைகளையும் வழங்கினார். இது யாத்திராகமத்தின் எஞ்சிய பகுதியை அதிகாரம் 19 முதல் இறுதி வரை ஆக்கிரமித்துள்ளது.

## இரண்டாம் வருடம்

இரண்டாம் வருடம் கூடாரம் அமைப்பதோடு தொடங்கியது. "இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம்பண்ணப்பட்டது." (யாத்திராகமம் 40:17)

லேவியராகம புத்தகம் நியாயப்பிரமாணம் மற்றும் அதன் விவரங்கள் பற்றிய முழுமையான விளக்கத்தை வழங்குகிறது. ஆனால் ஐந்து

ஆகமங்களைப் போல இது ஒரு வரலாற்றுப் பதிவு அல்ல. எண்ணாகமத்தின் புத்தகம் இரண்டாம் ஆண்டு பற்றிய விவரத்தை தொகுக்கிறது.

நாம் சந்திக்கும் முதல் விஷயம் மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கான யெகோவா தேவனுடைய கட்டளையாகும். "இஸ்ரயேலர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் முதல் தேதியில், கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலிருக்கிற ஆசரிப்புக் கூடாரத்திலே மோசேயை நோக்கி - நீங்கள் இஸ்ரயேல் புத்திரரின் முழுச் சபையாயிருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர் பேராக எண்ணித் தொகையேற்றுங்கள். இஸ்ரயேலிலே இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்துக்குப் புறப்படத்தக்கவர்கள் எல்லாரையும் அவர்கள் சேனைகளின்படி நீயும் ஆரோனும் எண்ணிப்பார்ப்பீர்களாக." (எண்ணாகமம் 1:1-3)

குறிப்பிடத்தக்க வகையில், லேவி கோத்திரம் தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இருந்து விலக்கப்பட்டனர். (எண்ணாகமம் 1:47) லேவியர்கள் தங்கள் ஜனத்தொகையை தாங்களே கணக்கெடுத்தனர். இதை எண்ணாகமம் 3ம் அதிகாரத்தில் காணலாம். இந்த பிரிவு இரண்டு நோக்கங்களுக்காகச் செயல்பட்டது. முதலாவது இந்த ஜனத்தொகையின் கணக்கெடுப்பு, இராணுவ நடவடிக்கைகளுக்காக தேசம் எத்தனை வீரர்களைக் கொண்டிருந்தது என்பதற்கான தெளிவான பார்வையை கொடுத்தது. இராணுவ சேவையிலிருந்து லேவி கோத்திரம் விலக்கப்பட்டிருந்தது, எனவே தனியாக எண்ணப்படுவது அவசியமாக இருந்தது.

இரண்டாவதாக, லேவி கோத்திரம் ஆசாரிய கோத்திரமாக மாற வேண்டும் என்று யெகோவா தேவன் கட்டளையிட்டார். இது முன்பு முதல் பிறந்தவர்களால் நடத்தப்பட்டது. இந்த பரிமாற்றத்திற்கு லேவியர்களின் எண்ணிக்கை மற்றும் முதலில் பிறந்தவர்களின் எண்ணிக்கை இரண்டும் தேவைப்பட்டது. இந்த பரிமாற்றம், தேர்தல் வரியையும் உள்ளடக்கியது, மதப் பொறுப்புகளை லேவியர்களுக்கு முறையாக மாற்றியது.

எண்ணாகமம் 9 இல் தேசம் பஸ்காவைக் கொண்டாட அறிவுறுத்தப்படுகிறது.

மோசேக்கு எதிராக ஆரோனும் மிரியாமும் முணுமுணுப்பதை எண்ணாகமம் 12 விவரிக்கிறது. அவர்களின் மனப்பான்மையால் யெகோவா தேவன் கோபமடைந்து மிரியாமை குஷ்டரோகியாக்கினார். மிரியாம் குணமடையும்படி மோசே வேண்டினார், யெகோவா தேவன் அதற்கு செவி கொடுத்தார். இருப்பினும், மிரியாம் ஏழு நாட்களுக்கு பாளையத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அது நிச்சயமாக அவளது வாழ்நாள் முழுவதும் அவளுடைய நினைவுகளில் இருந்திருக்கும்.

எண்ணாகமம் 13 மற்றும் 14 ம் அதிகாரங்களில் தேசம் வேவு பார்க்க அனுப்பப்பட்ட சோகமான நிகழ்வுகள் காணப்படுகிறது. யோசுவா மற்றும் காலேப்பைத் தவிர, மற்றவர்கள் கொடுத்த அறிக்கையை, இஸ்ரயேல் ஜனங்கள் ஏற்றுக்கொண்டதால், தேசத்திற்கு எதிரான ஒரு சோகமான தீர்ப்பைக் கொண்டுவந்தது. அவர்கள் தேசத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட வில்லை. மாறாக 40 வருடங்கள் அலைந்து திரிவார்கள் என்றும் 20 வயது மற்றும் அதற்கு மேல் உள்ள அனைவரும் வனாந்தரத்தில் இறந்துவிடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

எண்ணாகமம் 16, மோசேக்கு எதிராக கோராகு மற்றும் 250 பேரின் கலகத்தை விவரிக்கிறது. கிளர்ச்சியாளர்கள் அனைவரும் தேவனால் கொல்லப்பட்டனர். ஆனால் ஜனங்கள் மோசேயைக் குற்றம் சாட்டினார்கள்! இது தேவனிடமிருந்து மேலும் ஒரு வாதைக்கு வழிவகுத்தது, மேலும் 14,700 பேர் மரித்தார்கள். மோசே தனது வாயின் வார்த்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையும், லேவி கோத்திரம் அவரது ஆசாரிய ஊழியத்திற்காக தேவன் தெரிந்துகொண்டார் என்பதை உறுதிப்படுத்த, எண்ணாகமம் 17ம் அதிகாரத்தில், ஆரோனுடைய கோலை தேவன் தேர்ந்தெடுத்ததையும் ஆசீர்வதித்ததையும் பதிவு செய்கிறது. அது அவர்களின் பயணத்தின் இறுதி வரை மோசேக்கு எதிரான முறுமுறுப்புகளை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கும் என தோன்றுகிறது.

### 37 வருடங்கள் அமைதி

கோராகுவின் கிளர்ச்சிக்குப் பிறகு, அடுத்த 37 ஆண்டுகளைப் பற்றி வேதாகமத்தில் எந்த பதிவுகளும் இல்லை. இருப்பினும், அவர்களின் 42 இடங்களில் பாளையம் இறங்கின பட்டியலை எண்ணாகமம் 33இல் காணப்படுகிறது. இது முழு 40 ஆண்டுகளையும் உள்ளடக்கியுள்ளது. அவர்கள் எங்கிருந்தார்கள் என்ற விவரங்களை வழங்குகிறது. ஆனால் இந்த நீண்ட இடைப்பட்ட காலத்திற்கு காலக்கெடு எதுவும் கொடுக்கப்படவில்லை. இந்த விவரம் எண்ணாகமம் 20 இல் மீண்டும் தொடங்குகிறது, அவர்கள் அலைந்து திரிந்த கடைசி ஆண்டு, இஸ்ரயேலின் 40 வது ஆண்டாகும். அது ஒரு முக்கியமான வருடமாக இருந்தது பயணத்தின் முதல் இரண்டு வருடங்கள், வரலாற்று அனுபவங்கள் நிறைந்திருந்தது போல, கடைசி 40 வது வருடமும் வரலாற்று அனுபவங்கள் நிறைந்ததாக இருந்தது.

## இறுதி அனுபவங்கள்

# மிரியாமின் வாழ்க்கை மற்றும் மரணம்



*Author to come*

"இஸ்ரயேல் புத்திரரின் சபையார் எல்லாரும் முதலாம் மாதத்தில் சீன் வனாந்தரத்திலே சேர்ந்து, ஜனங்கள் காதேசிலே தங்கியிருக்கையில் மிரியாம் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்பட்டாள்." (எண்ணாகமம் 20:1)

இஸ்ரயேல் அலைந்து திரிந்த 40 வது வருடத்தில், ஆரோன் மற்றும் மோசேயின் சகோதரியான மிரியாமின் மரணம் முதல் நிகழ்வாக விவரிக்கப்படுகிறது. அவளுடைய முந்தைய அனுபவங்கள் யூத வரலாற்றின் ஒரு பகுதியாக மாறிவிட்டன. பெயர் குறிப்பிடாவிட்டாலும், குழந்தையாகிய மோசேயை நைல் நதிக்கரையில் பேழையில் ஏற்றிய பிறகு அவருக்கு என்ன நடக்கும் என்பதை இந்த மிரியாம் கவனித்துக் கொண்டிருந்தாள். (யாத்திராகமம் 2:3,4) இந்த மிரியாம் தான் பார்வோனின் மகளிடம் சென்று குழந்தைக்குப் பாலூட்டுவதற்கு ஒரு எபிரெயப் பெண்ணைக் கண்டுபிடிக்க முன்வந்தாள். (யாத்திராகமம் 2:7,8) மிரியாம் தன் தாய் யோகெபெத்தை அழைத்து வந்தாள், மோசே பார்வோனின் வீட்டில் வளர்ந்த போது அவள் அவனுக்கு தாதியானாள்.

அடுத்ததாக, எகிப்திலிருந்து இஸ்ரயேலர்கள் வெளியேறும் போது மிரியாம் செங்கடலில் பார்வோனின் இரதங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு யெகோவா தேவனின் அற்புதமான பாடல் ஆராதனையை வழிநடத்துவதை நாம் பார்க்கிறோம். சுவாரஸ்யமான மற்றொரு காரியம், அவள் ஒரு "தீர்க்கதரிசி" என்றும் அழைக்கப்பட்டாள். (யாத்திராகமம் 15:20) செங்கடல் விடுதலையில் பாடுவதும் நடனமாடுவதும் இந்த தலைமையைத் தவிர அவள் ஏன் இவ்வாறு விவரிக்கப்படுகிறாள் என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை.

மிரியாமின் அடுத்த தோற்றம் சாதகமாக இல்லை. மிரியாம் மற்றும் ஆரோனின் அதிருப்தியைப் பற்றி கூறுகிறது. "எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும், ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய் பேசி.." (எண்ணாகமம் 12:1) இஸ்ரயேலரல்லாத மோசேயின் மனைவியான சிப்போராளினால், சிலருக்கு பொறாமை வந்தது. வனாந்திர பயணத்தின் போது மிரியாம் எபிரெய பெண்களில் மிக முக்கியமானவளாக



இருந்தாள். ஆனால் இப்போது, வனாந்தரத்தில், மோசே அவரது மனைவி மற்றும் இரண்டு மகன்களுடன் இணைந்தார், ஆகவே சிப்போராளுக்கும் சில முக்கியத்துவங்கள் கொடுக்கப்பட்டன. சிப்போராளும் முக்கியமானவளாக கருதப்பட்டாள். ஆரோனும் ஓரளவு இதில் பாதிக்கப்பட்டார் என்று தெரிகிறது. ஏனெனில் இருவரும் பாவம் செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்களின் பாவம் இரண்டு மடங்காக இருந்தது. முதலாவது பெருமை என்ற பாவம், மோசேயின் குடும்பத்தின் ஒரு பகுதியாக, அவர்கள் குடும்பத்திற்கு வெளியே உள்ளவர்களை விட ஏதோ ஒரு வகையில் உயர்ந்தவர்கள் என்று அவர்களுக்கு உணர்த்தியது. சிப்போராள் ஒரு எத்தியோப்பிய ஸ்திரீ என்ற உண்மைக்கு நம் கவனம் ஈர்க்கப்படுகிறது. மோசேயின் பிரமாணத்தில், இஸ்ரயேலர்கள் அந்நியரை திருமணம் செய்து கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்தது. இது பெரும்பாலும் யூதர்கள் மத்தியில் தங்களை உயர்ந்தவர்கள் என்றும் மற்றவர்களை கீழ்த்தரமானவர்கள் என்ற மனப்பான்மைக்கு வழிவகுத்தது. "அவர்களோடே சம்பந்தம் கலவாயாக, உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக, என்னைப் பின்பற்றாமல், அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப்பண்ணுவார்கள், அப்பொழுது கர்த்தருடைய கோபம் உங்கள் மேல் மூண்டு, உங்களைச் சீக்கிரத்தில் அழிக்கும்."(உபாகமம் 7:3, 4) இந்த பிரமாணத்தின் நோக்கம் ஆபிரகாமின் சந்ததியின் தூய்மையைப் பாதுகாப்பதாகும், ஏனெனில் கிறிஸ்து அவருடைய மாம்சமான சந்ததிகளான இஸ்ரயேல் மூலம் வருவார் என்பதே. நான்காவது வசனம் குறிப்பிடுவது போல, புறஜாதி தெய்வங்களை வணங்குபவர்களுடன் திருமண உறவுகளில் தவிர்க்க முடியாமல் உருவாவதற்கான சோதனைகளைத் தவிர்ப்பதற்கான ஒரு வழி முறையாகும். {இயேசுவின் மூதாதையான ரூத், ஒரு மோவாபியராக இருந்ததினால், இஸ்ரயேலரில் ஒருவரை திருமணம் செய்து கொள்வதற்கு கோட்பாட்டளவில் தடை விதிக்கப்பட்டிருந்தாலும், அவள் இஸ்ரயேலுக்குள் நுழைந்து போவாசை திருமணம் செய்வதற்கு முன்பு யெகோவா தேவனை தொழுதுக் கொள்ளும்படி தன்னை மாற்றி கொண்டாள் என்பது தெளிவாகிறது.}

ஆனால் மிரியாம், உண்மையில் மோசேக்கு எதிராகப் பேசிய காரியத்தை மறைத்து, சிப்போராள் இனத்தைப் பற்றி அக்கறை கொண்டவளைப் போல் பேசினாள். இது ஒரு சாக்குப்போக்கு என்று தெரிகிறது. {சிப்போராள் ஒரு இஸ்ரயேலராக இல்லாத போதிலும், அவள் ஆபிரகாமின் வழித்தோன்றலாக இருந்தாள். (யாத்திராகமம் 3:1, ஆதியாகமம் 25:1,2}

"கர்த்தர் மோசேயைக்கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்."(எண்ணாகமம் 12:2) இந்த வசனம், தேசத்தில் மோசேயின் தலைமைத்துவத்தின் மீதும், யெகோவா தேவனின் பேச்சாளராகவும் இருந்த நிலையின் மீதும் அவர்களுக்கு இருந்த பொறாமையை வெளிப்படுத்துகிறது. தாங்களும் விசேஷமானவர்கள் என்றும் தேவனிடமிருந்து வெளிப்பாடுகள் இருப்பதாகவும் அவர்கள் கற்பனை செய்தனர். ஆனால் அவர்களின் சோகமான மனநிலை கேட்கப்பட்டது! "கர்த்தர் அதை கேட்டார்."

## சாந்த குணம்

தேவன் யாரைப் பயன்படுத்துகிறார் என்பதைப் பொறுத்து அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கலாம், ஆனால் அவர்களின் மனப்பான்மை தேவனுக்கு முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது. யெகோவா தேவனின் செயல்பாடுகள் குறிப்பிடப்படுவதற்கு முன், மோசேயின் அழகான மனப்பான்மை 3ம் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனா யிருந்தான்"

சரித்திரத்தில் இந்த குறிப்பின் நிலை மிகவும் வெளியரங்கமாக உள்ளது. மோசே மற்றும் அவரது உடன்பிறப்புகளுக்கு இடையேயான இந்த போட்டியின் மத்தியில் அவர் தலைமைத்துவம் தொடர்பான எந்தவொரு மோதலையும் தவிர்க்க விரும்பினார். அவர்களைத் திருத்தவோ, தேவன் அவரை தேர்ந்தெடுத்ததை உறுதிப்படுத்தவோ அவர் முயற்சிக்கவில்லை. இந்த விஷயத்தில் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்காக அவர் வெறுமனே யெகோவா தேவனுக்கு காத்திருந்தார்.

இன்று சில சமயங்களில் பார்க்கப்படுவது போல் சாந்த குணம் என்பது ஒரு பலவீனம் அல்ல. மாறாக, தேவனால் அனுமதிக்கப்பட்ட சூழ்நிலைகளை வேண்டுமென்றே ஏற்றுக்கொள்வதாகும். அல்லது இது போன்ற சூழ்நிலைகளுக்கு வெறுமனே முற்றுப்புள்ளி வைப்பதும் அல்ல. மற்றொரு புறம், சாந்தம் குணம் என்பது நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் அனுமதிக்கும் விருப்பத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கிறதாகும். அவருடைய கரம் வழிநடத்துதலையும் மீட்பையும் அளிக்கும் என்று உண்மையுடன் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது வலிமையின் குணம், பலவீனத்தின் வெளிப்பாடு அல்ல. {அந்த சாந்த குணம் ஒரு பலவீனமான குணத்தின் அடையாளம் அல்ல, தன்னைப் பற்றி இயேசு சொன்ன விளக்கத்தை நாம் கருத்தில் கொள்ளும்போது இதை நாம் மறுக்க முடியாதது. (மத்தேயு11:29}

## தேவனுடைய தலையிடுதல்

இந்த கட்டத்தில், யெகோவா தேவன் தம்முடைய சித்தத்தை வியத்தகு முறையில் நிரூபித்தார்!"சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி - நீங்கள் மூன்றுபேரும் ஆசரிப்புக்கூடாரத்துக்குப் புறப்பட்டுவாருங்கள் என்றார், மூன்று பேரும் போனார்கள். கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார், அவர்கள் இருவரும் போனார்கள்." (எண்ணாகமம் 12:4,5)7747



யெகோவா தேவனின் பேச்சாளரான மோசேயின் அவமரியாதை அளவுக்கு அதிகமாக போய்விட்டது. ஆசரிப்புக் கூடாரத்தில் மூவரையும் கூட்டிச் செல்லும்படி அவர் கட்டளையிட்டார், மற்றொரு வியத்தகு காட்சியில், கூடாரத்தின் வாசலில் மேகத்தூணில் தன்னை வெளிப்படுத்தி, ஆரோனையும் மிரியாமையும் அழைத்தார். இது அவர்களுக்கு மிகவும் பயந்த தருணமாக இருந்திருக்க வேண்டும். அதற்கு பின் தேவன் அவர்களிடம் பேசினார். "அப்பொழுது அவர் - என் வார்த்தைகளைக் கேளுங்கள், உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன், அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான், இப்படியிருக்க நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார். " (எண்ணாகமம் 12:6-8)

மோசேக்கு எப்படிப்பட்ட ஒரு அங்கீகாரம்!, யெகோவா தேவனின் செய்தித் தொடர்பாளராக மட்டுமல்லாமல், சர்வவல்லவருடன் மிகவும் சிறப்பான உறவைக் கொண்டவராகவும், அவருடைய அதிகாரம் வலுக்கட்டாயமாக உறுதிப்படுத்தப்பட்டது. பின்னர் குற்றச்சாட்டு அவர்களுக்கு முன் வைக்கப்பட்டது - " நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார் "

மிரியாமும் ஆரோனும் பயந்திருக்க வேண்டும். பின்னர் தண்டனை வழங்கப்பட்டது, மிரியாம் தொழுநோயாளியானாள். இதில் சுவாரஸ்யமான காரியம் என்னவென்றால், மிரியாம் மட்டுமே தண்டிக்கப்பட்டாள். ஆரோன் ஏன் தண்டிக்கப்படவில்லை என்பதை நாம் ஊகிக்க மட்டுமே முடியும். ஒருவேளை மிரியாம் மட்டுமே மோசேக்கு எதிராக தீய பேச்சை பேச தூண்டுதலாக இருந்திருக்கலாம். எனவே அவளே அதிக பொறுப்பாளியாக இருந்திருக்கக்கூடும். இருப்பினும், ஆரோனும் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால், நியாயப்பிரமாணத்தின்படி அவர் ஆசாரியத்துவத்திலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டிருப்பார். (லேவியாராகமம் 22:4) அது இருந்தபடியே, ஆரோன் தனது சகோதரி தொழுநோயாளி நிலையில் இருப்பதைக் கண்டு உணர்ச்சிவசப்பட்டு, உடனடியாக மோசேயிடம் பேசி, அவர்களின் முட்டாள் தனமாக செய்த பாவத்தை ஒப்புக்கொண்டு, கருணை கோரினார்.

ஆனால் மோசே தான் மிரியாமைக் குணமாக்க யெகோவா தேவனிடம் மன்றாடினார், தேவன் மோசேயைக் கேட்டார். ஆனால் மிரியாம் குணமடைந்து சுத்திகரிக்கப்படும் வரை ஏழு நாட்களுக்கு பாளையத்திற்கு வெளியே அவளை அடைத்து வைக்க வேண்டும் என்று யெகோவா தேவன் கூறினார். இது மிரியாமிற்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். அவர் மூவரில் மூத்த உடன்பிறப்பாக இருந்தாள். மேலும் அவள் 90 அல்லது 100 வயதாக கூட இருந்திருக்கலாம். அவளுடைய சொந்த திறமைகளுக்காகவும் மோசேயின் சகோதரியாக இருந்ததினாலும் அவள்

இஸ்ரயேலர்களிடையே மிகவும் மதிக்கப்பட்டாள். ஆனால் இப்போது ஒரு தொழுநோயாளியாக தாழ்த்தப்பட்டு, அந்த மோசமான நிலையில் பாளையத்திலிருந்து அனுப்பப்படுவது, முன்னெப்போதும் இல்லாத அவமானமாக இருக்கும்.

**தீர்க்கதரிசன பாடங்கள்**

இந்த தொகுப்பில் தீர்க்கதரிசன பாடங்களும் உள்ளது. ஆரோன் மிரியாமுக்காக தேவனிடம் மன்றாடவில்லை. அதற்கு பதிலாக மோசேயிடம் மன்றாடினார். ஆரோனும் மிரியாமைப் போலவே ஒரு குற்றவாளி, ஆனால் அவருக்கு குஷ்டரோகம் பிடிக்கவில்லை. நாம் முன்பு விவாதித்த காரணங்களுக்காக இருக்கலாம். ஆனால் அவர்கள் இருவரின் பாவமும், பாவத்தின் பொதுவான அடையாளமான குஷ்டரோகத்தில் வெளிப்படுத்தப்படுகிறது.

இராஜ்யத்தில் மனுக்குலம் கல்லறையிலிருந்து வெளியே கொண்டுவரப்படும் போது, அவர்களுக்கு இன்னும் பாவத்திலிருந்து சுத்திகரிப்பு தேவைப்படும். அவர்கள் தங்கள் பாவங்களை அடையாளம் கண்டு அதற்கான சுத்திகரிப்பு தேவை என்று அவர்கள் காணும் போது, அவர்கள் தங்கள் இராஜாவாகிய இயேசு - நிழலான மோசேயிடமும், அவருடைய மணவாட்டியாகிய சபையையும் அணுகி, மன்னிப்பு மற்றும் சுத்திகரிப்புக்காகவும் வேண்டுவார்கள். தேவனுடைய அதிகாரத்தினாலும் வல்லமையினாலும், இயேசு இரண்டையும் வழங்குவார். இந்த உலகின் வல்லமை ஏறுவரிசை நிலையில் காணப்படும். கிறிஸ்துவும், யெகோவா தேவனும் சர்வத்திற்கும் மேலாக இருப்பார்கள்.

ஓசியா 2:21,22 ம் வசனம் இந்த நிலையை தலைகீழ் வரிசையில் விவரிக்கிறது. "அக்காலத்தில் நான் மறுமொழி கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் வானங்களுக்கு மறுமொழி கொடுப்பேன், அவைகள் பூமிக்கு மறுமொழி கொடுக்கும். பூமி தானியத்துக்கும் எண்ணெய்க்கும் மறுமொழி கொடுக்கும், இவைகள் யெஸ்ரயேலுக்கும் மறுமொழி கொடுக்கும்." இங்கு வரிசை மேலிருந்து அதாவது யெகோவா தேவனிடமிருந்து தொடங்குகிறது. கர்த்தர் வானங்களுக்கு மறுமொழி கொடுப்பேன்" என்கிறார். "வானங்கள்" கிறிஸ்துவையும் சபையையும் விவரிக்கிறது. இதுவே வெளிப்படுத்துதல் 21:1 இல் சொல்லப்பட்ட "புதிய வானம்". இதையொட்டி,"வானங்கள் பூமிக்கு" பதிலளிக்கின்றன, அதாவது மனுக்குலம் பாவத்திலிருந்து சுத்திகரிப்படும். இந்த ஆசீர்வாதங்களுக்காக அவர்கள் இயேசு மற்றும் சபையினிடமும் மன்றாடுவார்கள். இதையொட்டி "பூமி" "தானியம், புதிய திராட்சரசம் மற்றும் எண்ணெய்" என்று பதிலளிக்கிறது. இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள், பூமியின் மண்ணில் விளையும் செழுமையானவைகளினால் வெளிப்படுத்தப்படும். மாம்ச இஸ்ரயேலர்களிடம் யெகோவா தேவன் செய்த உடன்படிக்கைக்கு அவர்கள் கீழ்ப்படியும் போது அவர் வாக்களித்த "கூடையும், மாப்பிசைகிற தொட்டியும்" (உபாகமம் 28:5, 17) என்று இந்த ஆசீர்வாதம், மனுக்குலத்தின் மீது இராஜ்யத்தின் போது, அவர்கள் கீழ்ப்படியும் போது பெறும் ஆசீர்வாதத்தை குறிப்பிடுகிறது. கடைசியாக, "அவைகள் யெஸ்ரயேலுக்கும் மறுமொழி கொடுக்கும்." யெஸ்ரயேல் என்பதற்கு "கடவுள் விதைப்பார்" என்று பொருள். இறுதியில், சோர்வுற்ற மற்றும்



கீழ்ப்படிதலுள்ள அனைத்து உயிரினங்கள் மீதும் யெகோவாவின் நேரடி ஆசீர்வாதம், அவருடைய கனத்தையும், மகிமையையும் மேலோங்கச் செய்யும். அப்போஸ்தலர் சொல்லுகிறபடி "தேவனே சகலத்திலும் சகலமுமாக இருப்பார்." (1கொரிந்தியர் 15:28)

## மிரியாமின் வாழ்க்கையின் முடிவு

இஸ்ரயேல் அலைந்து திரிந்த கடைசி வருடத்தில் மிரியாமின் வாழ்க்கை முடிவுக்கு வந்தது. "இஸ்ரயேல் புத்திரரின் சபையார் எல்லாரும் முதலாம் மாதத்தில் சீன் வனாந்தரத்திலே சேர்ந்து, ஜனங்கள் காதேசிலே தங்கியிருக்கையில் மிரியாம் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்பட்டாள்." (எண்ணாகமம் 20:1)

மோசே நதியில் இருந்து மீட்கப்பட்டபோது, மிரியாமின் வயது குறிப்பிடப்படவில்லை, ஆனால் அவள் ஒரு இளம் பெண்ணாகத் தெரிகிறது. எனவே, அவள் 130 வயதில், இல்லாவிட்டாலும் 120களில் மரித்திருக்கவேண்டும். அது ஆண்டின் முதல் மாதமான நீசான் (அல்லது ஆபிப்) மாதத்தில் காதேசில் மரணம் அடைந்தாள். காதேஸ் என்றால் "பரிசுத்தமானது", இது பாலைவனத்தில் உள்ள இடம் (ஸ்டராங்கின் 6946ஐப் பார்க்கவும். )

இஸ்ரயேல் ஜனங்களின் நலன்களுக்காகவே, மிரியாமின் ஊழியம் அர்ப்பணிப்புடன் இருந்தது. சந்தேகத்திற்கு இடமின்றி ஜனங்களால் அவள் அவர்களால் மதிக்கப்பட்டாள். அவளுக்கு குறைபாடுகள் இருந்தபோதிலும், இஸ்ரயேலரின் விடுதலைக்கான அவளுடைய வலுவான தொடர்பைக் குறித்து யெகோவா தேவனே அவருடைய சாட்சியத்தால் உறுதிப்படுத்துகிறார். "நான் உன்னை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக்கொண்டு, மோசே ஆரோன் மீரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்." (மீகா6:4)

ஆயினும்கூட, அவளுடைய அனுபவத்தில், யாரும் கடவுளின் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல என்பதையும், அவருடைய ஏற்பாடுகளுக்கான பணிவையும் மரியாதையையும், அதற்கேற்ற விளைவுகள் இல்லாமல் புறக்கணிக்க முடியாது என்பதை நினைப்பூட்டப்படுகிறோம். அதனால் யெகோவா தேவனுடைய கட்டுபாட்டின் அனுபவங்களை ஒரு போதும் மறந்துவிடக் கூடாது என்று தேசத்திற்கு அறிவுறுத்தப்பட்டது.

"குஷ்டரோகத்தைக்குறித்து லெவியராகிய ஆசாரியர் உங்களுக்குப் போதிக்கும் யாவையும் கவனித்துச் செய்யும்படி மிகவும் எச்சரிக்கையாயிருங்கள், நான் அவர்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்யக் கவனமாயிருப்பீர்களாக."(உபாகமம் 24:8,9)

## தண்ணீருக்கான தேவை

# மேரிபாவில் நியாயத்தீர்ப்பு



*Author to come*

"ஜனங்களுக்குத் தண்ணீர் இல்லாதிருந்தது, அப்பொழுது அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடினார்கள்." (எண்ணாகமம்20:2)

சீனாய் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த 40 வது ஆண்டில், வனாந்தரப் பயணத்தின் போது புதிதாக விடுவிக்கப்பட்ட இஸ்ரயேலர்களை யெகோவா தேவன் தண்டித்ததை எண்ணி, இப்போது இருக்கிற இஸ்ரயேலர்கள் தங்களுடைய பயணத்தைத் தொடங்கியிருப்பார்கள் என்று நாம் நினைக்கலாம். ஆயினும்கூட, ஆச்சரியப்படும் விதமாக, இந்த புதிய தலைமுறையில் பலர் வரலாற்றின் படிப்பினைகளை கவனிக்கவில்லை என்று தெரிகிறது. உடனடியாக மீண்டும் வந்த பிரச்சனை, அதாவது முன்பு பார்த்த ஒன்று, மேலே சுருக்கமாக கூறப்பட்டுள்ளது.

## ஒரு புதிய தலைமுறை

இரண்டு முறை, அவர்கள் அலைந்து திரிந்த முதல் ஆண்டில் (யாத்திராகமம் 15 மற்றும் 17), அந்த முதல் தலைமுறையினர் தண்ணீர் இல்லாமல் போன போது, அவர்கள் மோசேயிடம் முறுமுறுத்தார்கள். இரண்டு முறை, அவர்களுக்குத் தேவையானதை யெகோவா தேவன் கொடுத்தார். அங்கு மதிப்புமிக்க பாடங்கள் இருந்தது, அந்த தலைமுறை பாடங்களைக் கற்றுக்கொண்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது, ஏனென்றால் 40 வருடங்கள் முடியும் வரை அந்தக் குறிப்பிட்ட புகாரை நாம்



மீண்டும் பார்க்க முடியவில்லை. இருப்பினும், இந்த 40வது வருடத்தில், அந்த முதல் தலைமுறையினரில் பெரும்பாலோர் கடவுளின் நியாயத்தீர்ப்பின்படி இறந்துவிட்டார்கள். (எண்ணாகமம் 14:29) யெகோவா தேவனின் சிட்சையை தனிப்பட்ட முறையில் அனுபவிக்காத இந்தப் புதிய தலைமுறை, தங்கள் மூத்தவர்களின் படிப்பினைகளை மனதில் கொள்ளவில்லை. அவர்களும் அதே அவிசுவாசத்திலே விழுந்தார்கள். "ஜனங்கள் மோசேயோடே வாக்குவாதம் பண்ணி - எங்கள் சகோதரர் கர்த்தருடைய சந்நிதியில் மாண்டபோது நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலமாயிருக்கும். நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்திரத்தில் கொண்டுவந்தது என்ன, விதைப்பும், அத்திமரமும், திராட்சச் செடியும், மாதளஞ்செடியும்,

குடிக்கத்தண்ணீரும் இல்லாத இந்தக் கெட்ட இடத்தில் எங்களைக் கொண்டுவரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன என்றார்கள்." (எண்ணாகமம் 20:3-5)

இது ஒரு குறிப்பிடத்தக்க மோதலாக இருந்தது. அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் "விரோதமாக" கூடினார்கள் என்று சொல்லப்படுகிறது. இது வெறும் அமைதியான உரையாடலாக இருக்கவில்லை. அது விரோதமான, திறமையின்மை மற்றும் சண்டையின் குற்றச்சாட்டுகளால் நிறைந்திருந்தது.

நம்மை வியப்பில் ஆழ்த்தும் குழப்பமான விஷயங்களில் ஒன்று - அவர்களின் பயணங்களில் கடவுளின் முன்னேற்பாடுகளும் மற்றும் அவருடைய வல்லமையுள்ள கரம் பற்றிய முழுமையான விழிப்புணர்வு இல்லாததே. அக்கினி ஸ்தம்பம் மற்றும் மேக ஸ்தம்பமும், மோசே மற்றும் ஆரோனுக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லமையையும் ஞானத்தையும் தெளிவாகக் குறிக்கிறது.

ஓய்வு நாள் பிரமாணத்திற்கு உட்பட அன்றாட மன்னாவை உணவாக பெற்றது, இயற்கைக்கு அப்பாற்பட்ட மற்றொரு குறிகாட்டியாகும். ஆடைகளும் காலணிகளும் தேய்ந்து போகவில்லை என்பதையும் சேர்த்துக்கொள்ளலாம். மோசே மற்றும் ஆரோன் மீது குற்றம் கண்டுபிடிக்கும் அளவுக்கு இஸ்ரயேலர்கள் எப்படி கடுமையாக இருக்க முடியும் ?ஒருவேளை இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளின் "இயல்புநிலையில்" பதில் காணப்படலாம். பெரும்பாலான இஸ்ரயேலர்கள் இந்த அற்புதமான விஷயங்களுடன் வளர்ந்தார்கள். எனவே அவர்கள் இவைகளை அதிசயமாகவோ, அற்புதமாகவோ, அசாதரணமாகவோ நினைக்கவில்லை.

"அவிசுவாசத்தினால்" இஸ்ரயேல் ஜனங்கள் தோல்வியடைந்தார்கள் என்று பவுல் எழுதுகிறார். (எபிரெயர் 3:19) இதுவே எளிமையான பதிலாக இருக்கலாம். "அப்பொழுது மோசேயும் ஆரோனும் சபையாரைவிட்டு, ஆசரிப்புக்கூடாரவாசலில் போய் முகங்குப்புற விழுந்தார்கள், கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது."(எண்ணாகமம் 20:6) மோசேயும் ஆரோனும் இந்தக் கூட்டத்துடன் பேச முயற்சிக்கவில்லை. உணர்ச்சிவசப்பட்ட நபர்களின் அத்தகைய கூட்டத்துடன் நியாயம் பேசுவது சாத்தியமில்லாமல் போனது. அவர்களை விட்டு ஆசரிப்புக்கூடாரவாசலுக்கு சென்றார்கள். அவர்கள் "முகங்குப்புற விழுந்த" போது, அவர்களுடைய பயபக்தியுள்ள செயலினால், யெகோவா தேவனிடம் பணிவாக வேண்டினார்கள் என்பதை காட்டுகிறது. இது உடனடியாக "யெகோவா தேவனுடைய மகிமையின்" தோற்றத்துடன் சந்திக்கப்பட்டது. அதிருப்தியடைந்த இஸ்ரயேலர்கள் யெகோவா தேவனுடைய "மகிமையை" பார்த்திருக்க வேண்டும். நிச்சயமாக, அவர்கள் மோசேயையும் ஆரோனையும் எப்படிப் எப்படிப் பேசினார்கள் என்பதைக் கருத்தில் கொள்ள அது அவர்களுக்கு வாய்ப்பளித்தது.

இந்த சந்தர்ப்பத்தில் யெகோவா தேவனுடைய கோபம் இந்த குற்றம் சுமத்தினவர்களின் மீது வெளிப்படவில்லை என்பது சுவாரஸ்யமானது. அவர்கள் ஏன்

தண்டிக்கப்படவில்லை ? இந்த இஸ்ரயேலர்களின் அணுகுமுறைகள் விரும்பத்தக்கதாக இருந்தபோதிலும், அவர்களின் உண்மையான தேவை, தண்ணீர் பற்றாக்குறையாக இருந்தது.

இஸ்ரயேலின் இந்த புதிய தலைமுறை தேசத்தை சுதந்தரிக்க விசுவாசத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று ஒருவேளை கடவுள் பார்த்திருக்கலாம். அதனால் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு, மோசே மற்றும் ஆரோனை அவர் இவ்வாறு வழிநடத்தியிருக்கலாம்.

"கர்த்தர் மோசேயை நோக்கி - நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச் செய்து, அவர்கள் கண்களுக்கு முன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள், அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும், இப்படி நீ அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார். (எண்ணாகமம் 20:7,8)

## நாற்பது வருடங்களுக்கு முன்பு

இந்த பிற்கால அனுபவம், ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீர் பற்றாக்குறையை யெகோவா தேவன் எப்படி சமாளித்தார் என்பதற்கு ஒத்திருக்கிறது. அவர் மோசேயிடம் ஒரு கன்மலையை அடிக்கச் சொன்னார், தண்ணீர் புறப்பட்டு வந்தது. (யாத்திராகமம் 17) இங்கு காதேசில், கன்மலை மீண்டும் தண்ணீர் தரும் ஆதாரமாக மாறியது. ஆனால் இப்போது கன்மலையை அடிக்காமல் அதனுடன் "பேச" வேண்டும் என்று மோசேயுடன் சொல்லப்பட்டது. இந்த முறை யெகோவா தேவனுடைய கட்டளை ஏன் வித்தியாசமாக இருந்தது?

இஸ்ரயேலின் அனுபவங்கள் ஒரு நிழலாக இருக்கிறது என்பதை பவுலின் வார்த்தைகளிலிருந்து நாம் அறிவோம். அவைகள் சுவிசேஷ யுகத்தின் போது சபைக்காக முன்னறிவிக்கப்பட்ட அனுபவங்களாக இருந்தது. "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது."(1கொரிந்தியார் 10:11)

கன்மலையில் மோசேயின் முந்தைய அனுபவத்தை விட இந்த இரண்டாவது அனுபவமானது வித்தியாசமானதாக இருக்கவேண்டும் என்று யெகோவா தேவன் நினைத்திருக்க முடியுமா ? உண்மையில், நிஜமான நோக்கம் எதுவாக இருந்தாலும், மோசே யெகோவா தேவனின் அறிவுரைகளை சரியாக



நிறைவேற்றவில்லை. அதனால் அவர் மிக பெரிய இழப்பை சந்தித்தார்.

"மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்தார்கள், அப்பொழுது மோசே அவர்களை நோக்கி - கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான், உடனே தண்ணீர் ஏராளமாய் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள் அவர்கள் மிருகங்களும் குடித்தது." (எண்ணாகமம் 20:10,11)

யெகோவா தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாததால் இரண்டு துரதிர்ஷ்டவசமான விளைவுகள் ஏற்பட்டன. முதலாவது - " உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ....?" என்று மோசே கேட்டார். இந்த அறியாமை மற்றும் நன்றியற்ற ஜனங்கள் மீதான மோசேயின் விரக்தியிலும் கோபத்திலும் நாம் அவரை அனுதாபப்படுத்த முடியும் என்றாலும், இந்த விஷயத்தில் அவர் அறியப்பட்டிருந்த சாந்த குணத்தை அவர் கடைப்பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது. மோசேயும் ஆரோனும் அல்ல, யெகோவா தேவனே தண்ணீரைக் கொடுத்தார். "நாங்கள்" என்று கூறுவதன் மூலம், மோசே கடவுளுக்குத் தேவையான பயபக்தியையும் ஆராதனையையும் ஏறெடுக்க தவறிவிட்டார்.

இரண்டாவதாக, கன்மலையிடம் "பேசு" என்ற யெகோவா தேவனுடைய வெளிப்படையான கட்டளைகளுக்கு மோசே கீழ்ப்படியவில்லை. அதற்கு பதிலாக அவர் அதை இரண்டு முறை அடித்தார். கடவுளின் கட்டளைகளை மீறுவது ஒருபோதும் அனுமதிக்கப்படாது. அது அறிவுறுத்தப்படவும் கூடாது.

அவ்வாறு செய்வதன் மூலம், அவர் கடவுள் உத்தேசித்த உண்மையான நிஜத்தை, வீணாக்கிவிட்டார் என்பதை மோசே நன்கு அறிந்திருக்க வேண்டும். ஆனால் அவர் வருந்துவதற்கு வேறு நிஜத்தை வழங்குகிறார். இஸ்ரயேலுக்கு தேவையான தண்ணீர் கிடைத்தாலும், மோசேக்கும் ஆரோனுக்கு ஒரு சோகமான காரியம் இருந்தது.

"பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி - இஸ்ரயேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்." (எண்ணாகமம் 20:12)

என்ன ஒரு துக்ககரமான தண்டனை! 40வருடங்கள் ஜனங்களை வழிநடத்திய பிறகு, மோசேயும், ஆரோனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைய தடை விதிக்கப்பட்டது. கடவுளின் கட்டளைகளை முழுமையாகக் கடைப்பிடிப்பது எப்போதும் இன்றியமையாதது ! கடவுளுக்குக் கீழ்ப்படியத் தெரிந்தாலும், அப்படிச் செய்யாதவர்களுக்குக் கடவுளின் தண்டனைகள் எவ்வளவு கடுமையானதாக இருக்கும் என்பதும் வேதனையானது. இந்த சம்பவம் பின்வரும் முடிவுரையுடன் முடிவடைகிறது-



"இங்கே இஸ்ரயேல் புத்திரர் கர்த்தரோடே வாக்குவாதம் பண்ணினதினாலும், அவர்களுக்குள்ளே அவருடைய பரிசுத்தம் விளங்கினதினாலும் இது மேரிபாவின் தண்ணீர் என்னப்பட்டது." (எண்ணாகமம் 20:13)

## இரண்டு வெவ்வேறு இடங்கள்

"மேரிபா" என்றால், "சண்டை, கோபமூட்டுதல் அல்லது சச்சரவு" (ஸ்டிராங்கின் 4808, 4809) யாத்திராகமம் 17ல் தண்ணீர் பற்றிய ஆரம்ப பிரச்சனை நடந்த இடத்தை விவரிக்கிறது. இந்த வழக்கில், இது மற்றொரு பெயருடன் இணைக்கப்பட்டுள்ளது. "இஸ்ரயேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரிட்சை பார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாரா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்."(யாத்திராகமம் 17:7)

இந்த வித்தியாசமான அனுபவங்கள் "மேரிபா" என்ற பெயரைப் பகிர்ந்து கொள்கின்றன, ஆனால் அவை இரண்டும் வெவ்வேறு இடங்களில் இருந்தது. முதல் இடம், "மாரா மற்றும் மேரிபா" சீனாய் மலை என்று அழைக்கப்படும் ஓரேப் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. அந்தப் பகுதி ரெவிதீம் என்று அழைக்கப்பட்டது, இஸ்ரயேலர்கள் பார்வோனிடமிருந்து விடுவிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே அங்கு பாளையம் இறங்கினார்கள். காதேசில் நடந்ததைப் போன்றே சூழ்நிலைகள் இருந்தன, அவர்களிடம் தண்ணீர் இல்லை, சோதனையும், சண்டையும் ஏற்பட்டது. விளைவு ஒரே மாதிரியாக இருந்தது - மோசே ஒரு கன்மலையை அடித்தார், தேவையான தண்ணீர் புறப்பட்டு வந்தது.

சங்கீதக்காரன் விவரிக்கும் அந்த முதல் தலைமுறையின் சோதனை இதுதான் - "இன்று

அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை ஆரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர் களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்." (சங்கீதம் 95:8-11)

இரண்டாம் மேரிபாவின் இருப்பிடம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அருகில் சீன் வனாந்திரத்தில் இருந்தது. மேலும், நாம் கவனித்தபடி, இது அவர்களின் அலைந்து திரிந்த கடைசி ஆண்டில் புதிய தலைமுறைக்காக சோதனையாக இருந்தது. ஆனால் இந்த சோதனையின் முடிவு மோசேக்கும், ஆரோனுக்கும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியது. இது வேதாகமத்தில் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. "உன் சகோதரனாகிய ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரித்து, தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்பட்டது போல நீயும் ஏறப்போகிற மலையிலே மரித்து, உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய். நான் இஸ்ரயேல் புத்திரருக்குக் கொடுக்கப்போகிற எதிரேயிருக்கிற தேசத்தை நீ பார்ப்பாய், ஆனாலும் அதற்குள் நீ பிரவேசிப்பதில்லை என்றார்." (உபாகமம் 32:51, 52) "மேரிபாவின் தண்ணீர்களிடத்திலும் அவருக்குக் கடுங்கோபம் மூட்டினார்கள், அவர்கள் நிமித்தம் மோசேக்கும் பொல்லாப்பு வந்தது. அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளினால் பதறிப்பேசினான். " (சங்கீதம் 106:32,33)

### புது சிருஷ்டிக்கான பாடங்கள்

இந்த காரியங்களை கருத்தில் கொண்டு, புது சிருஷ்டிக்கு குறைந்தது மூன்று முக்கியமான பாடங்கள் இதில் உள்ளது.

- முதலாவதாக, கடவுளுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது மிக முக்கியமானது. கடவுளுக்கு முழுமையான மற்றும் தயங்காத கீழ்ப்படிதல் இல்லாமல், சிறு மந்தையின் உறுப்பினர்களாக, நம்முடைய வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசமான பரலோகத்திற்குள் பிரவேசிப்போம் என்று நாம் ஒருபோதும் நம்ப முடியாது. நாளுக்கு நாள், தேவனுக்கு நாம் பலி செலுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறோம், தேவனும் அதை அங்கீகரிக்கிறார். ஆனாலும் பலியைக் காட்டிலும் கீழ்ப்படிதலே முக்கியம். "அதற்குச் சாமுயேல் - கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்." (I சாமுயேல் 15:22)

கடவுள் தம்முடைய தெய்வீக சர்வ அறிவாற்றலில், நம்மிடமிருந்து சில ஆசீர்வாதங்களைத் தடுத்து வைத்திருக்கும் போது,

நாம் ஒருபோதும் முறுமுறுக்கவோ அல்லது மற்றவர்களைக் குறை கூறவோ கூடாது. அதற்கு பதிலாக யெகோவா தேவனின் பாதுகாப்பை முழுமையாக விசுவாசித்து, குறித்த நேரத்தில் அவருடைய ஏற்பாடுகள் வருவதைக் கவனியுங்கள்.

● இரண்டாவது பாடம் பணிவு அல்லது மனத்தாழ்மை. ஒரு கணம், மோசே தனது வாழ்க்கையின் குணாதிசயமாக இருந்த பணிவை இழந்தார். "நாங்கள் தண்ணிர் புறப்படப்பண்ணுவோம்" என்ற வார்த்தைகள் தன்னை குறித்து அதிகமாக எண்ணி, யெகோவா தேவனுடைய அதிகாரத்தை எடுத்துக்கொள்வதாகும்.

ஆண்டவருடைய ஜனங்கள் தங்கள் தாழ்மையான சேவை மனப்பான்மையை தனிப்பட்ட உரிமையாக மாற ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. பாஸ்டர் ரசல் இதைப் பற்றி ஆக்கப்பூர்வமான அவதானிப்பைக் கொண்டிருந்தார். "கடவுளைப் பற்றிய அறிவு மற்றும் அவருடைய மகிமையான திட்டம் தொடர்பாக நமக்குக் கிடைக்கும் சலுகைகள் ஏராளம். இந்த வார்த்தையின் எந்த கோணத்திலும் நம்முடையது என்று நாம் ஒரு கணம் நினைத்தாலும், நாம் நம்முடைய மனத்தாழ்மையை இழந்து, பெருமை மற்றும் சுய முடிவுகள் அல்லது உறுதிப்பாட்டின் பாவத்தின் ஆபத்தில் விழ தொடங்குகிறோம் என்று பொருளாகும். நாம் மதிக்கும் சத்தியங்கள் எவ்வகையிலும் நம்முடையது என்று நாம் நினைக்காதபடிக்கு, தொடர்ச்சியாகப் விழித்திருந்து ஜெபித்தால் மட்டுமே நாம் பாதுகாப்பாக இருக்க முடியும்" (R4047).

● மூன்றாவதாக, வனாந்தரத்தில் மாம்ச இஸ்ரயேலின் அனுபவங்கள் நிழலானவைகள். இதன் விளைவாக, புது சிருஷ்டிகளாகிய நாம், இதில் உள்ள நிஜமான பாடங்களைப் புரிந்துகொள்ளவும் பயன்படுத்தவும் முயல்வது நல்லது. மோசே கன்மலையுடன் "பேசு" என்ற கடவுளின் உண்மையான அறிவுறுத்தலை நாம் கருத்தில் கொண்டால், "கன்மலையாம்"இயேசுவிடம், விண்ணப்பித்தால், இதன் விளைவாக சத்தியத்தின் தண்ணீர் பாய்ந்து வரும் என்பதே இந்த செயல் அடையாளப் படுத்தக்கூடும். இது இப்போது சபைக்கும், இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கும் உண்மையாக இருக்கும். இந்த "கன்மலை" மீண்டும் அடிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த நிழல் ஏற்கனவே யாத்திராகமம் 17 ம் அதிகாரத்தில் இயற்றப்பட்டது. இதன் நிறைவேற்றமாக சிலுவையில் இயேசு ஒரே முறை மரித்தார்.

"இதில் அவர் ஒரு நிழலை கெடுத்து, மற்றொரு நிழலை செய்தார். உண்மையான கன்மலையாகிய கிறிஸ்து இயேசு, நம் பாவங்களுக்காக ஒரு முறை அடிக்கப்பட வேண்டும், அதன் விளைவாக கல்வாரியில் அடித்ததினால், எல்லா உண்மையான இஸ்ரயேலர்களுக்கும் ஜீவத் தண்ணீர் எல்லாக காலத்திலும் கிடைக்கும். ஒரு காலத்திற்கு அது நிறுத்தப்பட்டால், கன்மலையை கடவுளின் பெயரால் அழைத்தால் மட்டுமே போதும், ஜீவ தண்ணீரை மீண்டும் பெறலாம். கிறிஸ்து இனி மரிக்கமாட்டார். இனி மரணத்திற்கு அவர் மீது ஆதிக்கம் இல்லை, எனவே கன்மலை இரண்டாவது முறையாக அடிக்கப்பட்டிருக்கக் கூடாது.

இருப்பினும், இரண்டாம் முறை கன்மலையை அடித்தல், ஒரு புதிய நிழலை உருவாக்கியது. ஏனெனில் அப்போஸ்தலர் விளக்குவது போல் கிறிஸ்துவை மீண்டும் சிலுவையில் அறைந்து, அவரை அவமானப்படுத்தும் சிலர் இப்போதும் இருக்கிறார்கள். அவரைப் பெயரளவில் பின்பற்றுபவர்கள் அவருடைய உண்மையான பலியின் மதிப்பை மறுத்து அல்லது புறக்கணித்து, அவர்களை விலைக்கு வாங்கின இரத்தத்தை அவமதித்தால், அவர்கள் மரணம் வரை பாவம் செய்ததாகக் கணக்கிடப்படுகிறது. இதுவே இரண்டாம் மரணம். இவர்களுக்கு மோசே ஒரு நிழலாக மாறினார், மேலும் கன்மலைக்கு எதிராக செயல்படக்கூடியவர்களுக்கு அடையாளமாக, மோசே கானானுக்கு செல்ல தடை விதித்தார் (R3077).

"ஏனெனில்,ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும்,பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம். "(எபிரெயர் 6:4-6)

"இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள், இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும்..." (யூதா12) இந்த நிழலில் மோசே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க தவறியது போல் இந்த வகுப்பார் முழுவதுமாக ஜீவனைப் பெறத் தவறிவிடுவார்கள்.

மோசே கீழ்ப்படியாமல் போனாலும், தேவையான தண்ணீர் பாய்ந்தது. உடன்படிக்கை செய்யப்பட்ட தேசத்தின் மீதான தம்முடைய பொறுப்பை யெகோவா தேவன் அறிந்து அதை நிறைவேற்றினார். தம்முடைய ஜனங்களுக்கு கடவுள் உண்மையுள்ளவராயிருக்கிறார். பவுல் கற்பித்தபடி, "நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார், அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்." (2தீமோத்தேயு 2:13)

இது சம்பந்தமாக மேலும் ஒரு நடைமுறை பாடத்தையும் நாம் பரிசீலிக்கலாம். சுவிசேஷ யுகத்தில் உள்ள சபை கிறிஸ்துவின் சரீரமாகும். மேலும் அவர்கள் இந்த யுகம் முழுவதும் துன்புறுத்தப்பட்டு, அடிக்கப்படுவார்கள். "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை, துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை."(2கொரிந்தியர் 4:8,9) சிறு மந்தையில் பலியின் சிலாக்கியங்கள் மற்றும் பாவ நிவாரண அனுபவங்களே, இராஜ்யத்தில் உள்ள மனுக்குலத்தில் உலகத்திற்கு சத்தியத்தின் தண்ணீரை விநியோகிக்க அவர்களை



தகுதியுடையவர்களாக்க உதவுகின்றது. ஆனால் மிகவும் ஆறுதலான ஒன்றை நாம் நினைவில் கொள்ளலாம். மோசேயின் கண்ணோட்டத்தில், இருந்து நாம் பார்க்கும் போது மரணத்தின் தருவாயில் முடப்பட்ட அவருடைய கண்கள், இராஜ்யத்தின் தொடக்கத்தில் மனித பரிபூரணத்தில் அவருடைய கண்களைத் திறக்கும் தருணம் உடனடியாகத் தோன்றும். அதாவது மோசேயின் மூடின கண்கள் திறக்கும் போது அவர் இராஜ்யத்தில் இருப்பார் - ஏனெனில் கல்லறையில் மரித்தவர்களுக்கு கடந்து செல்லும் நேரம் உணர்வு இருக்காது. மரித்த மோசேக்கு மூன்றாயிரமாண்டுகளுக்கும் மேலான காலம் ஒரு நொடியில் கடந்து போகும். மோசேயின் உச்சபட்சமான ஏமாற்றம் விரைவில் ஒரு நொடி பொழுதில் உச்ச மகிழ்ச்சியாக தொடர்ந்து வரும்! "உயிர்த்தெழுப்பப்படும் போது, ஆதாமுக்கும் மற்றும் வயதான தந்தைகளுக்கும் அவர்கள் அரை மணி நேரத்திற்கு முன்பு வாழ்ந்தது போல் தோன்றும் " என்று மார்ட்டின் லூதர் ஜூன் 7, 1523 அன்று ஒரு பிரசங்கத்தில் கூறினார். Walch 12, pages 2456-2467. Erlangen, German Writings, First Edition, Volume 18, pages 261-268, Second Edition, Volume 17, pages 48-56}

ஆசாரியத்துவத்தில் வாரிசு

# ஏதோம் மற்றும் ஆரோனின் மரணம் வழியாகச் செல்லுதல்



"பின்பு மோசே காதேசிலிருந்து ஏதோமின் இராஜாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி:" (எண்ணாகமம் 20:14)

***Author to come***

இஸ்ரயேலர்கள் காதேசில் இருந்தார்கள், அங்கு மோசே மேரிபாவில் ஒரு பயங்கரமான தவறு செய்தார். இந்த காதேஸ், பாரான் வனாந்திரத்தில் இருக்கும் காதேஸ் பர்னயாவிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும். இந்த காதேஸ் சீன் வனாந்தரத்தில் உள்ளது. இது நவீன ஜோர்டானில் உள்ள பெட்ரா நகரத்தின் இருப்பிடத்திற்கு அருகில் இருக்கலாம்.

இஸ்ரயேல் இப்போது புறப்படத் தயாராகிவிட்டது. அவர்கள் வனாந்திரத்தில் அலைந்து திரிந்து 40 வது வருடம் ஆனதால், அவர்களின் நீண்ட பயணத்தை முடிக்க ஆயத்தமாக இருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு ஒரு தெளிவான பாதையை கொண்டிருக்க வேண்டும் என்று மோசே விரும்பினார், மேலும் சிறந்த பாதை ஏதோம் தேசத்தின் வழியாக இருப்பதைக் கண்டார். அவர் இராஜாவின் நெடுஞ்சாலையைப் பயன்படுத்த விரும்பினார். (எண்ணாகமம் 20:17) இந்த சாலை பண்டைய காலங்களில் ஒரு பெரிய வணிக மற்றும் இராணுவ பாதையாக பரவலாக பயன்படுத்தப்பட்டதாக வரலாற்று பதிவுகள் குறிப்பிடுகின்றன.

"இராஜாவின் பெறும் பாதை - யோர்தான் ஆற்றின் கிழக்கே முக்கிய போக்குவரத்து பாதை. சொல்லர்த்தமாகவே, "இராஜாவின் பாதையாக" இருந்தது. இந்த நெடுஞ்சாலை 3,000 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளது. இது தமஸ்குவிலிருந்து அகபா (Aqaba)வளைகுடா வரை செல்கிறது. மேலும் இது டிரான்ஸ் ஜோர்டானுக்கான Transjordan நாடோடிகளின் கூண்டு வண்டிகளின் caravan முக்கிய பாதையாகும். இது எண்ணாகமம் 20:17 மற்றும் 21:22இல் மோசேயும் இஸ்ரயேலர்களும் ஏதோம் மற்றும் சீகோன் தேசத்தின் வழியாக செல்லும் பாதையாக குறிப்பிடப்பட்டுள்ளது. டிராஜனின் Trajan ஆட்சியின் போது ரோமானியர்கள்அதை மேம்படுத்தி அதற்கு டிராஜன் Trajan சாலை என்று பெயரிட்டனர். இதன் அரபிய பெயர் தாரிக் எஸ் சுல்தானி, Tariq es-Sultaniஇதற்கு சுல்தான் அல்லது அரசனின் வழி என்றும் பொருள்படும்.

இஸ்ரயேலர்கள் தனது தேசத்தின் வழியாக செல்ல அனுமதி கோரி, மோசே காதேசுக்கு அருகில் இருந்த ஏதோமின் இராஜாவிடம் தூதர்களை அனுப்பினார். எண்ணாகமம் 20:14-21ல் உள்ள வசனங்களில் இதை குறித்து வாசிக்கலாம்.



"பின்பு மோசே காதேசிலிருந்து ஏதோமின் இராஜாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி - எங்கள் பிதாக்கள் எகிப்துக்குப் போனதும், நாங்கள் எகிப்திலே நெடுநாள் வாசம்பண்ணினதும், எகிப்தியர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவப்படுத்தினதும், இவைகளினால் எங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தமும் உமக்குத் தெரிந்திருக்கிறது. கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம், அவர் எங்களுக்குச் செவிகொடுத்து, ஒரு தூதனை அனுப்பி, எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார், இப்பொழுது நாங்கள் உமது எல்லைக்கு உட்பட்ட காதேஸ் ஊரில் வந்திருக்கிறோம்.. நாங்கள் உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு கொடுக்கவேண்டும். வயல்வெளிகள் வழியாகவும், திராட்சத்தோட்டங்கள் வழியாகவும் நாங்கள் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், ராஜபாதையாகவே நடந்து, உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும், வலது புறம் இடது புறம் சாயாதிருப்போம் என்று, உமது சகோதரனாகிய இஸ்ரயேல் சொல்லி அனுப்புகிறான் என்று சொல்லச் சொன்னான். அதற்கு ஏதோம் - நீ என் தேசத்தின்வழியாய்க் கடந்துபோகக்கூடாது, போனால் பட்டயத்தோடே உன்னை எதிர்க்கப் புறப்படுவேன் என்று அவனுக்குச் சொல்லச் சொன்னான். அப்பொழுது இஸ்ரயேல் புத்திரர் அவனை நோக்கி - நடப்பான பாதையின் வழியாய்ப் போவோம் நாங்களும் எங்கள் மிருகங்களும் உன் தண்ணீரைக் குடித்தால், அதற்குக் கிரயங்கொடுப்போம், வேறொன்றும் செய்யாமல், கால் நடையாய் மாத்திரம் கடந்துபோவோம் என்றார்கள். அதற்கு அவன் - நீ கடந்துபோகக்கூடாது என்று சொல்லி வெகு ஜனங்களோடும் பலத்த கையோடும்அவர்களை எதிர்க்கப் புறப்பட்டான். இப்படி ஏதோம் தன் எல்லை வழியாய்க் கடந்துபோகும்படி இஸ்ரயேலருக்கு உத்தரவு கொடுக்கவில்லை. ஆகையால் இஸ்ரயேலர் அவனை விட்டு விலகிப்போனார்கள்."

மோசேயின் முறையீடு ஆர்வமுள்ள பல விஷயங்களைத் தொடுகிறது. முதலில், மோசே தம் ஜனங்களை "உன் சகோதரன் இஸ்ரயேல்" என்று விவரித்தார். இது குடும்பத்திற்கு ஒரு வியப்பான வேண்டுகோள். இஸ்ரயேலின் தகப்பனாகிய யாக்கோபு, ஏசாவின் சகோதரன். ஏதோம் என்பது ஏசாவின் மற்றொரு பெயர். இப்போது இவர்கள் ஏசாவின் தலைமுறைகள். (ஆதியாகமம் 36:1)

## ஏதோமியர்கள், மோவாபியர்கள், மீதியானியர்கள்

"வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் வசிக்கும் பல்வேறு தேசங்களின் அக்கிரமம் முழுமையடைந்ததினால், இஸ்ரயேலரால்





துரத்தப்படவிருந்தது. இவர்கள் ஆபிரகாமுடன் தொடர்புடையவர்கள் அல்ல. ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் தெற்கிலும் கிழக்கிலும் வசித்து வந்த ஏதோமியர்கள், மோவாபியர்கள் மற்றும் மீதியானியர்கள் இஸ்ரயேலரின் இரத்த உறவினராக இருந்தார்கள். மீதியானியர்கள் கேத்துராள் மூலம் ஆபிரகாமின் பிள்ளைகள். மோவாபியர்கள் லோத்தின் பிள்ளைகள். இவர்களும் ஆபிரகாமின் உறவினர்கள். ஏதோமியர்கள் யாக்கோபின் சகோதரனாகிய ஏசாவின் வழித்தோன்றல்கள். இந்த ஜனங்கள் தாக்குதல் செய்தால் தவிர, இஸ்ரயேல் இந்த உறவிற்கு தொடர்புடைய ஜனங்களை துன்புறுத்தாமல் விட்டுவிடலாம் என்பதே தெய்வீக திட்டமாக இருந்தது. (**R5315**)

யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் தங்கள் வாழ்க்கையின் ஆரம்பத்தில் ஒருவருக்கொருவர் அதிக பகை இருந்தபோதிலும், பின்னர் அவர்கள் ஒருவருக்கொருவர் மிகுந்த பாசத்துடன் சமாதானம் ஆனார்கள். "அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான், இருவரும் அழுதார்கள்." (ஆதியாகமம் 33:4) சொல்லப்போனால், ஏதோமியர்களுக்கு மரியாதை தரும்படி இஸ்ரயேலர்களுக்குக் கட்டளையிடப்பட்டது!. "ஏதோமியனை அருவருக்காயாக, அவன் உன் சகோதரன், எகிப்தியனை அவருவக்காயாக, அவன் தேசத்திலே பரதேசியாயிருந்தாய். மூன்றாம் தலைமுறையில் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாம்." (உபாகமம் 23:7,8)

ஏதோமின் இராஜா இந்த தனிப்பட்ட வரலாற்றை அறிந்திருக்க வேண்டும். ஆனால் மோசே கோரிக்கையை வலியுறுத்த விரும்பினார். மேலும் மிக சமீபத்தில் எகிப்தில் அவர்களின் அனுபவங்களையும் ஒரு தேவதூதரின் தெய்வீக கரம் அவர்களின் விடுதலைக்கு உதவியதையும் கூறினார். ஏதோமியர்கள் எந்த விதத்திலும் கவலைபடக்கூடாததினால், மோசே கூடுதலாக, அவர்கள் ஏதோம் தேசத்தின் வழியாகச் செல்லும் போது, அவர்களுடைய மதிப்புமிக்க எதையும் தொடாமல் இருப்பதாக உறுதியும் அளித்தார். அவர்களுடைய வயல்களும், திராட்சைத் தோட்டங்கள், தண்ணீர் வசதிகளும் கண்டிப்பாகத் தவிர்க்கப்படும் என்றார். இஸ்ரயேலர் இராஜாவின் நெடுஞ்சாலையிலிருந்து சிறிதளவும் விலகிச் செல்ல மாட்டார்கள் என்றார். அடுத்தடுத்த பேச்சுவார்த்தைகளில், ஏதோமின் இராஜா இரண்டு முறை கோரிக்கையை நிராகரித்தார் மற்றும் இஸ்ரயேலரை அனுமதிக்கவில்லை. மேலும் ஏதோமின் இராஜா, இஸ்ரயேலர் தேசத்தின் வழியாகச் செல்வதைத் தடுக்க, பெரும் பலத்துடன் வெளியே வந்தார்.






ஏதோமின் இராஜா, இஸ்ரயேலர்கள் தங்கள் எல்லைகளை கடந்து செல்ல அனுமதிப்பதை ஏன் கடுமையாக எதிர்த்தார் என்று ஒருவர் ஆச்சரியப்படலாம். நாம் ஊகிக்க மட்டுமே முடியும், ஆனால் ஏதோமும் கானானின் மற்ற தேசத்தாரும் இஸ்ரயேலுக்கு பயந்தார்கள் என்று வேதம் கூறுகிறது. "ஜனங்கள் அதைக் கேட்டுத் தத்தளிப்பார்கள், பெலிஸ்தியாவின் குடிகளைத் திகில் பிடிக்கும். ஏதோமின் பிரபுக்கள் கலங்குவார்கள், மோவாபின் பராக்கிரமசாலிகளை நடுக்கம் பிடிக்கும், கானானின் குடிகள் யாவரும் கரைந்துபோவார்கள். பயமும் திகிலும் அவர்கள்மேலும் விழும். கர்த்தாவே, உமது ஜனங்கள் கடந்துபோகும்வரையும், நீர் மீட்ட ஜனங்களே கடந்து போகும் வரையும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினால் கல்லைப்போல அசைவற்றிருப்பார்கள்." (யாத்திராகமம் 15:14-16)

இந்த பயத்தில், அவர்களுக்கு அருகில் எங்கும் இஸ்ரயேல் இருப்பதை அவர்களால் நினைக்க முடியவில்லை. மோசே இராஜாவின் பதிலை ஏற்றுக்கொண்டார், மேலும் லோத்தின் பிள்ளைகளின் தேசமான மோவாபின் கிழக்கு மற்றும் ஏதோமைச் சுற்றி கிழக்கே ஒரு பாதையில் சென்றார்கள். (நியாயாதிபதிகள் 11:18)

"இஸ்ரயேல் புத்திரரான சபையார் எல்லாரும் காதேசை விட்டுப் பிரயாணப்பட்டு, ஓர் என்னும் மலைக்குப் போனார்கள்." (எண்ணாகமம் 20:22) ஓர் மலையின் இருப்பிடம் குறித்து, ஒரு குறிப்பு குறிப்பிடப்படுகிறது. "வேதாகமத்தில், ஆரோன் மரித்த இடம் ஓர் மலை, ஏதோமின் எல்லைக்கு அருகில் இருந்தாலும், இன்று அதன் சரியான இடம் பெரும் விவாதத்திற்கு உட்பட்டுள்ளது."ரோம யூத வரலாற்றாசிரியர் ஜோசபஸின் (கிபி 37 -100) கருத்துப்படி, அரபு மொழியில் "ஆரோன் நபியின் மலை" என்று பொருள்படும் ஜெபல் நெபி ஹருன் *Jebel Nebi{} Harun* என்ற இரட்டை உச்ச மலையே உண்மையான இடமாகும். 4780 அடி உயரத்தில், ஜோர்டானின் பெட்ராவில் உள்ள ஏதோமிய மலைகளில் இந்த மலை அமைந்துள்ளது. ஜாபால் ஹருன் Jabal Harunஎன்றும் அழைக்கப்படும், மலையின் உச்சியில் ஆரோனின் கல்லறை இருப்பதாக கூறும் இடத்தில் ஒரு ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

இந்த ஓர் என்ற மலையில் பிரதான ஆசாரியரான ஆரோனின் வாழ்க்கை முடிவுக்கு வந்தது. இது யெகோவா தேவனின் வழிநடத்துதலால் நிகழ்ந்தது. "ஏதோம் தேசத்தின் எல்லைக்கு அருகான ஓர் என்னும் மலையிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி - ஆரோன் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான். மேரிபாவின் தண்ணீரைப் பற்றிய காரியத்தில் நீங்கள் என் வாக்குக்குக் கீழ்படியாமற்போனபடியினால், நான் இஸ்ரயேல் புத்திரருக்குக் கொடுக்கிற தேசத்தில் அவன் பிரவேசிப்பதில்லை. நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் {ஆரோனின் மற்ற இரண்டு குமாரர்களான நாதாப் மற்றும் அபியூ பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்த குலைச்சலாக்கின போது அவர்கள் மரித்தார்கள். மேலும் இத்தாமர் இன்னும் உயிருடன் இருந்தாலும் இங்கு அவரைப் பற்றி குறிப்பிடப்படவில்லை}கூட்டிக்கொண்டு, அவர்களை ஓர் என்னும் மலையில் ஏறப்பண்ணி, ஆரோன் உடுத்தியிருக்கிற வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துவாயாக, ஆரோன் அங்கே மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான் என்றார். கர்த்தர் கட்டளையிட்டபடியே மோசே செய்தான், சபையார் எல்லாரும் பார்க்க, அவர்கள் ஓர் என்னும் மலையில் ஏறினார்கள். அங்கே ஆரோன் உடுத்தியிருந்த வஸ்திரங்களை மோசே கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தினான், அப்பொழுது ஆரோன் அங்கே மலையின் உச்சயிலே மரித்தான், பின்பு மோசேயும் எலெயாசாரும் மலையிலிருந்து இறங்கினார்கள். ஆரோன் ஜீவித்துப்போனான் என்பதைச் சபையார் எல்லாரும்



கண்டபோது, இஸ்ரயேல் வம்சத்தார் எல்லாரும் ஆரோனுக்காக முப்பது நாள் துக்கங்கொண் டாடினார்கள்."(எண்ணாகமம் 20:23-29)

இந்த சம்பவத்தில் கவனிக்க வேண்டிய பல சுவாரஸ்யமான விஷயங்கள் உள்ளது. ●முதலாவதாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் ஆரோன் நுழைவதை மறுப்பதற்கான காரணத்தை யெகோவா தேவன் கூறுகிறார். " மேரிபாவின் தண்ணீரைப் பற்றிய காரியத்தில் நீங்கள் என் வாக்குக்குக் கீழ்ப்படியாமற்போனபடியினால்..." இதில் ஆரோனின் குற்றம் குறித்து நாம் ஆச்சரியப்படலாம், ஏனென்றால் மோசே தான் கன்மலையுடன் பேசுவதற்குப் பதிலாக அதை அடித்தார். ஆனால் சம்பவத்தை உண்ணிப்பாக ஆராய்ந்தால், ஆரோனும் இந்த செயலில் முழு ஈடுபாடு கொண்டவர் என்று தெரிகிறது. அந்த நேரத்தில் மோசேயும் ஆரோனும் ஒன்றாக இருந்தனர், ஜனங்களுக்கு முன் ஒரு ஐக்கிய முன்னணியைக் காட்டினார்கள். "உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று ..." என்று மோசே சொன்னார். (எண்ணாகமம் 20:10,11) எனவே, மோசேக்கு ஆதரவாக ஆரோன் காரியங்களைச் செய்து பாவத்தில் பங்கேற்றார் என்பதை நாம் தெளிவாகக் காண்கிறோம்.

●இரண்டாவதாக, பிரதான ஆசாரியர் பதவியின் வாரிசு வியத்தகு முறையில் செயல் முறைப்படுத்தப்பட்டது. ஆரோனின் பிரதான ஆசாரிய வஸ்திரங்களை "கழற்றி" ஆரோனின் மூத்த குமாரனாகிய எலெயாசாருக்கு அணிவிக்கும்படி மோசேயிடம் கூறப்பட்டது. இது தெய்வீக எழுத்தில் சேர்க்கப்படவில்லை என்றாலும், ஏதோ குறிப்பிட்ட சமயத்தில் எலெயாசர் ஒரு புதிய பிரதான ஆசாரியருக்கான முன்மொழியப்பட்ட நிறுவல் செயல் முறையை மேற்கொண்டார் என்று நாம் கருதலாம். (யாத்திராகமம் 29)

ஆரோனின் மரணத்தைப் பற்றிய விவரங்கள் எண்ணாகமம் 33:38,39ல் கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ளது. "அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோன் கர்த்தருடைய கட்டளையின்படியே ஓர் என்னும் மலையின்மேல் ஏறி, அங்கே இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாற்பதாம் வருஷம் ஐந்தாம் மாதம் முதல் தேதியிலே மரணமடைந்தான். ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரணமடைந்தபோது நாற்றிருபத்துமூன்று



வயதாயிருந்தான்."

ஆரோனின் மரணத்தின் போது அவருக்கு 123 வயது, மோசேயை விட மூன்று வயது மூத்தவர். ஆரோனின் விசுவாசக் குறைபாடுகள் வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருந்தாலும், அவர் பொதுவாக இஸ்ரயேலின் முதல் பிரதான ஆசாரியராக விசுவாசமுள்ளவராக காணப்பட்டார். சங்கீதம் 106:16 இல் அவர் மிகவும் நேர்மறையாக விவரிக்கப்பட்டுள்ளார். "பாளயத்தில் அவர்கள் மோசேயின்மேலும், கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோனின் மேலும் பொறாமைகொண்டார்கள்."

அவரது மரணத்தின் தேதி மிகவும் குறிப்பிடத்தக்கது, நாற்பதாம் ஆண்டின் ஐந்தாம் மாதத்தில் முதல் நாள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் செல்வதற்கு இன்னும் எட்டு மாதங்கள் மட்டுமே இருந்தது. அந்த எட்டு மாதங்களில் அநேக காரியங்கள் நடந்தது!

பாவத்திலிருந்து விடுதலை

# கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள்



*Author to come*

"அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார், அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரயேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்." (எண்ணாகமம் 21:6)

கானானியர்கள் பல தசாப்தங்களாக இஸ்ரயேலர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். இஸ்ரயேலின் வனாந்தர பயணத்தின் தொடக்கத்தில், அமலேக்கியர் இஸ்ரயேலருக்கு ஒரு சவாலாக இருந்தார்கள். ஆனாலும் அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். (யாத்திராகமம்17) எகிப்தியர்களுக்கு யெகோவா தேவன் என்ன செய்தார் என்பது அமலேக்கியர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. ஒருவேளை அவர்களின் 40 வருட சாபத்தையும் பற்றி அவர்கள் அறிந்திருக்கலாம். அப்படியானால், இந்த 40 வது வருடம் அவர்களின் இராணுவ ஆக்கிரமிப்பை அது விவரித்திருக்கும்.

இராஜாவாகிய ஆராத் இஸ்ரயேலை தாக்கி, சிலரை சிறைப்பிடித்துக்கொண்டுபோனான். "வேவுகாரர் காண்பித்த வழியாக இஸ்ரயேல் வருகிறார்கள் என்று தெற்கே வாசம்பண்ணுகிற கானானியனாகிய ஆராத் இராஜா கேள்விப்பட்டபோது, அவன் இஸ்ரயேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களில் சிலரைச் சிறைப்பிடித்துக்கொண்டுபோனான்." (எண்ணாகமம் 21:1)

இஸ்ரயேலர்களின் இந்த புதிய தலைமுறை, கானானிய படையெடுப்பினால் கோபமடைந்தனர். கோபத்தில், அவர்கள் பழிவாங்குவதாக சபதம் செய்தனர். உண்மையில், இது அவர்கள் தங்கள் பாதுகாப்பிற்கான யெகோவா தேவனிடம் செய்த வேண்டுகோளாகவும் இருந்தது. "அப்பொழுது இஸ்ரயேலர் கர்த்தரை நோக்கி - தேவரீர் இந்த ஜனங்களை எங்கள் கையில் ஒப்புக் கொடுத்தால், அவர்களுடைய பட்டணங்களைச் சங்காரம் பண்ணுவோம் என்று பிரதிக்கினை பண்ணினார்கள். கர்த்தர் இஸ்ரயேலின் சத்தத்துக்குச் செவிகொடுத்து, அவர்களுக்குக் கானானியரை ஒப்புக்கொடுத்ததால், அப்பொழுது அவர்களையும் அவர்கள் பட்டணங்களையும் சங்காரம்பண்ணி, அவ்விடத்திற்கு ஓர்மா என்று பேரிட்டார்கள்." (எண்ணாகமம் 21:2,3) யோசுவாவின் கீழ் கானானியர்களுக்கு எதிராக பாளையம் இறங்கினபோது, உண்மையில் இஸ்ரயேலர்கள் அவர்களின் சபதத்திற்கு ஏற்ப அவர்களின் பட்டணங்களை அழித்தார்கள் என்பதற்கான



விளக்கத்தை அடைப்புக்குறிக்குள் இருக்கும் மூன்றாம் வசனம் கொடுப்பதாக தோன்றுகிறது.

அவர்கள் அந்த இடத்திற்கு "ஓர்மா" என்று பெயரிட்டனர், அதற்கு "அர்ப்பணிப்பு" என்று பொருள். இது அவர்களின் புதிய சபதத்தை நினைப்பூட்டுவதாக இருந்தது. ஆனால் வேவுக்காரர்கள் ஒரு மோசேமான செய்தியைக் கொண்டுவந்த பிறகு யெகோவா தேவனுடைய சித்தத்திற்கு எதிரான மீறுதலையும் அது அவர்களுக்கு நினைப்பூட்டியது.

அந்த ஆரம்ப காலத்தில், பேரழிவான முடிவுகள் வந்தாலும், கானானுக்கு அணிவகுத்துச் செல்வதாக ஜனங்கள் தீர்மாணித்தார்கள். "அப்பொழுது அமலேக்கியரும் கானானியரும் அந்த மலையிலே இருந்து இறங்கிவந்து, அவர்களை முறிய அடித்து, அவர்களை ஓர்மா மட்டும் துரத்தினார்கள். "(எண்ணாகமம் 14:45) யெகோவா தேவன் இஸ்ரயேலை அதே இடத்திற்கு, அதே எதிரிகளுக்கு எதிராக மீண்டும் கொண்டு வந்தார், ஆனால் இந்த முறை இஸ்ரயேலுக்கு வெற்றியைக் கொடுத்தார்.

இஸ்ரயேலின் எதிரிகளின் இத்தகைய அழிவு இன்றைய போரின் தராதரங்களின்படி தீவிரமானதாகத் தெரிகிறது. ஆனால், கர்த்தர் இஸ்ரயேலுடனான தொடர்புகளில், இஸ்ரயேலரை அந்நியரின் பழக்கவழக்கங்களிலிருந்து பாதுகாக்க கானானியர்களைப் போன்ற பயங்கரமான துன்மார்க்கமான ஜனங்களை அழிக்க இறையாண்மையுள்ள உரிமையைக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அந்த அனுபவங்களில் யெகோவா தேவன் நிழலான தீர்க்கதரிசன வகைகளையும் உருவாக்கினார், அது தம்முடைய வருங்கால ஜனங்களுக்குக் கற்பிப்பதன் மூலம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

## மீண்டும் முறுமுறுப்பு

"அவர்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்போகும்படிக்கு, ஓர் என்னும் மலையைவிட்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய்ப் பிரயாணம் பண்ணினார்கள், வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள். ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி - நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன ? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை, இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்." (எண்ணாகமம் 21:4,5)

இங்கு, 40 ஆம் வருடத்தில் இஸ்ரயேலர்களின் புதிய தலைமுறை இருந்தது. 20 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முந்தைய தலைமுறையினர் இந்த நேரத்தில் கிட்டத்தட்ட இல்லாமல் போய்விட்டனர். ஆனால் அப்போதைய சந்ததியினர் தங்கள் முன்னோர்களைப் போலவே மோசேக்கு எதிராக மோசமான அணுகுமுறைகளைக் கொண்டிருந்தனர். 40 வருட தொடக்கத்தில் முறுமுறுப்பினால் ஏற்பட்ட சோகமான விளைவுகளை அவர்கள் நினைவில் கொண்டிருந்திருப்பார்களா, என்று ஒருவர் நினைக்கலாம். ஒரு வகையில் இந்த முறுமுறுப்பு மோசமாக இருந்தது. எப்படி ? முந்தைய எட்டு சந்தர்ப்பங்களில் (யாத்திராகமம் 15:24, 16:2, 17:3,

எண்ணாகமம் 12:1, 14:2, 16:3, 16:41, 20:2) மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக இஸ்ரயேலர் முறுமுறுத்தார்கள். அவர்களின் புகார்கள் உண்மையில் கடவுளுக்கு எதிரானவை என்று மோசே விளக்கினார். (யாத்திராகமம் 16:7-8 , எண்ணாகமம் 14:27) அந்த நேரத்தில், இஸ்ரயேலர்கள் அதை வெளிப்படையாகச் செய்வதற்கு வெட்கமற்றவர்களாக இருக்கவில்லை. ஆனால் இப்போதோ ஒரு முக்கியமான வேறுபாடு இருந்தது. அவர்கள் கடவுளுக்கு எதிராகவும் மோசேக்கு எதிராகவும் நேரடியாகப் பேசியதால் மிகுந்த ஆபத்து நேரிட்டது.

## மன்னாவை இகழ்ந்தனர்

குறிப்பாக இது வருத்தமாக இருக்கிறது, ஏனென்றால் அவர்கள் ஒரு தேசமாக, யெகோவா தேவன் மேல் வைத்த அளவு கடந்த நம்பிக்கையினால் அவருக்கு ஒரு வாக்களித்திருந்தார்கள். அதைவிட மோசமான விஷயம் என்னவென்றால், யெகோவா தேவன் தாராளமாக அளித்து வந்த அற்புதமான மன்னாவைப் பற்றிய அவர்களுடைய அணுகுமுறை வருந்தத்தக்கதாக இருந்தது. மன்னா ஜனங்களால் வெறுக்கப்பட்டது.! "இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்." (எண்ணாகமம் 21:5)

இது கடவுளை அவமதிக்கும் செயலாகும். இந்த மன்னா ஒரு விலைமதிப்பற்ற பரிசு! உண்மையில் இது "பரலோகத்திலிருந்து வந்த உணவாகும்." "அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்டளையிட்டு வானத்தின் கதவுகளைத் திறந்து, மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்கு கொடுத்தார்."(சங்கீதம் 78:23,24)

கடந்த தசாப்தங்களில் யெகோவா தேவனுடைய அருமையான வழிநடத்துதலை கேலி செய்தார்கள். இது மன்னிக்க முடியாத அவிசுவாசம். சார்லஸ் ஸ்பர்ஜன் Charles Spurgeon அவர்களின் கதாப்பாத்திரங்களில் இந்த பயங்கரமான குறைபாடுகளை சுருக்கமாக வகைப்படுத்தினார். "நாம் முறுமுறுக்கும் போது, இந்த இஸ்ரயேலர்களைப் போலவே நாமும் எல்லாவற்றையும் குறித்து புகார் செய்கிறோம் - அவர்கள் கடவுளைப் பற்றியும், மோசேயைப் பற்றியும் மன்னாவைப் பற்றியும் புகார் செய்தனர்." அவர்கள் ஆரோனைப் பற்றியும் புகார் செய்திருப்பார்கள், ஆனால் அதிர்ஷ்டவசமாக, அவர் மரித்து ஒரு மாதத்திற்கு மேல் ஆனது. அவர்கள் மோசேயின் மீது அதிகமாக கசப்பை ஊற்றினார்கள். இந்த நிலையில் உள்ளவர்களுக்கு எதுவும் சரியாக இருக்காது. எதுவும் சரியாகவும் இருக்க முடியாது. **1**.

## "கொள்ளிவாய் சர்ப்பங்கள்"

இந்த நடத்தைக்கான விளக்கம் எதுவாக இருந்தாலும், அவர்களின் நன்றியுணர்வுக்கு திருத்தம் தேவைப்பட்டது. வாக்குத்தத்தம் அளிக்கப்பட்ட தேசத்தை கைப்பற்றுவதில் வரவிருக்கும் படையெடுப்பின் பார்வையில் இது குறிப்பாக அவசியமானது. கானானியர்களின் பட்டணங்களையும் படைகளையும் எதிர்கொள்ள அவர்கள் விசுவாசத்தில் பலமாக இருக்க வேண்டியிருந்தது. எனவே கடவுள் செயல்பட்டார். "அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை

ஜனங்களுக்குள்ளே அனுப்பினார், அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரயேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்." (எண்ணாகமம் 21:6)

வனாந்தர பயணத்தின் ஆரம்பத்தில், எகிப்தில் பல வருடங்களாக அடிமைகளாக இருந்த ஜனங்கள் பலவீனமான விசுவாசமுள்ளவர்களாக இருந்தனர். இதன் விளைவாக, யெகோவா தேவன் அவர்கள் மீது விதித்த ஆரம்பகால தண்டனைகளில் அவர்கள் உயிர் இழக்கவில்லை. பத்தாவது வாதையின் மூலம், கடவுளின் தண்டனைகளில் சிலரின் அழிவும் அடங்கும். ஆனால் இங்கே, வனாந்தர பயணத்தின் முடிவில், அதே போல சகிப்புத்தன்மை காணப்படவில்லை. தொடக்கத்தில் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராக முறுமுறுத்தவர்களுக்கு என்ன நடந்தது என்ற பதிவு அனைவரும் அறிந்ததே. இந்த இஸ்ரயேலர்களுக்கு இதேபோன்ற வளர்ச்சிக்கான காலம் தேவையில்லாதிருந்தது. அவிசுவாசமான நடத்தைக்கு ஒரு பேரழிவு உண்டு என்பதை நினைப்பூட்டுவது அவசியமாகவும் இருந்தது. கொள்ளிவாய் சர்ப்பங்கள் கடித்தவர்கள் மரித்தார்கள்!.

சர்ப்பம் கடித்ததைத் தொடர்ந்து அதன் விஷத்தினால் எரியும் வலி, "கொள்ளிவாய்" என்று குறிப்பிடப்படுவதே அதன் பொருளாகும். கிரேக்க செப்டுவஜின்ட் Greek Septuagint "கொடிய" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது மற்றும் லத்தீன் வல்தேட் Vulgate "எரித்தல்" என்ற வார்த்தையை



பயன்படுத்துகிறது. சர்ப்பத்தின் இனத்தை அடையாளம் காண்பது நிச்சயமற்றது, ஆனால் சிலர் இது எகிப்தின் நாஜா ஹாஜே naja hajeஎன்று கூறுகின்றனர்.( **2**)

ஜனங்கள் மன்னாவைப் பற்றி புகார் செய்தனர், கொள்ளிவாய் சர்ப்பங்கள் தண்டனையாக அனுப்பப்பட்டன. மன்னாவிற்கும் கொள்ளிவாய் சர்ப்பங்களுக்கும் இடையே சில சுவாரஸ்யமான முரண்பாடுகள் உள்ளது. மன்னா வானத்திலிருந்து வந்தது, கொள்ளிவாய் சர்ப்பங்கள் பூமியிலிருந்து வந்தது, மன்னாவால் உயிர் பிழைத்தார்கள், கொள்ளிவாய் சர்ப்பங்களால் மரணம் வந்தது. மரித்தவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் வாசற்படியில் மரித்தார்கள் என்பது மிகுந்த வருத்தமளிக்கிறது. இன்னும் சில மாதங்கள் விசுவாசத்தோடு இருந்திருந்தால் அவர்களும் கானானை சேர்ந்திருப்பார்கள்.

பயணத்தின் தொடக்கத்தில் கண்டனம் செய்யப்பட்டவர்களில் கடைசியானவர்கள் இங்கு மரித்திருக்கலாம். அப்படியானால் தண்டனைக்கு குறிப்பிட்ட ஒரு நியாயம் உண்டு. வெளிப்படையாக மரணம் உடனடியாக வரவில்லை. பாதிக்கப்பட்டு இறக்கும் நிலையில் இருந்த சிலர் உதவி கேட்டனர். "அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய், நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம் சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள் மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணினான்." (எண்ணாகமம் 21:7)

இந்த கூட்டு ஒப்புதல் வாக்குமூலம் பொருத்தமானது, அவர்களின் பாவத்தை ஒப்புக்கொண்டு, அவர்கள் செய்த பாவத்தின் விளைவை அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறது. ஒருவேளை அவர்களுக்கு இருந்த தேவ பயத்தினால் அவர்கள் மோசேயிடம் ஜெபிக்க சொல்லியிருக்கலாம். இன்னும் அவர் மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தார்கள் என்பதற்கான அறிகுறியாக இருந்தது. மோசே மிகுந்த இரக்கமுள்ளவராக இருந்தபடியால், அவர் ஜனங்களுக்காக யெகோவா தேவனிடம் ஜெபித்தார்.

"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி - நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை, கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார். அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான், சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைப்பான்."(எண்ணாகமம் 21:8,9)

இந்த ஒரு ஏற்பாடு, பிரச்சனைக்கு மிகவும் விநோதமான தீர்வாகத் தோன்றியது. கடவுள் விசித்திரமான விஷயங்களைக் கட்டளையிடும்போது, அது பெரிய படிப்பினைகளை வெளிப்படுத்தும் நோக்கம் கொண்டது என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம்.

மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உருவாக்கும்படி கட்டளையிட்டார். பல மொழிபெயர்ப்புகள் இதை "தாமிரம்" அல்லது "செம்பு"



பாம்பாக சொல்லப்படுகிறது. நிச்சயமாக அது வெண்கலம் அல்ல, ஏனெனில் செம்பு மற்றும் துத்தநாக (zinc) கலவை அந்த நேரத்தில் இருக்கவில்லை. எனவே மோசே பயன்படுத்திய உலோகம் பெரும்பாலும் தாமிரமாக இருந்திருக்க வேண்டும்.

நெகோஷேத் (*nechosheth*)என்ற வார்த்தை "வெண்கலம்" என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின் பெரும்பாலான இடங்களில் சரியான மொழிபெயர்ப்பு தாமிரமாக இருக்கும், இருப்பினும் இது சில இடங்களில் வெண்கலம், செம்பு மற்றும் தகரம் ஆகியவற்றின் கலவையைக் குறிக்கலாம்.

உபாகமம் 8:9, 33:25 மற்றும் யோபு 28:2 ஆகியவற்றிலிருந்து நாம் பார்ப்பது போல், உண்மையில் ஒரு எளிய உலோகம் வெளிப்படையாக காணப்படுகிறது. நோக்கப்பட்டது. தாமிரம் மிகவும் ஆரம்ப காலத்தில் அறியப்பட்டது, மேலும் அதை வேலை செய்யும் கண்டுபிடிப்பு தூபால் காயீன் என்று கூறப்படுகிறது. (ஆதியாகமம் 4:22) (**3**)

எனவே, இந்த கொள்ளிவாய் சர்ப்பங்கள் கடித்தால், அதற்கான மாற்று மருந்து, செம்பு பாம்பை பார்த்தால் மட்டும் போதும். இது அதனுடைய குணப்படுத்தும் மற்றும் மீட்கும் பண்புகளை அங்கீகரிப்பதாகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரிந்தியர் 10 ல் இஸ்ரயேலின் பல அனுபவங்களைத் தொட்டு காட்டுகிறார். 11ம் வசனத்தில், "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" என்று அவர் எழுதுகிறார்.

## இயேசுவின் ஒரு அடையாளம்

யோவான் 3:14,15ல் செம்புச் சர்ப்பத்தின் அர்த்தத்தை இயேசு விளக்கினார். "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்."

செம்புச் சர்ப்பத்திற்கும் தனக்கும் இடையே உள்ள மிக சுவாரஸ்யமான மற்றும் எதிர் உள்ளுணர்வு தொடர்பை இயேசு நமக்கு வழங்குகிறார். சர்ப்பம் மற்றும் சர்ப்பங்களைப் பற்றி நாம் நினைக்கும் போது, நாம் இயல்பாகவே அவற்றை ஏதேன் தோட்டத்தில் சாத்தானும், அவன் ஆதாம் மற்றும் ஏவாளுக்கு அறிமுகப்படுத்திய பாவத்துடனும் தொடர்புபடுத்துவோம். அப்படியானால் இயேசுவை எப்படி சர்ப்பத்துடன் தொடர்புபடுத்த முடியம்?

சர்ப்பம் மற்றும் நம் ஆண்டவர் இருவரும் உயர்த்தப்பட்டனர் என்பதே இணையாகும். அவர்கள் இருவரும் ஏன் தூக்கப்படவேண்டும் ? செம்பு சர்ப்பத்தின் விஷயத்தில், இஸ்ரயேலரை ஒரு சர்ப்பத்தின் கடியின் மரணத்திலிருந்து விடுவிப்பதற்காக அது உயர்த்தப்பட்டது. உலகத்தைப் பொறுத்தவரை, சர்ப்பமாகிய சாத்தானின் கடியிலிருந்து அதாவது மரணத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு நம் ஆண்டவர் உயர்த்தப்பட்டார். இரண்டு சந்தர்ப்பங்களிலும், ஒரு தனிப்பட்ட நடவடிக்கை தேவைப்பட்டது. பாதிக்கப்பட்ட இஸ்ரயேலர்கள் அதை "பார்க்க" அல்லது உற்றுநோக்க வேண்டியதாக இருந்தது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை உலகம் பார்க்க வேண்டும், அவரை விசுவாசிக்கவேண்டும். "பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள், நானே தேவன், வெறொருவரும் இல்லை."(ஏசாயா45:22)

இயேசுவுக்கு நிழலாக ஒரு சர்ப்பத்தை பயன்படுத்துவது, இயேசு உலகின் பாவங்களைச் சுமக்கிறார் என்பதை அங்கீகரிப்பதோடு ஒத்துப்போகிறது. "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." (எபிரெயர் 9:28)

"நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார், அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்."(1பேதுரு2:24)

"நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்,

கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்." (ஏசாயா53:6)

சர்ப்பத்தைச் செய்ய பயன்படுத்தப்பட்ட உலோகம் செம்பு என்பதை முன்னரே கவனித்தோம். இதுவும் குறிப்பிடத்தக்கது. *Tabernacle Shadows* என்ற புத்தகத்தில் இப்படியாக பாஸ்டர் எழுதினார் - "செம்பு மனித பரிபூரணத்தை முழுமையாக பிரதிபலிக்கிறது."(பக்கம் 18) செம்பின் பயன்பாடு, இயேசு மாம்சத்தில் ஒரு பரிபூரண மனிதன் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது, மீட்கும் பொருளாக ஆதாமுக்கு சரி நிகர் சமான விலையாக அவர் இருந்தார்.

ஒரு இஸ்ரயேலர் செம்புச் சர்ப்பத்தைப் பார்க்கும்போது என்ன பார்ப்பார் என்பதை நம்முடைய கடைசி அவதானிப்பு - *Photo Drama of Creation* னின் விளக்கப்படத்தில், ஒருவர் சிலுவையின் மறுக்க முடியாத உருவத்தை காண்பார். கிறிஸ்துவின் சிலுவை அழகாக மாதிரிப்படுத்தப்பட்ட மற்றொரு வழி இதுவாகும். மருத்துவ சிகிச்சையின் நவீன சின்னம் " Rod of Asclepius " ஆகும்.

கி. மு. 8 ஆம் நூற்றாண்டின் இலியாட்டின் Illiad ஹோமரின் Homer எழுத்துக்களுடன் இணைக்கப்பட்ட சர்ப்பம் பிணைக்கப்பட்ட கோல், பிரபலமாக கருதப்பட்டாலும், அதன் தோற்றம் உண்மையில் வேதாகமத்தில் இருந்து எடுக்கப்பட்டதாக நம்புவதற்கு காரணம் உள்ளது. (**4**)

**எசேக்கியா இராஜா**

எசேக்கியா இராஜாவின் நாட்களில் செம்புச் சர்ப்பத்தைப் பற்றிய மற்றொரு குறிப்பை நாம் கவனிக்கிறோம். அவர் ஒரு நல்ல இராஜா, யெகோவா தேவனை தொழுதுக்கொள்வதில் பக்தியுடன் இருந்தார். இஸ்ரயேலில் உண்மையான கடவுளின் தொழுகையை மீண்டும் நிலைநாட்ட அவர் மேற்கொண்ட முயற்சியில், மோசேயின் காலத்தில் பலருக்கு உயிர் கொடுத்த இந்தப் பழங்காலப் பொருளை ஒரு விக்கிரகமாக வடிவமைக்கப்பட்டதை கண்டுபிடித்தார்!

"அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான். அந்நாட்கள் மட்டும் இஸ்ரயேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள், அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான்."(2இராஜாக்கள் 18:4) {எசேக்கியா இராஜா துண்டு துண்டாக உடைத்த செம்புச் சர்ப்பத்தின் பெயர் நிகுஸ்தான். அது சர்ப்பத்தின் வடிவம் கொண்டதும் மற்றும் அது செம்பினால் செய்யப்பட்டதினால் நிகுஸ்தான் என்று பெயரிடப்பட்டது.}

இந்த வரலாற்று நிகழ்வில் ஆழமான தீர்க்கதரிசன தாக்கங்கள் உள்ளது. இந்த செம்புச் சர்ப்பத்தால் அடையாளப்படுத்தப்படும் கிறிஸ்துவின் சிலுவை, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு அற்புதமான அர்த்தத்தைக் கொண்டிருந்தது. இது இரட்சிக்கக்கூடிய இயேசுவின் பலியின் வல்லமையையும், மரணம் வரையில் அவர்களின் சொந்த அர்ப்பணிப்பையும் அடையாளப்படுத்துகிறது.

"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து

மேன்மைபாராட்டாதிருப்பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்." (கலாத்தியர் 6:14)

"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. " (1கொரிந்தியர் 1:18) துரதிர்ஷ்டவசமாக, அப்போஸ்தலர்கள் மறைந்த பிறகு, மதச்சார்பற்ற சபைகளின் சிந்தனையில் கோட்பாட்டுப் பிழைகள் ஊடுருவின. மேலும் கிறிஸ்துவின் சிலுவை, மிகவும் அற்புதமான மற்றும் வல்லமையுள்ள அடையாளமாக இருந்தது, ஆனால் இது ஒரு விக்கிரகமாக மாற்றப்பட்டது. கத்தோலிக்க அமைப்புகளில், இன்றும் கூட, சிலுவையின் உருவத்தை முத்தமிடும் அளவிற்கு அது வழிபடப்படுகிறது. இருண்ட காலங்களில் கிறிஸ்துவின் சிலுவைக்காக, கிறிஸ்துவின் சிலுவையின் பெயரால் நடத்தப்பட்ட சிலுவைப் போர்கள் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் மற்றும் அப்பாவி பொது ஜனங்களின் மரணத்திற்கு வழிவகுத்தன!

எசேக்கியாவின் மறுமலர்ச்சி வேலை அத்தகைய ஊழலைக் கையாள்வதை முன்னறிவிக்கிறது. அவர் அதைத் தகுந்த முறையில் சமாளித்தார் - விக்கிரகமாக மாற்றப்பட்ட அந்த பொருளை உடைத்தெறிந்தார்! சாத்தான் தனது நோக்கத்தை நிறைவேற்றியதாகத் தெரிகிறது, முஸ்லிம்களால் உணரப்பட்டது போல, அவன் விலைமதிப்புள்ளதை வெறுக்கத்தக்க பொருளாக மாற்றினான்! உண்மையிலேயே அர்ப்பணிக்கப்பட்டவர்கள், சிலுவையின் அர்த்தத்தை என்ன என்பதை உணர்ந்து, மரணம் வரை பலியின் கொள்கையில் தங்கள் அர்ப்பணிப்பைப் பேணுகிறார்கள். "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்."(கலாத்தியர் 5:24)

"இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" (1கொரிந்தியர் 2:2)

"நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 6:6)

"நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." (வெளிப்படுத்துதல் 2:10)



## குற்றச்செயலுக்குத் துணை நின்ற பிலேயாம்

# எமோரியர்களுடனும் மோவாபியர்களுடனும் யுத்தங்கள்



*Author to come*

"அப்பொழுது இஸ்ரயேலர் எமோரியரின் இராஜாவாகிய சீகோனிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி - உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு கொடுக்கவேண்டும் நாங்கள் வயல்களிலும், திராட்சத்தோட்டங்களிலும் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், உமது எல்லையைக் கடந்து போகுமட்டும் இராஜபாதையில் நடந்துபோவோம் என்று சொல்லச் சொன்னார்கள்." (எண்ணாகமம் 21:21, 22)

ஏதோமின் இராஜாவிடம் கேட்டது போலவே, மோசே எமோரியர் இராஜாவிடமும் அவர்கள் தேசத்தின் வழியாகப் பயணிக்க அனுமதி கோரினார் மேலும் அவர்களுடைய உடைமைகளுக்கு எந்த சேதமும் ஏற்படாது என்றும் உறுதியளித்தார். ஏதோமின் இராஜாவைப் போலவே, இராஜாவாகிய சீகோன் அவர்களைத் தன் நாட்டிற்குள் செல்ல அனுமதிக்கவில்லை. ஆனால் சீகோன் இன்னும் சற்று கூடுதலாக, இஸ்ரயேல் மீது தாக்குதலை நடத்தினான். "சீகோன் தன் எல்லைவழியாய்க் கடந்துபோக இஸ்ரயேலுக்கு உத்தரவு கொடாமல, தன் ஜனங்களெல்லாரையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரயேலருக்கு விரோதமாக வனாந்திரத்திலே புறப்பட்டு, யாகாசுக்கு வந்து இஸ்ரயேலரோடே யுத்தம் பண்ணினான்."(எண்ணாகமம் 21:23)

இந்த முடிவு எமோரியர்களுக்கு பேரழிவாக இருந்தது. "இஸ்ரயேலர் அவனைப் பட்டயக்கருக்கினால் வெட்டி, அர்னோன் தொடங்கி அம்மோன் புத்திரரின் தேசத்தைச்சார்ந்த யாப்போக்குவரைக்குமுள்ள அவனுடைய தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள். அம்மோன் புத்திரரின் எல்லை அரணிப்பானதாயிருந்தது. இஸ்ரயேலர் அந்த பட்டணங்கள் யாவையும் பிடித்து, எஸ்போனிலும் அதைச் சார்ந்த எல்லாக் கிராமங்களிலும் எமோரியருடைய எல்லாப் பட்டணங்ளிலும் குடியிருந்தார்கள். எஸ்போனானது எமோரியரின் இராஜாவாகிய சீகோனின் பட்டணமாயிருந்தது, அவன் மோவாபியரின் முந்தின இராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அர்னோன் வரைக்கும் இருந்த அவன் தேசத்தையெல்லாம் அவன் கையிலிருந்து பறித்துக்கொண்டான்." (எண்ணாகமம் 21:24-26)

எமோரியர்களின் இந்த முட்டாள்தனமான தாக்குதலை இஸ்ரயேல் பேரழிவுகரமாக முறியடித்தது. இஸ்ரயேலின் படைகள் எமோரிய நகரங்கள் அனைத்தையும் கைப்பற்றின. ஜனங்கள் அலைந்து திரிந்த 40 வருடங்கள் இன்னும் முடியவில்லை என்றாலும், இந்தப் போர், அவர்கள் கையகப்படுத்திய நிலத்துடன் சேர்ந்து, கானானைக் கைப்பற்றுவதற்கான தொடக்கமாக அமைந்தது.

ஒரு குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனத்தில் ஆபிரகாமிடம் எமோரியர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. "அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி - உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன், பின்பு மிகுந்த பொருட்களுடனே புறப்பட்டு வருவார்கள். நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய், நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவாய். நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள், ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை." (ஆதியாகமம் 15:13-16)



இந்த தீர்க்கதரிசனம், ஆபிரகாமின் சந்ததி நானூறு வருடங்கள் துன்பத்தை விவரிக்கிறது. அதாவது ஈசாக்கிற்கு ஐந்து வயதாக இருந்த போது இஸ்மயேலால் துன்புறுத்தப்பட்டு, எகிப்திலிருந்து புறப்படும் வரை. இந்த காலம் ஆபிரகாமுடனான உடன்படிக்கையிலிருந்து இஸ்ரயேல் புத்திரரின் விடுதலை வரை 430 வருடங்கள் ஆகும். "நானூற்றுமுப்பது வருஷம் முடிந்த அன்றைத்தினமே.." (யாத்திராகமம் 12:41, கலாத்தியர் 3:17) (**2**) இது உண்மையில் எகிப்திலிருந்து வந்த "நான்காம் தலைமுறை" ஆகும். லேவி, கோகாத், அம்ராம் மற்றும் மோசே.

எவ்வாறாயினும், எமோரியர்களைப் பற்றிய இந்தத் தீர்க்கதரிசனம் என்ன சொல்கிறது என்பதில் நம் கவனம் ஈர்க்கப்படுகிறது. கானானிய தேசமாக அவர்கள் அக்கிரமம் செய்தார்கள். அவர்களின் அக்கிரமம் இனி பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு, அதாவது "முழுமையாக" நிறைந்தது. இஸ்ரயேலர் தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளும் காலம் வரும்போது, அதே காலத்தில், எமோரியர்களின் அக்கிரமத்தை ஒழிப்பதற்கான நேரமாக இருக்கும் என்பதை யெகோவா தேவன் அறிந்திருந்தார். (**3**)

எமோரியர்களுக்கு எதிரான இந்த வெற்றி இஸ்ரயேலின் வெற்றிகளின் ஆரம்பமாக மட்டும் இருந்தது. "இஸ்ரயேலர் இப்படியே எமோரியரின் தேசத்திலே குடியிருந்தார்கள். பின்பு, மோசே யாசேர் பட்டணத்துக்கு வேவு பார்க்கிறவர்களை அனுப்பினான், அவர்கள் அதைச் சேர்ந்த கிராமங்களைக் கட்டிக்கொண்டு, அங்கே இருந்த எமோரியரைத் துரத்திவிட்டார். " (எண்ணாகமம் 21:31-32) விரிவாக்கப்பட்ட எமோரிய குடும்பத்தின் மற்ற பகுதிகள் இன்னும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் இருந்தது என்று யோசுவா ஒன்பதாம் அதிகாரம் கூறுகிறது.

எதிர்க்கமுடியாத இஸ்ரயேலின் இராணுவம் வடக்கு நோக்கி அணிவகுத்துச் சென்றது, தேவனுடைய ஆசீர்வாதத்தின் கீழ், பாசானின் இராஜாவாகிய ஓக் என்பவனைத் தோற்கடித்தது. "பின்பு பாசானுக்குப் போகிற வழியாய்த் திரும்பிவிட்டார்கள், அப்பொழுது பாசானின் இராஜாவாகிய ஓக் என்பவன் தன் சமஸ்த ஜனங்களோடும் அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ணும்படிக்கு, எத்ரேயுக்குப் புறப்பட்டு வந்தான். கர்த்தர் மோசேயை நோக்கி - அவனுக்குப் பயப்படவேண்டாம், அவனையும் அவன் ஜனங்கள் எல்லாரையும், அவன் தேசத்தையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன், எஸ்போனிலே வாசமாயிருந்த எமோரியரின் இராஜாவாகிய சீகோனுக்கு நீ செய்தபடியே இவனுக்கும் செய்வாய் என்றார். அப்படியே ஒருவரும் உயிருடன் மீதியாயிராதபடிக்கு அவனையும், அவன் குமாரரையும் அவனுடைய சகல ஜனங்களையும் வெட்டிப்போட்டு, அவன் தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள். " (எண்ணாகமம் 21:33-35)

அவர்கள் ஜனங்களைக் கைப்பற்றியதால், அவர்களின் நிலத்தையும் தங்கள் "உடைமையாக்கினர்". கிழக்கில் உள்ள இந்த நிலம் இறுதியில் ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதி கோத்திரத்தின் உடைமையாக மாறியது. இது குறிப்பிடத்தக்கதானது. இதை நாம் பின்னர் பிலேயாம் தீர்க்கதரிசி

மற்ற கானானிய குடிகள், இஸ்ரயேலின் இராணுவ வெற்றிகளை பெரும் கவலையுடன் பார்த்தனர். இவர்கள் மோவாபின் சமவெளிகளுக்குச் சென்றபோது அவர்களுடைய இராஜாவான பாலாக் மிகவும் பயந்தான். "இஸ்ரயேலர் எமோரியருக்குச் செய்த யாவையும் சிப்போரின் குமாரனாகிய பாலாக் கண்டான். ஜனங்கள் ஏராளமாயிருந்தபடியினால், மோவாப் மிகவும் பயந்து, இஸ்ரயேல் புத்திரரினிமித்தம் கலக்கமடைந்து, மீதியானியர் மூப்பரை நோக்கி - மாடு வெளியின் புல்லை மெய்கிறது போல இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்துபோடும் என்றான், அக்காலத்திலே சிப்போரின் குமாரனாகிய பாலாக் மோவாபியருக்கு இராஜாவாயிருந்தான்." (எண்ணாகமம் 22:2-4)

இஸ்ரயேலுடன் நேரடி மோதலில் தோல்வி ஏற்படும் என்பதை பாலக் உணர்ந்தான். எனவே, அவன் ஒரு பயனுள்ள உத்தியை உருவாக்கினான். "அவன் பேயோரின் குமாரனாகிய பிலேயாமை அழைத்துவரும்படி, தன் சந்ததியாருடைய

தேசத்தில் நதியருகேயுள்ள பெத்தூருக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி - எகிப்திலிருந்து ஒரு ஜனக்கூட்டம் வந்திருக்கிறது, அவர்கள் பூமியின் விசாலத்தை மூடி, எனக்கு எதிரே இறங்கியிருக்கிறார்கள். அவர்கள் என்னிலும் பலவான்கள், ஆகிலும், நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன், ஆதலால், நீர் வந்து, எனக்காக அந்த ஜனத்தைச் சபிக்கவேண்டும், அப்பொழுது ஒருவேளை நான் அவர்களை முறிய அடித்து, அவர்களை இத்தேசத்திலிருந்து துரத்திவிடலாம் என்று சொல்லச் சொன்னான்." (எண்ணாகமம் 22:5-6)

இது அவனது பிரச்சனைக்கு ஒரு புத்திசாலித்தனமான அணுகுமுறையாக இருந்தது. இஸ்ரயேலின் வெற்றிக்கு இஸ்ரயேலின் கடவுள் தான் காரணம் என்பதை இது ஒப்புக்கொண்டது. கடவுளின் சொந்த தீர்க்கதரிசிகளில் ஒருவரால் இஸ்ரயேலர் சபிக்கப்பட்டால், அவர்கள் மீதான கடவுளின் ஆசீர்வாதம் நீக்கப்படும், பின்னர் அவர்கள் தோற்கடிக்கப்படலாம். அவனுக்குத் தேவை இஸ்ரயேலை சபிக்கக்கூடிய ஒரு வல்லமையுள்ள ஒரு நண்பன். இங்குதான் பிலேயாம் காட்சிக்கு வருகிறார். இராஜா பாலாக் எப்படி பிலேயாமைப் பற்றி அறிந்திருந்தார் என்பதை நமக்கு தெரிவிக்கப்படவில்லை. மெசப்பத்தோமியா மற்றும் ஐபிராத்து நதியிலிருந்து சுமார் 400 மைல்களுக்கு அப்பால் உள்ள அவரது புகழ் மோவாப் வரை சென்றடைந்தது. இதன் விளைவாக, தூதர்கள் பிலோயாமின் இருப்பிடத்திற்குச் செல்லவும், பின்னர் அவரை மோவாபுக்குக் கொண்டு வரவும் சிறிது நேரம் எடுத்திருக்க வேண்டும்.

பிலேயாம் ஒரு நல்ல மனுஷன் அல்ல, ஆனாலும் அவன் யெகோவா தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தார். பாலாக்கின் தூதர்கள் வந்தபோது, யெகோவா தேவனிடம் தனக்குச் செய்தி வரும்வரை இரவு அங்கு தங்கும்படி பிலேயாம் அவர்களிடம் சொன்னார். யெகோவா தேவன் அவருடன் பேசினார் - "தேவன் பிலேயாமிடத்தில் வந்து, உன்னிடத்திலிருக்கிற இந்த மனிதர் யார் என்றார். பிலேயாம் தேவனை நோக்கி - சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்னும் மோவாபின் இராஜா அவர்களை என்னிடத்துக்கு அனுப்பி - பூமியின்



விசாலத்தை மூடுகிற ஒரு ஜனக்கூட்டம் எகிப்திலிருந்து வந்திருக்கிறது, ஆகையால்,நீ வந்து எனக்காக அவர்களைச் சபிக்கவேண்டும், அப்பொழுது நான் அவர்களோடே யுத்தம்பண்ணி, ஒரு வேளை அவர்களைத் துரத்திவிடலாம் என்று சொல்லச் சொன்னான் என்றான். அதற்கு தேவன் பிலேயாமை நோக்கி - நீ அவர்களோடே போகவேண்டாம், அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார்." (எண்ணாகமம்22:9-12)

அவர்களுடன் செல்ல தனக்கு அனுமதி இல்லை என்பதை பிலேயாம் சரியாக அவர்களுக்குத் தெரிவித்தார். எனவே, "மோவாபின் பிரபுக்கள்" மோவாபுக்குத் திரும்பி வந்து பாலாக்கிடம், "பிலேயாம் எங்களுடன் வர மறுக்கிறார்" என்று கூறினார்கள். பிலேயாம் போகாதபடி யெகோவா தேவன் தடைசெய்தார் என்று பாலாக்கிடம் அறிவித்ததை அவன் புறக்கணித்து, அவன் அதிகமான கனம் பொருந்திய பிரபுக்களை அனுப்பி, பிலேயாம் மோவாபுக்கு வந்து இஸ்ரயேலர்களைச் சபித்தால் அவனுக்கு பெரும் பெருமையை கொடுப்பதாக வாக்களித்தார்.

பிலேயாம் இரண்டாவது முறையாக தேவனால் அணுகப்பட்டார். ஆச்சரியப்படும் விதமாக பாலாக்கிடம் செல்ல கடவுள் பிலோயமுக்கு அனுமதி கொடுத்தார். "இரவிலே தேவன் பிலேயாமிடத்தில்



வந்து - அந்த மனிதர் உன்னைக் கூப்பிட வந்திருந்தால், நீ எழுந்து அவர்களோடே கூடப்போ, ஆனாலும், நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்றார்." (எண்ணாகமம்22:20)

ஆனால் பின்வரும் காட்சி ஒரு அசாதாரண திருப்பத்தை ஏற்படுத்தியது. "பிலேயாம் காலமே எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, மோவாபின் பிரபுக்களோடேகூடப் போனான். அவன் போகிறதினாலே தேவனுக்குக் கோபம் மூண்டது, கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராளியாக நின்றார். அவன் தன் கழுதையின்மேல் ஏறிப்போனான், அவன் வேலைக்காரர் இரண்டுபேரும் அவனோடே இருந்தார்கள். " (எண்ணாகமம் 22:21,22) பிலேயாம் போக அனுமதித்ததில் இருந்து கடவுள் ஏன் அவர் மீது கோபமாக இருந்தார் ? வசனங்களை கவனமாக படித்தால், அது கடவுள் சொன்னது அல்ல என்பதை நாம் காணலாம். "நீ எழுந்து அவர்களோடே கூடப்போ," என்று கடவுள் சொன்னார். ஆனால் பிலேயாமோ அந்த மனுஷர் கூப்பிடும் வரை காத்திருக்கவில்லை. அவரது பேராசையில், அவன் "எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, மோவாபின் பிரபுக்களிடம் போனான். " என்று வாசிக்கிறோம். அவர் கடவுளுக்கு கீழ்ப்படியவில்லை என்பது தெளிவாகிறது. பிலேயாம் முந்தி மறுத்திருந்தாலும், உண்மையில் அவன் பாலாக்கிடம் செல்ல விரும்பினார் என்பது தெளிவாகிறது.

நியாயந்தீர்க்கும் ஒரு தூதனிடம் ஒரு பட்டயத்தை கொடுத்து அவருடைய பாதையை அடைக்கச் சொன்னது மூலம் யெகோவா தேவன் தனது கோபத்தை வெளிப்படுத்தினார். பிலேயாமால் அதைப் பார்க்க முடியவில்லை !ஆனால் அவரது கழுதை அவரை கண்டது! "கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக்கொண்டு வழியிலே நிற்கிறதைக் கழுதைக் கண்டு, வழியை விட்டு வயலிலே விலகிப்போயிற்று, கழுதையை வழியில் திருப்ப பிலேயாம் அதை அடித்தான். கர்த்தருடைய தூதனானவர் இருபுறத்திலும் சுவர் வைத்திருந்த திராட்சத் தோட்டங்களின் பாதையிலே போய் நின்றார். கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, சுவர் ஓரமாய் ஒதுங்கி, பிலேயாமின் காலைச் சுவரோடே நெருக்கிற்று, திரும்பவும் அதை அடித்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அப்புறம் போய், வலதுபுறம் இடதுபுறம் விலக வழியில்லாத இடுக்கமான இடத்திலே நின்றார்."(எண்ணாகமம்22:23-26)

பிலேயாமின் பாதையைத் தடுக்க தேவதூதர் மூன்று முறை நகர்ந்தார், ஒவ்வொரு முறையும் கழுதை பக்கமாகத் திரும்பியது, இறுதியாக பாதையில் சரிந்தது. கடைசியாக, பட்டயத்துடன் நின்ற பழிவாங்கும் தூதனை பார்க்கும்படி யெகோவா தேவன் பிலேயாமின் கண்களைத் திறந்தார். "அப்பொழுது பிலேயாம் கர்த்தருடைய தூதனை நோக்கி - நான் பாவஞ்செய்தேன், வழியிலே நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன், இப்பொழுதும் உமது பார்வைக்கு இது தகாததாயிருக்குமானால், நான் திரும்பிப்போய்விடுகிறேன் என்றான்." (எண்ணாகமம்22:34)

பிலேயாம் தேவதூதருக்கு முன்பாக வணங்கி, சாஷ்டாங்கமாக விழுந்து தன்னுடைய பயபக்தியை காட்டினான். "நான் பாவம் செய்தேன்" என்று அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் அவருடைய பாவ அறிக்கை பலவீனமாக இருந்தது . (**4**) ஏனெனில், அவர் "உமது பார்வைக்கு இது தகாததாயிருக்குமானால், நான் திரும்பிப்போய்விடுகிறேன்." என்று கூறினார். பிலேயாமின் பயணத்தின் மீதான தனது அதிருப்தியை கடவுள் மீண்டும் தெளிவாகக் கூறாவிட்டால், பிலோயமின் தனது பயணத்தைத் தொடருவதாக எண்ணம் கொண்டிருந்தார். அவர் பாலாக்கின்

கோரிக்கைகளை நிறைவேற்றவும், அவர் செல்லக்கூடாது என்று கடவுள் அறிவித்த போதிலும், வெகுமதியைப் பெற அவர் உண்மையில் விரும்பினார் என்பதை அவரது வார்த்தைகள் நிரூபிக்கின்றன.

இந்த நிகழ்வுகள் அடுத்த இரண்டு அதிகாரங்களில் தொடர்கிறது, இஸ்ரயேலை சபிக்க பாலாக் பிலேயாமை மூன்று வித்தியாசமான இடங்களுக்கு அழைத்துச் சென்றார். ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், யெகோவா தேவன் பிலேயாமின் வாயில் ஆசீர்வாதங்களை அளித்தார். இதனால் கோபமடைந்த பாலாக் அந்த பகுதியை விட்டு வெளியேறினார்கள்.

இதை மற்ற வேத வசனங்களோடு, சேர்த்துப் பார்த்தால், பிலேயாமின் உண்மையான தீய குணம் வெளிப்பட்டது. பின்னர் அவர் இஸ்ரயேலரை இடறலடையச் செய்வதற்கான ஒரு மோசமான திட்டத்தை இராஜாவிடம் பரிந்துரைத்தார். இஸ்ரயேலர்கள் யெகோவா தேவனுக்கு கீழ்ப்படிந்தவரை அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், தோற்கடிக்க முடியாதவர்களாகவும் இருப்பார்கள் என்பதை அவர் நன்கு புரிந்துகொண்டார். எனவே, பாலாக் இஸ்ரயேலர்களை பொய்யான தேவனை வணங்கும்படி செய்து, அவர்களைக் கெடுக்கும்படி பிலேயாம் ஆலோசனைக் கூறினார். இதை நிறைவேற்ற, பாலாக் மோவாபின் இளம் பெண்களை இஸ்ரயேலின் ஆண்களிடம் சென்று அவர்களைக் கவர்ந்திழுக்கச் சொன்னார்.

"அப்பொழுது கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்தார் வழியிலே நின்று உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருக்கிற கர்த்தருடைய தூதனை அவன் கண்டு, தலைகுனிந்து முகங்குப்புற விழுந்து பணிந்தான்." (எண்ணாகமம்31:16)

"இஸ்ரயேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத்தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள், ஜனங்கள் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்துகொண்டார்கள். இப்படி இஸ்ரயேலர் பாகால்பேயோரைப் பற்றிக் கொண்டார்கள், அதனால் இஸ்ரயேலர்மேலும் கர்த்தருடைய கோபம் மூண்டது." (எண்ணாகமம்25:1-3)

இந்த பாவத்தில் விழுந்த ஒவ்வொரு மனிதரையும் தூக்கிலிடும்படி கடவுள் மோசேக்கும், "இஸ்ரயேலின் நியாயாதிபதிகளுக்கும்" கட்டளையிட்டார். கூடுதலாக, பாவம் செய்த ஜனங்களுக்கு யெகோவா தேவன் ஒரு வாதையை அனுப்பினார். சிமியோன் கோத்திரத்தைச் சேர்ந்த சிம்ரி என்ற ஒரு மனிதன், மோசே மற்றும் ஜனங்கள் பார்த்துகொண்டிருக்கையில், ஒரு மீதியானிய ஸ்திரீயை பாளையத்திற்குள் கொண்டு வரும் அளவுக்கு இந்த ஒழுக்கக்கேடு அப்பட்டமாக இருந்தது! ஆரோனின் பேரனான ஆசாரியனான பினேகாசின் விரைவான நடவடிக்கை, கடவுளின் தண்டனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. "அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டபோது, அவன் நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து, இஸ்ரயேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம் பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரயேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான், அப்பொழுது இஸ்ரயேல் புத்திரரில் உண்டான வாதை நின்றுபோயிற்று." (எண்ணாகமம்25:7-9,எசேக்கியேல்16:9)

## இந்த நிகழ்விலிருந்து பாடங்கள்

வழக்கத்திற்கு மாறான இந்த நிகழ்வு, இவ்வளவு விவரங்களுடன் வேதம் ஏன் கொடுக்கிறது என்று நாம் ஆச்சரியப்படலாம். கருத்தில் கொள்ள பல வாய்ப்புகள் உள்ளன-

(1) இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதற்காக யெகோவா தேவன் பிலேயாமின் வாயில் வைத்த வார்த்தைகள் அற்புதமான தீர்க்கதரிசனமானவை மற்றும் அவைகள் கடவுளின் யுகங்களின் தெய்வீக திட்டத்தின் நில பகுதிகளுடன் கையாளப்பட்டன. அவைகள் படிப்பதற்கு தகுதியானவைகள்.



(2)பேராசை மற்றும் காமத்திற்கு எதிரான புது சிருஷ்டிகளுக்கான ஒரு வல்லமையுள்ள படிப்பினைகளையும் எச்சரிக்கையையும் இந்த விவரிப்பு உள்ளடக்கியுள்ளது. "செம்மையான வழியைவிட்டுத் தப்பிநடந்து பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப்போனவர்கள், அவன் அநீதத்தின் கூலியை விரும்பி தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான், பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது. " (2பேதுரு2:15,16)

(3) சுவிசேஷ யுகத்தின் தொடக்கத்தில் கிறிஸ்தவ சபையின் அனுபவத்தின் ஒரு தீர்க்கதரிசன சித்திரமாக, பிலேயாமின் சம்பவத்தைக் காணலாம். சிமிர்னா காலத்தின் பயங்கரமான உபத்திரவத்தில் சாத்தான் சபைக்கு எதிராக கோபமடைந்தாலும், அவனால் அவர்களை முற்றிலுமாக நசுக்க முடியவில்லை. உண்மையில், சபை உபத்திரவத்தின் கீழ் வலுவடைந்தது.

எனவே, சாத்தான் அவனுடைய உத்திகளை மாற்றி, கிறிஸ்துவின் போதனையிலிருந்து சபை விலகி செல்ல அதனை மயக்க முயன்றான். இதை அவன் பெர்கமு சபையில் நிறைவேற்றினார். அதாவது பொய்யான போப் மார்க்கத்தின் பதிப்புகளை புறஜாதியான ரோமின் ஆசாரியத்துவத்துடன் இணைத்தான். அதிலிருந்து பிற தவறான கருத்துக்களுக்கு மத்தியில் திரித்துவக் கோட்பாடு வந்தது. "ஆகிலும், சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு, விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரயேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனைசெய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு" (வெளிப்படுத்துதல்2:14)

(4) கடைசியாக, பிலேயாமின் பாவம் சபைக்கு ஒரு எச்சரிப்பு. பிலோயம் இரண்டாம் மரணத்திற்கு செல்லக்கூடியவர்களின் ஒரு சித்திரம். அவர் விருப்பத்துடன் தவறு செய்தார், தனிப்பட்ட லாபத்திற்காக, மற்றவர்களை இடறச் செய்தார். "இவர்களுக்கு ஐயோ ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசன பாவத்திற்குள்ளாகி கெட்டுப்போனார்கள்." (யூதா 11)

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது, ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான், தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது." (மத்தேயு6:24)

கடைசியில் பிலேயாம் என்ன ஆனார் ? "கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் மீதியானியருடன் யுத்தம்பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்று போட்டார்கள். அவர்களைக் கொன்றுபோட்டதும் அன்றி, மீதியானியரின் ஐந்து இராஜாக்களாகிய ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா என்பவர்களையும் கொன்றுபோட்டார்கள். பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்றுபோட்டார்கள்." (எண்ணாகமம் 31:7,8)

### ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட வெகுமதி நிலுவையில் உள்ளது

# மோசேயின் மரணம்



**_Author to come_**

"கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல், ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரயேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்." (உபாகமம் 34:12)

மோசே 40 வருடங்களுக்கும் மேலாக யெகோவா தேவனை உண்மையுடன் சேவித்தார். தேசத்தில் அவரது தலைமைத்துவம் கிட்டத்தட்ட சாத்தியமற்ற பணியாக இருந்தது. ஆனாலும் அவர் ஜனங்களின் புகார்கள், முணுமுணுப்புகள் மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவற்றில் அவர் விடாமுயற்சியுடன் செயல்பட்டார். வெகு சிலரே இந்த பாரத்தை தாங்கியிருக்க முடியும். ஒரு நல்ல காரணத்திற்காகவே, பூமியின் மேல் எங்கும் "சாந்தகுணமுள்ள" ஒரு மனுஷனை யெகோவா தேவன் தேர்ந்தெடுத்தார் ! (எண்ணாகமம் 12:3) உண்மையில், மோசே ஒரு சிறந்த கதாபாத்திரம். இந்த உன்னத மனிதருக்கு அவரது வாழ்க்கையில் பல பங்கேற்புகள் இருந்தன. இந்த கதாபாத்திரங்களில், எகிப்தின் அதிபதி, {எகிப்தில் மோசேயின் இராணுவ வாழ்க்கையைப் பற்றி யாத்திராகமம் குறிப்பிடவில்லை. இருப்பினும் எகிப்தில் ஒரு தளபதியாக இருந்ததாக ஜோசபஸ் எழுதுகிறார்.} மீதியானில் மேய்ப்பர், தந்தை மற்றும்



கணவர், அத்துடன் நியாயாதிபதி மற்றும் தேசத்தின் தலைவர் ஆகியவை அடங்கும். தனிப்பட்ட அளவில் யெகோவா தேவனுடனான அவருடைய அற்புதமான உறவு, இயேசுவின் தோற்றம் வரை காணப்படவில்லை.

உபாகமம் 18:15ம் வசனத்தில், இயேசுவுடன் தெளிவான தீர்க்கதரிசன தொடர்பு காணப்படுகிறது. "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார், அவருக்குச் செவிகொடுப்பீர்களாக"

துரதிர்ஷ்டவசமாக, மேரிபாவின் தண்ணீர் தொடர்பாக கடவுளின் வழிகாட்டுதலுக்குக் கீழ்ப்படியாததில் மோசே ஒரு முக்கியமான தவறு செய்தார், மேலும் அவரும் ஆரோனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைய மாட்டார்கள் என்று கூறப்பட்டது. யோசுவாவின் தலைமையில் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, மோசேயின் மூலம் இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்ட இறுதி வார்த்தைகளின் விவரம் உபாகமம் புத்தகமாகும்.

உபாகமம் 1:1-4"சேயீர் மலைவழியாய் ஓரேபுக்குப் பதினொருநாள் பிரயாண தூரத்திலுள்ள காதேஸ்பர்னேயாவிலிருந்து, சூப்புக்கு எதிராகவும், பாரானுக்கும் தோப்பேலுக்கும் லாபானுக்கும் ஆஸரோத்துக்கும் திசாகாபுக்கும் நடுவாகவும் இருக்கிற யோர்தானுக்கு இக்கரையான வனாந்தரத்தின் சமனான வெளியிலே வந்தபோது, மோசே இஸ்ரயேலர் எல்லாரையும் நோக்கிச் சொன்ன வசனங்களாவன - எஸ்போனில் குடியிருந்த எமோரியரின் இராஜாவாகிய சீகோனையும், எத்ரேயின் அருகே அஸ்தரோத்தில் குடியிருந்த பாசானின் இராஜாவாகிய ஓக் என்பவனையும், மோசே முறிய அடித்தபின்பு, நாற்பதாம் வருஷம் பதினோராம் மாதம் முதல் தேதியிலே, மோசே இஸ்ரயேல் புத்திரருக்குச் சொல்லும்படி தனக்குக் கர்த்தர் விதித்த யாவையும் அவர்களுக்குச் சொன்னான்."

மொத்தத்தில், மோசே மரிப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு இஸ்ரயேலுக்கு நன்கு சொற்பொழிவுக் கொடுத்தார். உபாகமம் புத்தகத்தில் மோசேயின் செய்திகள் சுருக்கமாக இங்கு உள்ளது.

● முதல் சொற்பொழிவு, அவர்களின் வரலாற்றை மறுபரிசிலனைச் செய்கிறது. மேலும் இது அதிகாரம் 1:6 முதல் அதிகாரங்கள் 4:40 வரை தொடருகிறது.

● இரண்டாவது சொற்பொழிவு, பிரமாணங்களை ஒத்திகை பார்க்கிறது. மேலும் இது 5ம் அதிகாரம் முதல் 26ம் அதிகாரம் வரை தொடருகிறது.

●மூன்றாவது சொற்பொழிவில் மோசே மற்றும் மூப்பர்களின் கருத்துகள் 27 ம் அதிகாரம் மற்றும் 28 ம் அதிகாரங்களில் அடங்கும்.

● நான்காவது சொற்பொழிவில் உடன்படிக்கையின் அங்கீகாரம் காணப்படுகிறது, இது 29 மற்றும் 30 அதிகாரத்தில் அடங்கும்.

● அதிகாரம் 31:1ல் யோசுவா மோசேயின் வாரிசாக நியமிக்கப்பட்டார். ●32ம் அதிகாரம்

மோசேயின் கவிதை பாடல், "இஸ்ரயேலின் கன்மலை" கடைசியாக,● 33ம் அதிகாரத்தில் மோசே கோத்திரங்களை ஆசீர்வதித்தார்.


தேசத்திடம் மோசே பேசிய பேச்சில் உள்ள பெரும் உணர்ச்சியை நாம் கற்பனை செய்யலாம். யெகோவா தேவனை வணங்குவதில் இஸ்ரயேலரை கவனித்துக்கொள்வதற்கும் அறிவுரை வழங்குவதற்கும் அவருடைய இருதயம் அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. கூடியிருந்த கோத்திரத்தார் கண்ணீருடன் அவருடைய ஊக்கங்களையும் எச்சரிக்கைகளையும் பெற்றிருக்கலாம்.இஸ்ரயேலின் சவால்கள் மற்றும் தவறுகளின் வரலாற்றை மறுபரிசீலனை செய்வதன் மூலமும், மேலும் பல்வேறு அனுபவங்களின் மூலம் கடவுள் அவர்களை எவ்வளவு அற்புதமாக வழிநடத்தினார் என்பதையும் குறித்து மோசே பேச தொடங்கினார்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கும்படி யெகோவா தேவனிடம் அவர் மிக வருத்தத்துடனும், நேர்மையான அறிக்கையையும் அவர் சமர்ப்பித்தார். "அக்காலத்திலே நான் கர்த்தரை நோக்கி - கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும் உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர், வானத்திலும் பூமியிலும் உம்முடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும் ஒப்பாகச் செய்யத்தக்க தேவன் யார் ?நான் கடந்துபோய் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று வேண்டிக்கொண்டேன். கர்த்தரோ உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு, எனக்குச் செவிகொடாமல் என்னை நோக்கி - போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடே பேசவேண்டாம்." (உபாகமம் 3:23-26)

இந்த தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான பரிமாற்றத்தை இஸ்ரயேல் ஜனங்களுடன் பகிர்ந்துகொள்வது மோசேக்கு மிகுந்த அனுதாபத்தை தூண்டப்பட்டிருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் பல முறை தோல்வியடைந்தனர், ஆனால் மோசே ஒரு முறை மட்டுமே தோல்வியடைந்தார். "போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடே பேசவேண்டாம்" என்று யெகோவா தேவன் கடுமையான பதில் ஜனங்களிடையே எதிரொலித்திருக்க வேண்டும்!இந்த அற்புதமான மனிதன் அவர்களில் ஒருவராக இருந்தார்!

**நியாயப்பிரமாணம்**

இஸ்ரயேலருக்கு மோசேயின் உபதேசத்தின் இரண்டாம் பாகத்தில் அவர் நியாய்பபிரமாணத்தை வாசித்து மறுபரிசீலனை செய்தார். இது உபாகமம் புத்தகத்தின் பெரும்பகுதியை எடுத்துக்கொண்டது. பிரமாணத்தின் இந்த பாராயணத்தில் உள்ள ஒரு முத்து அல்லது ரத்தினம் ஒரு மத்தியஸ்தரின் பங்கை விளக்குகிறது. உபாகமம் 5:5-"கர்த்தருடைய வார்த்தையை உங்களுக்கு அறிவிக்கும்படி, அக்காலத்திலே நான் கர்த்தருக்கும் உங்களுக்கும் நடுவாக நின்றேன், நீங்கள் அக்கினிக்குப் பயந்து மலையில் ஏறாமல் இருந்தீர்கள், அப்பொழுது அவர் சொன்னது என்னவென்றால்" மோசேயின் இந்தக் கருத்து கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு மத்தியஸ்தரின் பங்கு மற்றும் செயல்பாட்டை அழகாக



வரையறுக்கிறது. மத்தியஸ்தர் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் நிற்கிறார். இது கடவுளுக்கும் அவருடன் உடன்படிக்கை செய்துள்ளவர்களுக்கும் இடையே ஒரு அளவிலான தொடர்பை அனுமதிக்கிறது.

மோசே, கடவுளுடைய இராஜ்யத்தில் நிஜமான கிறிஸ்துவுக்கும் சபைக்கும் நிழலாக இருக்கிறார். .மோசேயைப் போலவே, அவர்கள் கடவுளுக்கும் இஸ்ரயேலுக்கும் இடையிலான புதிய உடன்படிக்கைக்கு மத்தியஸ்தம் செய்வார்கள்.

மூன்றாவது உரையின் தொடக்கத்தை, இஸ்ரயேலரிடம் பேசுவதில் மோசே மற்றவர்களுடன் இணைந்திருப்பது குறிப்பிடப்படுகிறது. உபாகமம் 27:1-"பின்பு மோசே, இஸ்ரயேலின் மூப்பர் கூட இருக்கையில், ஜனங்களை நோக்கி - நான் இன்று உங்களுக்கு விதிக்கிற கட்டளைகளை யெல்லாம் கைக் கொள்ளுங்கள்." உபாகமம் 27:9-"பின்னும் மோசே, லேவியராகிய ஆசாரியர்களும் கூட இருக்கையில், இஸ்ரயேலர் எல்லாரையும் நோக்கி - இஸ்ரயேலே, கவனித்துக் கேள், இந்நாளிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு ஜனமானாய்." ஜனங்கள் தங்கள் தலைமையின் எல்லாவற்றிலும் ஒருமித்த நோக்கத்தைக் கண்டார்கள் என்பதை உறுதிப்படுத்த மோசே விரும்பினார். மோசேக்குப் பிறகு அதிகாரம் பெறப் போகிற யோசுவா மற்றும் எலெயாசருக்கு, மற்ற மூப்பர்கள் மற்றும் ஆசாரியர்கள் அனைவரின் ஒப்புதலும் இருந்தது. கடவுளுக்காக அவர்கள் கொண்ட கடமைகளோடு இந்த ஒப்பந்தம் அதே அதிகாரத்தில் மேலும் வலியுறுத்தப்படுகிறது. மோசே பல முறையான நடத்தை விதிகளை மீண்டும் கூறினார் மற்றும் ஜனங்கள் அனைவரும், "ஆமென்" என்று கூறியதால் இடைநிறுத்தினார், அதாவது நான் ஒப்புக்கொள்கிறேன் என்று அர்த்தம். (உபாகமம்27:11-26)

உபாகமம் 28ம் அதிகாரத்தில் ஜனங்களிடம் மேலும் குற்றம் சுமத்துவது தொடர்கிறது. இந்த முழு அதிகாரமும் அதன் விளைவுகளைப் பற்றியது. 1 முதல் 14 வசனங்கள், இஸ்ரயேலர்கள் யெகோவா தேவனின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடித்தால் அவரிடமிருந்து எதிர்பார்க்கும் அற்புதமான ஆசீர்வாதங்களை விவரிக்கிறது. கடவுளின் தயவைப் பெற்ற ஒரு தேசத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட விளைவுகள் இவை.

இதற்கு நேர்மாறாக, கடவுளுடைய சட்டத்திற்கு கீழ்ப்படியாததால் ஏற்படும் பயங்கரமான விளைவுகளை மோசே குறிப்பிடுகிறார். 15 முதல் 68 வசனங்கள், அவிசுவாசமுள்ள இஸ்ரயேலுக்கு நேரிடும்

பயங்கரமான விஷயங்களைப் பட்டியலிடுகின்றன. அவைகளை படிக்க பயங்கரமாக உள்ளது. இந்த விளைவுகள் இஸ்ரயேலரின் இருதயங்களில் பயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும், மேலும் யெகோவா தேவனின் கட்டளைகளிலிருந்து விலகிச் செல்வதற்கு எதிராக ஒரு திகிலூட்டும் எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்த சிலிர்க்க வைக்கும் வசனங்கள், துரதிர்ஷ்டவசமாக, தீர்க்கதரிசனமாக மாறியது. இன்று நாம் அவற்றைப் படிக்கும்போது, இஸ்ரயேலின் வரலாற்றில் அவர்கள் எவ்வாறு பட்டியலிடப்பட்ட விளைவுகளுக்குள் விழுந்தார்கள் என்பதை நாம் காணலாம்

மோசே தனது நான்காவது உரையில், கடவுள் அவர்களுக்கு வழங்கிய நியாயப்பிரமாண வார்த்தைகளையும் ஆவியையும் அவர்களின் இருதயங்களில் புதுப்பிக்கும் அழைப்புடன் ஜனங்களுக்கு தனது வார்த்தைகளை முடிக்கிறார். இந்த பகுதியில் பல முத்துக்கள் உள்ளது.

- உபாகமம் 29:5இல், மோசே 40 வருடங்களாக நடந்த அதிசயங்களை ஜனங்களுக்கு நினைப்பூட்டுகிறார். "கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்தரத்தில் நடத்தினேன், உங்கள் மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உங்கள் காலிலிருந்த பாதரட்சைகள் பழையதாய்ப் போகவும் இல்லை."

- உபாகமம் 29:14,15ல் ஜனங்கள் யெகோவா தேவனுடன் செய்த நியாயப்பிரமாண உடன்படிக்கையை அவர்கள் தங்கள் சந்ததியினருக்காகவும் செய்தார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று மோசே விரும்பினார். இது நிரந்தரமாக செய்யப்பட்ட உண்மையான தேசத்தின் உறுதிப்பாடு. "நான் உங்களோடேமாத்திரம் இந்த உடன்படிக்கையையும் இந்த ஆணையையும் உறுதியையும் பண்ணாமல், இன்று இங்கே நம்மோடேகூட நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சமூகத்தில் நிற்கிறவர்களோடேயும், இன்று இங்கு நம்மோடே இராதவர்களோடேயும்கூட அதைப்பண்ணுகிறேன்."

- தங்கள் கடவுளுடன் அவர்கள் கொண்டிருந்த விதிவிலக்கான நிலையை அவர்களுக்கு நினைப்பூட்டவும் மோசே விரும்பினார். இந்த விசேஷ உறவு, யெகோவா தேவனின் இரகசிய விஷயங்களை அவர்களுக்கு என்றென்றும் வெளிப்படுத்த அனுமதித்தது. உபாகமம் 29:29,"மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்."

## உங்கள் தேவனாகிய கர்த்தரிடம் (யெகோவா தேவன்) அன்புகூருங்கள்

கடைசியாக அவர் ஜனங்களுக்குச் சொல்வது என்னவென்றால், அவர்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிவதற்கு மட்டுமல்ல, அவரை நேசிக்கவும்

அவர்களைத் தூண்ட வேண்டும்!. "நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன். ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு, கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வாயாக, அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்றான்."(உபாகமம்30:19-20)

**யோசுவா நியமிக்கப்பட்டார்**

தேசத்திற்கான தனது நீண்ட ஆய்வுரையையும் ஊக்குவித்தலையும் முடித்த பிறகு, மோசே இஸ்ரயேலுக்கான அடுத்த காரியத்திற்கு திரும்பினார். 40 வருட தொடக்கத்தில் மோசேயின் தலைமைத்துவத்தினால் அனுபவித்த குழப்பத்தினால், யோசுவாவை ஜனங்களின் அடுத்த தலைவராக அங்கீகரிக்க வேண்டியது அவசியம் என்று அவர் உணர்ந்தார். மோசே தனிப்பட்ட அனுமதியுடன் தொடங்கினார். "பின்னும் மோசே போய் இஸ்ரயேலர் யாவரையும் நோக்கி - இன்று நான் நூற்றிருபது வயதுள்ளவன், இனி நான் போக்கும் வரத்துமாயிருக்கக்கூடாது, இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை என்று கர்த்தர் என்னோடே சொல்லியிருக்கிறார்." (உபாகமம்31:1,2)



இந்த வார்த்தைகளில் மோசேயின் சோர்வை நாம் உணரலாம். அவர் தனது வயதை ஜனங்களுக்கு நினைப்பூட்டும் அதே நேரத்தில், அவருடைய உடல் பலவீனப்படவில்லை என்பதை நாம் பின்னர் உறுதிப்படுத்தலாம். ஆனால் அவரது ஆண்டுகளில் உணர்ச்சிவசப்பட்ட எண்ணிக்கை குறிப்பிடத்தக்கது.

அதேபோல, "இனி நான் போக்கும் வரத்துமாயிருக்கக்கூடாது,"என்று அவர் கூறும்போது அவர் தனது சரீர வலிமையைப் பற்றி பேசவில்லை, அதற்கு பதிலாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் செல்லக்கூடாது என்ற யெகோவா தேவனின் ஆணையைப் பற்றி அவர் பேசினார்.

பின்னர் அவர் யோசுவாவை அழைத்து, முழு தேசத்தின் சாட்சியாக அவருக்கு தனது பணியைக் கொடுத்தார். இது யோசுவாவிற்கு பொதுவான மற்றும் முறையான தெய்வீக அதிகாரத்தின் மாற்றமாகும். "பின்பு மோசே யோசுவாவை அழைத்து , இஸ்ரயேலர் எல்லாரும் பார்த்திருக்க, அவனை நோக்கி -

பலங்கொண்டு திடமனதாயிரு, கர்த்தர் இவர்களுக்குக் கொடுப்பேன் என்று இவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்துக்கு நீ இந்த ஜனத்தை அழைத்துக்கொண்டுபோய், அதை இவர்கள் சுதந்தரிக்கும்படி செய்வாய். கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார், அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை, நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்."(உபாகமம்31:7-8)

மோசே தேசத்திற்கு மேலும் இரண்டு செய்திகளை வழங்கினார். "மோசேயின் பாடல்" என்று அறியப்பட்டதை அவர் பேசினார். (உபாகமம்32:1-43) "பாடல்" என்று அழைக்கப்படுவதால் அவர் இந்த வார்த்தைகளைப் பாடினார் என்று நாம் ஆச்சரியப்படலாம். (உபாகமம்31:30) பின்னர் மோசேயின் இறுதிஆசீர்வாதம் வருகிறது, தேசத்தின் ஒவ்வொரு கோத்திரத்தையும் ஒவ்வொன்றாக ஒரு தீர்க்கதரிசன செய்தியுடன் பட்டியலிடுகிறார்.

## மோசேயின் புறப்படுதல்

இது மோசேயின் வாழ்க்கையின் இறுதிக் காட்சிக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. "பின்பு மோசே மோவாபின் சமனான வெளிகளிலிருந்து எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினான், அப்பொழுது கர்த்தர் அவனுக்கு, தாண் மட்டுமுள்ள கீலேயாத் தேசம் .....அனைத்தையும் காண்பித்தார். " (உபாகமம்34:1)

மோசேக்கு இது ஒரு கசப்பான தருணமாக இருந்திருக்க வேண்டும். அலைந்து திரிந்த 40வது வருடத்தின் முடிவில், இஸ்ரயேலர்கள் அனைவருக்கும் நம்பிக்கையாக இருந்த இந்த அற்புதமான வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அவர் தன் கண்களால் மட்டுமே பார்க்க முடிந்தது. அவர்கள் அனைவரும் உள்ளே பிரவேசித்தனர்! ஆனால் அவர்கள் மோசேயுடன் போகவில்லை. நிச்சயமாக, மோசேயின் இருதயம் நிறைந்த உணர்ச்சிகள், சக்திவாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும். பின்னர் அவர் மரித்தார். ஆச்சரியப்படும் விதமாக, அவர் தனது முந்தைய வாழ்க்கையைப் போலவே அப்போதும் வலுவாகவே இருந்தார்!. "மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந்தான், அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை." (உபாகமம் 34:7) 40 வருடங்கள் முழுவதும் யெகோவா தேவன் அவருடைய சரீர வலிமையையும் மனத் தெளிவையும் பாதுகாத்தார். அவர் சுமக்கும்படி கேட்கப்பட்ட பொறுப்புகளின் அதிக பாரமானதை அவர் சுமந்தார் என்பதற்கு இது மிகவும் பொருத்தமானது.

மோசே அடக்கம் செய்யப்பட்ட இடம் மோவாப் தேசத்தில் அறியப்படாத இடத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. மோசேயின் சரீரத்தைப் பற்றி ஒரு ஆர்வமான மற்றும் சுவாரஸ்யமான ஒருசதி உள்ளது. "பிரதான தூதனாகிய மிகாயேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல் கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னார்." (யூதா 9)

மறைமுகமாக, மோசேயின் சரீரத்தை இஸ்ரயேலர்கள் மம்மியாக மாற்றுவதைத் தடுக்க ஒரு மறைவான இடத்தில் கடவுள் அவரை புதைத்தார். அவர்கள் எகிப்தில் இருந்து வந்ததினால் இதை செய்வதைப் பற்றி அறிந்திருப்பார்கள். மோசேயின் சரீரம் விக்கிரக வழிபாட்டிற்கு ஒரு தூண்டுதலாக இருந்திருக்கும். யூதாவில் உள்ள வசனம் இதைத் தெரிவிக்கிறது. சாத்தான் ஏன் மோசேயின் சரீரத்தை விரும்பினான் ? அது இஸ்ரயேல் ஜனங்களை ஏமாற்றுவதற்காகவே இருக்கவேண்டும். இயேசுவையும், சபையையும் அடிக்கடி மோசே அடையாளப்படுத்துவதை கருத்தில் கொள்ளும் போது, மறைக்கப்பட்ட பூமிக்குரிய கல்லறையும் அதற்கு பொருத்தமாக காணப்படுகிறது. அவர்களுடைய நம்பிக்கையும் சுதந்தரமும் பரலோகத்திற்குரியவை, பூமிக்குரியவை அல்ல. இதன் விளைவாக, மோசேயின் பூமிக்குரிய கல்லறை இங்கு காணப்படாதது, ஒரு தீர்க்கதரிசனமான நிழலாக உள்ளது. (See Question Book, Q806, for a more detailed explanation.) ஏனெனில் இவர்களின் நிஜமான இருப்பிடம் பரலோகத்தில் உள்ளது.

மோசே பிரவேசிக்க முடியாத தேசத்தை கடவுள் ஏன் அவருக்கு காட்டினார் என்று நாம் யோசிக்கலாம். ஒருநிலைப்பாட்டில், அது கொடூரமானதாகவே பார்க்கப்படலாம். ஆனால்,மோசே மரிப்பதற்கு முன், நேபோ மலையின் உச்சியிலிருந்து வாக்களிக்கப்பட்ட தேசத்தைப் பார்க்க விரும்புகிறாயா என்று கடவுள் மோசேயிடம் கேட்டிருந்தால், அவர் "ஆம்" என்று கூறியிருப்பார். மரணத்தில், காலம் கடக்கும் உணர்வு ஒருவருக்கும் இல்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, மோசேயின் நிலைப்பாட்டில், அவரது வாழ்க்கை முடிந்து அவர் கண்களை மூடிக்கொண்ட தருணத்தின், அடுத்த கணம் அவர் முற்பிதாக்களின் உயிர்த்தெழுதலின் ஒரு பகுதியாக இஸ்ரயேலுக்குத் திரும்புவார். அந்நேரத்தில் அவருடைய இருதயம் மகிழ்ச்சியினால் நிச்சயம் நிறைந்திருக்கும் !

"இஸ்ரயேல் புத்திரர் மோவாபின் சமனான வெளிகளில் மோசேக்காக முப்பது நாள் அழுது கொண்டிருந்தார்கள், மோசேக்காக அழுது துக்கங்கொண்டாடின நாட்கள் முடிந்தது." (உபாகமம் 34:8) மோசேயின் வாழ்க்கை தெய்வீக உத்வேகத்தின் கீழ் எழுதப்பட்ட அழகான மற்றும் எழுச்சியூட்டும் கல்வெட்டில் முடிவடைகிறது - "மோசே எகிப்து தேசத்திலே பார்வோனுக்கும், அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும், அவனுடைய தேசம் அனைத்திற்கும் செய்யும்படி கர்த்தர் அவனை அனுப்பிச் செய்வித்த சகல அடையாளங்களையும் அற்புதங்களையும், அவன் இஸ்ரயேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்ச் செய்த சகல வல்லமையான கிரியைகளையும், மகா பயங்கரமான செய்கைகளையும் பார்த்தால், கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப் போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரயேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்." (உபாகமம்34:10-12)

## யோசுவா நியமிக்கப்பட்டார்

# நாற்பதாம் வருடத்தின் முடிவு



***Author to come***

"மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான், இஸ்ரயேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்." (உபாகமம்34:9)

மோசே மரித்தபோது ஜனங்கள் துக்கம் அனுசரித்தனர். ஆனால், வாக்களிக்கப்பட்ட தேசத்துக்குள் நுழைவதற்கு இஸ்ரயேலர் நீண்டகாலமாக ஏங்கிக்கொண்டிருந்ததை நிறைவேற்றுவதற்கான நேரம் வந்தது. புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் யோசுவா பணியை ஏற்றார். யோசுவா புத்தகத்தில், அதிகாரம் ஒன்றில், யெகோவா தேவன் யோசுவாவிடம் பேசி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் செல்லும்படி கட்டளையிட்டார். கடவுள் தனது பிரசன்னம் இருந்ததற்கு உறுதியளித்து, இராணுவ முயற்சிகளுக்கு உதவியளித்தார். ஆனால், இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணத்திற்கு உண்மையாகவும் கீழ்ப்படிதலுடனும் இருக்குமாறு யோசுவாவுக்கு அவர் நினைப்பூட்டினார். கடவுளிடமிருந்து ஒரு உத்தரவாதம் பெறுவது ஒரு வல்லமையுள்ள விஷயம்! "நான் உனக்குக் கட்டளையிடவில்லையா ? பலங்கொண்டு திடமனதாயிரு, திகையாதே கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்." (யோசுவா1:9)

யோர்தானைக் கடப்பதற்கு ஆயத்தமாக, யோசுவா ஜனங்களின் மூப்பர்களை கூட்டினார். இன்னும் மூன்று நாட்களில் தேசத்திற்குள் செல்வதாக அவர்களிடம் கூறினார். இந்தக் கட்டத்தில் யோசுவா ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தினரிடம் பேசினார். தேசத்தின் மற்ற பகுதிகளுக்கு அவர்களின் பொறுப்பைப் பற்றி மோசே சொன்னத்தை அவர் திரும்ப அவர்களிடம் சொன்னார். இந்த கோத்திரத்தார் இப்போது தங்கள் சுதந்திரத்தைப் பெற்றிருந்தாலும், மற்ற கோத்திரங்கள் தங்கள் நிலத்தின் பகுதியை கைப்பற்றுவதற்கு உதவ வேண்டியிருந்தது. 2½ கோத்திரத்தார் மோசேக்கு வாக்குறுதியளித்ததைச் செய்வதாக தங்கள் வாக்கை மீண்டும் நிறைவேற்றினர்.

### எரிகோவை வேவு பார்த்தல்

யோர்தானைக் கடந்த பிறகு அவர்கள் கைப்பற்ற வேண்டிய முதல் நகரம் எரிகோவாக இருந்தது. ஒரு விவேகமான தளபதியாக, அவர்களின் பாதுகாப்பை மதிப்பிடுவதற்கு யோசுவா இரண்டு வேவுக்காரரை அந்த நகரத்திற்கு அனுப்பினார். இருவரும் "ரகசியமாக" வெளியே அனுப்பப்பட்டதாக சொல்லப்படுகிறது. வேவுக்காரர்களின் வரையறையின்படி, எதிரியின் தேசத்தில் ரகசிய ஊடுருவல் செய்பவர்கள். ஆனால் இங்கு மற்ற இஸ்ரயேலர்களுக்கும் தெரியாமல் அனுப்பப்பட்டவர்கள் என்ற அர்த்தத்தில், "ரகசியமாக" அனுப்பப்



பட்டதாகத் தெரிகிறது. ராகாப் என்ற விபச்சாரியின் வீட்டிற்கு அந்த இரண்டு வேவுக்காரர்கள் எப்படி வந்தார்கள் என்பதை நிகழ்வுகள் விவரிக்கிறது. எரிகோவின் இராஜா அவர்கள் வருவதைக் கேள்விப்பட்டு உடனடியாக ஒரு தேடலைத் தொடங்கினார். இருப்பினும், ராகாப் அவர்களை மறைத்து, மூடி வைத்தாள்.

சுவாரஸ்யமான காரியம் என்னவெனில், இந்த கானானியர்களுக்கு அதுவரை இஸ்ரயேல் பெற்ற அனுபவத்தைப் பற்றிய முழுமையான அறிவு இருந்தது. இதை குறித்து தனக்கும் மற்றவர்களுக்கும் தெரியும் என்று ராகாப் ஒப்புக்கொண்டதை வாசிக்கலாம் - "கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், உங்களைப்பற்றி எங்களுக்குத்திகில் பிடித்திருக்கிற தென்றும், உங்களைக் குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம்பண்ணின எமோரியரின் இரண்டு இராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்துபோயிற்று, உங்களாலே எல்லாருடையதைரியமும் அற்றுப்போயிற்று. உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர். "(யோசுவா 2:9-11)

கானானியர்கள் பயத்தில் மூழ்கியதில் ஆச்சரியமில்லை. அவர்கள் முற்றிலும் புரிந்து கொள்ளாத ஏதோவொன்றால் அச்சுறுத்தப்பட்டதாக உணர்ந்தனர். இது தவிர்க்க முடியாத பயமாக இருந்தது. ராகாபுடன் தொடர்புடைய பல பாடங்கள் உள்ளது. இங்கு, வேவுக்காரர்கள் மூன்று நாட்கள் மலைகளில் தங்கி, அதற்கு பின் அவர்கள் யோசுவாவிடம் சென்று அவருக்கு ஒரு நல்ல செய்தியை வழங்கினார்கள். "கர்த்தர் தேசத்தையெல்லாம் நம்முடைய கையில்



ஒப்புக்கொடுத்தார், தேசத்தின் குடிகளெல்லாம் நமக்கு முன்பாகச் சோர்ந்து போனார்கள் என்று அவனோடே சொன்னார்கள்." (யோசுவா 2:24)

### யோர்தான் நதியைக் கடப்பது

யோசுவா மூன்றாம் அதிகாரத்தில், வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு யோர்தான் நதியை கடைசியாகக் கடக்கவேண்டியதைக் குறித்து வாசிக்கிறோம். உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்த ஆசாரியர்களின் கால்கள் யோர்தான் நதியை தொட்டபோது நீர் ஓட்டம் குவியலாக நின்றது அதிசயம். இந்த அதிசயம் அவர்களை இஸ்ரயேல் தேசத்திற்குள் கடக்க அனுமதித்தது. செங்கடலின் ஜலம் பிரிந்தபோது, பார்வோனிடமிருந்தும் அவனது சேனைகளிடமிருந்தும் தப்பிக்க தேவன் தந்த அற்புதமான விடுதலையை இது நமக்கு நினைப்பூட்டுகிறது. யோர்தான் நதியைக் கடக்கும்போது, இஸ்ரயேலர்கள் அனைவரும் கடந்து செல்லும் வரை, பேழையுடன் ஆசாரியர்கள் நதியின் நடுவே நின்றார்கள். உடன்படிக்கைப் பெட்டி திரளான இஸ்ரயேலர்களுக்கு முன்னால் 2,000 முழம் இருந்தது. (யோசுவா 3:4) பெட்டியுடன் நின்ற ஆசாரியர்கள் மற்றும் ஜனங்களுக்கு இடையே உள்ள இந்த தூரம், சுவிசேஷயுகத்தின் அளவை குறித்த சில தீர்க்கதரிசனமான பாடங்களை பரிந்துரைக்கலாம்.

யோர்தான் ஆற்றில் இருந்து அனைவரும் வெளியே வந்த தேதி முதலாம் மாதம் 10 தேதியாகும். (யோசுவா4:19) இஸ்ரயேல் ஜனங்கள் கில்காலில் பாளயமிறங்கினார்கள். அங்கு, வனாந்திரத்தில் பிறந்த ஆண்பிள்ளைகள் அனைவரும் விருத்தசேதனம் செய்யப்படவேண்டும் என்று யெகோவா தேவன் கட்டளையிட்டார். வனாந்தர பிராயாணத்தின் போது, யாருக்கும் விருத்தசேதனம் பண்ணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அது இங்கு சரி செய்யப்பட்டது.

பஸ்கா ஆட்டுக்குட்டிகள் தேர்ந்தெடுக்கப் பட வேண்டிய நீசான் 10 ஆம் தேதி, இங்கு இஸ்ரயேலர் எப்போது இயேசுவை அடையாளம் கண்டு கொள்வார்கள் என்பதை குறிப்பிடுகிறது. இடைப்பட்ட நாட்கள் விருத்தசேதனம் செய்யாத அனைத்து ஆண்களும் விருத்தசேதனம் செய்யப்பட்டார்கள். ஏனெனில் இஸ்ரயேல் மேசியாவை அங்கீகரித்த பின் இருதயத்தில் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்பதை இது காட்டுகிறது. அதன்பிறகு, 14 வது நாளில் அவர்கள் முழுமையாக பஸ்காவை அனுசரித்தார்கள். அதுபோல இஸ்ரயேலர் விசுவாசத்தால் முழுமையாக மேசியாவை (ஈடுபலியை)ஏற்றுக்கொள்வார்கள்.

**புதிய உணவு**

40 வருடங்கள் வனாந்திர பயணத்தின் முடிவில் கடைசி அறிக்கை யோசுவா புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. "இஸ்ரயேல் புத்திரர் கில்காலில் பாளயமிறங்கியிருந்து, மாதத்தின் பதினாலாம் தேதி அந்திநேரத்திலே எரிகோவின் சமனான வெளிகளிலே பஸ்காவை ஆசரித்தார்கள். பஸ்காவின் மறுநாளாகிய அன்றையதினம் அவர் தேசத்தினுடைய தானியத்தாலாகிய புளிப்பில்லாத அப்பங்களையும் சுட்ட கதிர்களையும் புசித்தார்கள். அவர்கள் தேசத்தின் தானியத்திலே புசித்த மறுநாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது. அதுமுதல் இஸ்ரயேல் புத்திரருக்கு மன்னா இல்லாமற்போய், அவர்கள் கானான் தேசத்துப் பலனை அந்த வருஷத்தில் தானே புசித்தார்கள். " (யோசுவா5:10-12)

தேசம் எகிப்தை விட்டு வெளியேறிய 40 வருடங்களுக்கு பிறகு, நீசான் 15ஆம் தேதி, அற்புதமான மன்னா முடிவுக்கு வந்தது. 40 வருடங்கள் (அலைந்து திரிந்தது)அவர்களின் அவிசுவாசத்திற்கான தண்டனையாக இருந்தது. ஆனால் அவர்கள் தேசத்தின் கனியை உண்ணத் தொடங்கிய சரியான நாளில் தண்டனை முடிந்தது. அவர்கள் தீர்க்கதரிசன அட்டவணையில் சரியாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் சரியான நேரத்தில் நுழைந்தார்கள்!. யோசுவா இராஜ்யத்தின் போது இருக்கும் இயேசுவை சித்தரிக்கிறார். அந்நேரத்தில் அவர் மகிமைப்படுத்தப்பட்ட சபையின் தலைவராகவும், அனைத்து மனுக்குலத்திற்கு மத்தியஸ்தராகவும் இருப்பார். எபிரெய மொழியில் யோசுவா என்பது கிரேக்க மொழியில் இயேசுவின் அதே பெயர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று பலர் இயேசுவை யெசுவா என்று குறிப்பிடுகின்றனர், இது யோசுவாவின் ஆங்கிலப் பதிப்பாகும். இரண்டுக்கும், "யெகோவாவே இரட்சிப்பு" என்று பொருள். எனவே, இரண்டுக்கும் இடையே கட்டாயமான தொடர்பு உள்ளது.

யோசுவா இப்போது வாக்குத்தத்தின் தேசத்தைக் கைபற்றுவதற்கு ஜனங்களை வழிநடத்தியது போல, யெகோவா தேவனுடன் புதுப்பிக்கப்பட்ட உறவைப் பெறுவதில் இயேசு மனுக்குலத்தை வழிநடத்துவார்.

## ரூபன், காத் மற்றும் மனாசேயின் ஒரு பகுதி

# யோர்தானுக்கு அப்பால் குடியேறுதல்



*Author to come*

" உம்முடைய கண்களில் எங்களுக்குத் தயை கிடைத்ததானால், எங்களை யோர்தான் நதிக்கு அப்புறம் கடந்துபோகப் பண்ணீராக, இந்த நாட்டை உமது அடியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்க வேண்டும் என்றார்கள்." (எண்ணாகமம் 325)

40 வருடங்கள் ஒரு தேசமாக அலைந்து திரிந்த இஸ்ரயேலர்கள் அனைவரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைவதற்கான எதிர்பார்ப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி உற்சாகமாக இருந்தனர். பயணத்தின் தொடக்கத்தில் 20 வயதுக்கும் குறைவான இந்த புதிய தலைமுறை, யெகோவாவின் நியாயத்தீர்ப்பையும் அதற்கான காரணத்தையும் அறிந்திருந்தது. சமீபகாலமாக எதிரிகள் மீது பெற்ற வெற்றிகள், தேசத்திற்குள் சென்று கானானியர்களை தோற்கடிப்பதற்கான நம்பிக்கையை அவர்களுக்கு வலுப்படுத்தியது.

இந்த நிலையில் இரண்டு கோத்திரங்கள் மோசேயிடன் ஒரு முன்மொழிவைக் கொண்டு வந்தனர். "ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் ஆடுமாடுகள் மிகவும் திரளாயிருந்தது, அவர்கள் யாசேர் தேசத்தையும் கீலேயாத் தேசத்தையும் பார்த்தபோது, அது ஆடுமாடுகளுக்குத் தகுந்த இடமென்று கண்டார்கள். ஆகையால் ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் வந்து, மோசேயையும் ஆசாரியனாகிய எலெயாசாரையும் சபையின் பிரபுக்களையும் நோக்கி - கர்த்தர் இஸ்ரயேல் சபைக்கு முன்பாக முறிய அடித்த அதரோத், தீபோன், யாசேர், நிம்ரா, எஸ்போன், எலெயாலே, சேபாம், நேபோ, பெயோன் என்னும் பட்டணங்களைச் சேர்ந்த நாடானது ஆடுமாடுகளுக்குத் தகுந்த இடம். உமது அடியாருக்கு ஆடுமாடுகள் உண்டு. உம்முடைய கண்களில் எங்களுக்குத் தயை கிடைத்ததானால், எங்களை யோர்தான் நதிக்கு அப்புறம் கடந்துபோகப் பண்ணீராக, இந்த நாட்டை உமது அடியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்க வேண்டும் என்றார்கள்." (எண்ணாகமம் 321-5)

யோர்தான் நதியின் கிழக்குப் பக்கத்திலுள்ள தேசத்தை பார்த்த ரூபன் மற்றும் காத் கோத்திரத்தார் அதை விரும்பினார்கள். இது எமோரியர்கள், மோவாபியர்கள் மற்றும் மீதியானியர்களிடமிருந்து போரில் வென்றது. மேலும் கால்நடைகளின் மேய்ச்சலுக்கு ஏற்றதாகத் தோன்றியது. மோசே மற்றும் எலியாசர் மற்றும் பிற கோத்திரத் தலைவர்கள் அங்கீகரித்தார்களா? இந்த இரண்டு கோத்திரமும் வாக்குத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் தங்களுடைய சுதந்தரத்தை அங்கேயே கொடுக்கும்படி கேட்டுக்கொண்டனர். இந்த வேண்டுகோளின் பேரில், மோசே கோபமடைந்தார்.

"அப்பொழுது மோசே காத் புத்திரரையும், ரூபன் புத்திரரையும் நோக்கி - உங்கள் சகோதரர் யுத்தத்திற்குப் போகையில், நீங்கள் இங்கே இருப்பீர்களோ ? கர்த்தர் இஸ்ரயேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்திற்கு அவர்கள் போகாதபடிக்கு, நீங்கள் அவர்கள் இருதயத்தைத் திடனற்றுப்போகப்பண்ணுகிறதென்ன ? இப்பொழுதும் இதோ இஸ்ரயேலர் மேலிருக்கும் கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்தை இன்னும் அதிகரிக்கப்பண்ணும்படி, நீங்கள் உங்கள் பிதாக்களின் ஸ்தானத்திலே பாவமுள்ள பெருங்கூட்டமாய் எழும்பியிருக்கிறீர்கள். நீங்கள் அவரைவிட்டுப் பின்வாங்கினால், அவர் இன்னும் அவர்களை வனாந்தரத்தில் இருக்கப்பண்ணுவார், இப்படி நீங்கள் இந்த ஜனங்களையெல்லாம் அழியப்பண்ணுவீர்கள் என்றான்." (எண்ணாகமம் 326இ7இ14இ15)

யோர்தானை கடந்து கானானியர்களுடன் போரிட அந்த இரண்டு கோத்திரத்தாரும் வருவதில்லை என்று மோசே நம்பினார். மேலும்,

வரவிருக்கும் போர்களில் இது மற்ற பத்து கோத்திரத்தாரை தங்களைத் தற்காத்துக் கொள்ள விட்டுவிடும். இக்காரியத்தை மோசே அதை முந்தைய தலைமுறையினரின் அதே பயம் மற்றும் விசுவாசமின்மைக்கு ஒப்பிட்டார்.

ஒரு வேளை மோசே தனது மதிப்பீட்டில் சரியாக இருந்திருக்கலாம் மற்றும் அவரது கோபம் நியாயமானதாக இருந்தாலும் அவர்கள் எழுந்து நின்று மோசேக்கு நேரடியாக பதிலளித்தனர். "அப்பொழுது அவர்கள் அவன் சமீபத்தில் வந்து - எங்கள் ஆடுமாடுகளுக்காக தொழுவங்களையும், எங்கள் பிள்ளைகளுக்காகப் பட்டணங்களையும் இங்கே கட்டுவோம். நாங்களோ இஸ்ரயேல் புத்திரரை அவர்கள் ஸ்தானத்திலே கொண்டுபோய்ச் சேர்க்குமளவும், யுத்தசன்னத்தராய்த் தீவிரத்தோடே அவர்களுக்கு முன்பாக நடப்போம், எங்கள் பிள்ளைகள் இத்தேசத்துக் குடிகளினிமித்தம் அரணான பட்டணங்களிலே குடியிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். இஸ்ரயேல் புத்திரர் யாவரும் தங்கள் தங்கள் சுதந்தரத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் வரைக்கும், நாங்கள் எங்கள் வீடுகளுக்குத் திரும்புவதில்லை." (எண்ணாகமம் 32:16-18) இவர்களின் வார்த்தை மோசேயை சமாதானப்படுத்தியது, இருப்பினும் அவர் அவர்களை எச்சரித்தார். "நீங்கள் இப்படிச் செய்யாமற்போனால், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களாயிருப்பீர்கள், உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும் என்று நிச்சயமாக அறியுங்கள்."(எண்ணாகமம் 32:23)

பின்னர் அவர் எலியாசரையும் யோசுவாவையும் அவ்வாறு செய்ய இயக்கினார். இந்த ஏற்பாட்டைக் கோரியவர்கள் ரூபன் மற்றும் காத் மட்டுமே என்றாலும் மோசே மற்றொரு கோத்திரத்தை இதற்குள் சேர்த்ததற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை.

"அப்பொழுது மோசே காத் புத்திரருக்கும், ரூபன் புத்திரருக்கும், யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருக்கும், எமோரியருடைய இராஜாவாகிய சீகோனின் இராஜ்யத்தையும், பாசானுடைய இராஜாவாகிய ஓகின் இராஜ்யத்தையும், அவைகளைச் சேர்ந்த தேசங்களையும் அவைகளின் எல்லையைச் சுற்றிலுமுள்ள பட்டணங்களையும் கொடுத்தான்."(எண்ணாகமம் 32:33)

பின்னர் மோசே இஸ்ரயேலின் எதிர்கால தேசத்தின் எல்லைகளை விவரித்தபோது, அவர் 2 1/2 கோத்திரத்தை மீண்டும் குறிப்பிட்டார். "அப்பொழுது மோசே இஸ்ரயேல் புத்திரரை நோக்கி - ஒன்பதரைக் கோத்திரத்தாருக்குக் கொடுக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டதும், நீங்கள் சீட்டுப்போட்டுச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டியதுமான தேசம் இதுவே. ரூபன் புத்திரர் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படியும், தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டதும அல்லாமல், மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரும் தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இந்த இரண்டரைக் கோத்திரத்தாரும் சூரியோதய திசையாகிய கிழக்கே எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இப்புறத்திலே தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்றான்."(எண்ணாகமம் 34:13/15)அவர்கள் "தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக் கொண்டார்கள்" என்று மோசே தெளிவாகக் கூறுகிறார். இது ஒரு தீர்க்கதரிசன மற்றும் அடையாளமான பார்வையில் சுவாரஸ்யமானது. இந்த கோத்திரத்தார் 40 வருடங்களாக அலைந்து திரிந்து முடிவதற்குள், மற்ற சகோதரர்களுக்கு முன்பாக, தங்கள் நிலச் சுதந்தரத்தைப் பெற்றனர். கடவுளின் யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டத்தில், பல்வேறு வகுப்பினருக்கும், தனி நபர்களுக்கும் உலகத்தை முன்னிட்டு ஆசீர்வாதங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அவர் கொண்டுள்ளார். சில வெகுமதிகள் ஆவிக்குரியதும் மற்ற பிற பூமிக்குரியவைகளுமாக இருந்தது.

தீர்க்கதரிசன மற்றும் நடைமுறைப் பயன்பாடுகள் பண்டைய இஸ்ரயேலின் வரைபடத்தில், 9 1/2 கோத்திரத்தார் யோர்தானின் மேற்குப் பக்கத்திலும், இ 2 1/2 கோத்திரத்தார் கிழக்குப் பக்கத்திலும் இருப்பதைக் காணலாம். (லேவி கோத்திரம் நிலச் சுதந்தரத்தைப் பெறவில்லை) யோர்தான் நதியை பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய

ஆசீர்வாதங்களுக்கு இடையிலான பிரிவின் ஒரு சித்திரமாக நாம் கருதினால், சில அற்புதமான பாடங்களைக் கண்டுபிடிக்கலாம்.

ஆற்றின் மேற்குப் பகுதியில் தங்கள் நிலத்தைப் பெற்ற அந்த கோத்திரத்தார், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் மனுக்குலத்தின் உலகத்தை அடையாளப்படுத்துகிறார்கள். இவர்கள் பரிசுத்தமான பெரும் பாதையில் பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். (ஏசாயா35:8) கிழக்குப் பகுதியில் உள்ள21/2 கோத்திரத்தார், மூன்று ஆவிக்குரிய வகுப்பாரை சுட்டிக்காட்டுகிறார்கள். இவர்கள் உலகத்தின் மனுக்குலத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும் முன்னதாகவே, தங்கள் சுதந்திரத்தைப் பெறுவார்கள். கடவுள் மனுக்குலத்திற்கான வேலையை தொடங்குவதற்கு முன் அவர்கள் தெய்வீக சுபாவத்தை பெறுவார்கள். காத் கோத்திரம் திரள் கூட்டத்தாரை அடையாளப்படுத்துகிறார்கள். இவர்கள் மனுக்குலம் சுதந்திரத்தைப் பெறும் முன் திவ்விய சுபாவத்திற்கு சற்று குறைவான ஆவிக்குரிய சுதந்திரத்தைப் பெறுவார்கள். மீதி பாதி மனாசே கோத்திரம் உள்ளது. மனுக்குலம் தங்களுடைய சுதந்திரத்தைப் பெறுவதற்கு முன் இன்னும் ஒரு வகுப்பார் மட்டும் தங்களுடைய சுதந்திரத்தை பெறுவார்கள். இவர்கள் முற்பிதாக்களே.

இயேசுவின் மரணத்திற்கு முன் வாழ்ந்த விசுவாசிகளின் இந்த வகுப்பாரைப் பற்றி நாம் இவ்வாறு வாசிக்கிறோம். "இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்."(எபிரெயர் 11:13) அவர்களின் வெகுமதி உலகத்தை விட முந்தையாதாகவும், சிறந்ததாகவும் இருக்கும். இந்த அம்சம் எபிரெயர் 11:35இல் விவரிக்கப்பட்டுள்ளது, "மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு...." அவர்களின் உயிர்த்தெழுதல் சிறப்பாக இருக்கும், ஏனெனில், அவர்கள் பரிபூரண மனிதர்களாக உயிர்த்தெழுப்பப்படுவார்கள். இவர்கள் சபையின் நிறைவுக்காக காத்திருக்கவேண்டும். (இந்த உலகமோ முழுமையான பரிபூரணத்தை அடைய முயற்சிக்க வேண்டும். 9-1.2 கோத்திரத்தார் தங்கள் நிலத்தை சுதந்திரமாக பெறுவதற்கு, போராட வேண்டிய பல போர்கள் இதை காட்டுகிறது.) எபிரெயர் 11:40இல் அப்போஸ்தலனாகிய பவுல் முற்பிதாக்களை வேறுபடுத்திக் காட்டுகிறார். "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரெயர் 11:40)

இவ்வாறு, இந்த மூன்று ஆவிக்குரிய வகுப்புகளும் மனுக்குலத்திற்கு முன்பாக தங்கள் வெகுமதியையும், சுதந்திரத்தையும் பெறுவதை நாம் காண்கிறோம். ஆனால் மீதியுள்ள மனுக்குலத்தின் விஷயத்தில், இது அவர்களின் "சகோதரர்களுக்கு" எதிரான அவர்களின் பெறுப்பை முடிப்பதில்லை. இந்தக் கருத்தை வலியுறுத்த, வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைவதற்கு சற்று முன்பு யோசுவாவரின் கருத்துக்களைக் கவனிக்கலாம். "பின்பு யோசுவா - ரூபனியரையும் காத்தியரையும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரையும் நோக்கி - கர்த்தருடைய தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள், உங்கள் தேவனாகிய கர்த்தர் இளைப்பாறப்பண்ணி, இந்த தேசத்தை உங்களுக்குக் கொடுத்தாரே. உங்கள் பெண்சாதிகளும் பிள்ளைகளும் மிருகஜீவன்களும், மோசே உங்களுக்கு யோர்தானுக்கு இப்புறத்திலே கொடுத்த தேசத்தில் இருக்கட்டும், உங்களிலுள்ள யூத்தவீரர் யாவரும் உங்கள் சகோதரருக்கு முன்பாக அணியணியாய்க் கடந்துபோய், கர்த்தர் உங்களைப்போல உங்கள் சகோதரரையும் இளைப்பாறப்பண்ணி, அவர்களும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களுக்குக் கொடுக்கும் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுமட்டும், அவர்களுக்கு உதவிசெய்யக்கடவீர்கள், பின்பு, நீங்கள் கர்த்தருடைய தாசனாகிய மோசே உங்களுக்கு

யோர்தானுக்கு இப்புறத்தில் சூரியன் உதிக்கும் திசைக்கு நேராகக் கொடுத்த உங்கள் சுதந்தரமான தேசத்துக்குத் திரும்பி, அதைச் சுதந்தரித்துக்கொண்டிருப்பீர்களாக என்றான். அப்பொழுது அவர்கள் யோசுவாவுக்குப் பிரதியுத்தரமாக, நீர் எங்களுக்குக் கட்டளையிடுகிறதையெல்லாம் செய்வோம். நீர் எங்களை அனுப்பும் இடமெங்கும் போவோம்." (யோசுவா1:12/16)

இந்த கோத்திரத்தாருக்கு "இளைப்பாறுதல்" கொடுக்கப்பட்டதாக யோசுவா குறிப்பிடுவதை கவனிக்கவேண்டும். இந்த கோத்திரத்தார் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதாக மோசே உபாகமம் 3:20இல் கூறுகிறார். இப்போது விசுவாசத்தினாலும் மற்றும் திரைக்கு அப்பால் கிடைக்கபோகும் முழுமையான இளைப்பாறுதலைக் குறித்து பேசும் போது பவுல் இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார். அவர் யோசுவாவைக் கூட இங்கு குறிப்பிடுகிறார் ஸ "யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்குட்படுத்தியிருந்தால், பின்பு அவர் வேறொரு நாளைக் குறித்துச் சொல்லியிருக்கமாட்டாரே. ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." (எபிரெயர்4:8/11)

நமக்கான வல்லமையுள்ள பாடம் என்னவென்றால், உலகத்தின் முன் நம்முடைய சுதந்திரத்தைப் பெறும்போது, மனுக்குலம் அவர்களின் சுதந்திரத்தை பெறுவதற்கு உதவி செய்யக்கூடிய ஒரு உண்மையான கடமை நமக்கு உள்ளது ஸ.சிறு மந்தை, திரள் கூட்டம் மற்றும் முற்பிதாக்கள் அனைவருக்கும் பாவம் மற்றும் தீமையின் அனுமதியின் போது, ஏற்பட்ட அனைத்து பிரச்சனைகளிலும், அனுபவங்களை பெற்றிருப்பார்கள். இவர்கள் அனைவரும் இறுதியில் வெற்றி பெற்றவர்கள். மனுஷருடைய பலவீனங்களையும் தோல்விகளைப் புரிந்துகொள்வதற்கும், பரிசுத்தமான பெறும் பாதையில் அவர்களுக்கு உதவுவதற்கும் அவர்கள் தனித்துவமான தகுதி பெற்றவர்களாக இருப்பார்கள்.

மனாசே கோத்திரம்

மனாசே கோத்திரம் யோர்தான் ஆற்றின் கிழக்கு பகுதியிலும், மேற்கு பகுதியிலும் சுதந்திரம் பெற்றது. இது முற்பிதாக்களின் இரண்டு வேலைகளைக் குறிக்கிறது. இவர்கள் கிறிஸ்துவின் கண்ணுக்கு தெரியாத ஆவிக்குரிய இராஜ்யத்தின் புலப்படும் பிரதிநிதிகளாக இருப்பார்கள். சங்கீதம் 45:16இல் அவர்கள் "பூமியின் மீதெங்கும் பிரபுக்கள்...." என்று அழைக்கப்படுகிறார். தேவனுடைய இராஜ்யத்தில் பூமிக்குரிய பகுதியில் அவர்களுக்கு ஒரு காலும், ஆவிக்குரிய பகுதியில் ஒரு காலும் இருக்கும் என்று நாம் கூறலாம். இது மனாசேயின் நிலச் சுதந்தரத்தில் அழகாகக் காட்டப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள், அவர்களது இராஜ்யப் பணிகளைத் தொடர்ந்து, இறுதியில் ஆவிக்குரிய வெகுமதியைப் பெறலாம் என்று சகோதரர் ரசல் கூறுகிறார். (சுநிசவே 5182) அப்படியானால், யோர்தானின் கிழக்குப் பகுதியில் உள்ள ரூபன் மற்றும் காத் ஆகிய இருவருக்கும் மனாசேயின் நெருக்கம் இதற்கான ஒரு அழகான சித்திரதமாக உள்ளது.

நாம் விசுவாசித்தால்

வாழ்க்கையில் பல சோதனைகள் நிரம்பி ள்ளன
அவ்வொவ்வொன்றையும் அந்நாட்களிலே சந்தித்திட வேண்டும்
சோதனையின் காரணங்களை நாம் அறிவதில்லை - ஆனால் தேவன் நமக்குக் கரம் கொடுப்பார்.
நாம் விசுவாசித்தார்.

இச்சோதனைகள் நம்மை வலிமையாக்க வழி செய்யும்.
நன்மை தீமை பிரித்தாள உதவும் அவருடைய வழிகாட்டுதலை நாம் பின்பற்றும்போது - நமக்கோர்
வெகுமதி உண்டு பரலோகத்தில். நாம் விசுவசித்தால்

சோதனைகள் வரும்போது முழந்தாளிடுங்கள்
உங்கள் வேண்டுதல் அனைத்திற்கும் அவர் செவி சாய்த்திடுவார்
உதவிக்கரம் நீட்டிடுவார். உங்களை துன்பத்திலிருந்து விடுவிப்பார். நீங்கள் விசுவாசித்தால்.



# If We Believe

There are many trials along life's way
Each to be met, each in its day.
What reasons there are, we cannot perceive,
We know God will help us, if we believe.

These tests are designed to help make us strong,
To help make decisions between right and wrong.
If we follow His guidance, we will receive
A reward in heaven, if we believe.

So when trials come, fall on your knees,
You know He will listen to all of your pleas
And help will come, help to relieve
Your troubled heart, if you believe.

—C. Baxter